
www.padippakam.com

# புதிய கலாச்சாரம்

ஜனவரி –2002
மகஇக மாத இதழ்
ரூ 5.00



## அமெரிக்காதான் நீதிபதி
## அடிமைக்கு எதற்கடா தேசவெறி ?



# போர் வெறியை நிறுத்து !

படிப்பகம்

www.padippakam.com

✱ அமெரிக்க பயங்கரவாதம் பற்றிய சிறப்பிதழ் பயனுள்ள முறையில் இருந்தது. இந்த இதழ் ஒரு மாதத்திற்கு முன் - அமெரிக்காவின் ஆப்கான் ஆக்கிரமிப்புப் போர் ஆரம்பித்த போதே - வெளிவந்திருந்தால் மக்களிடையே அமெரிக்காவின் மேலாதிக்க வெறியையும் - முசுலீம் தீவிர வாத அமைப்புகளின் பொய் வேடத்தையும் அம்பலப்படுத்த எங்களுக்கு பேருதவியாக இருந்திருக்கும். அடுத்து அமெரிக்காவால் வளர்க்கப்பட்ட பின்லேடன் அமெரிக்காவின் எதிரியாக மாறிய வரலாற்றையும் அதன் சூழ்நிலைகளையும் விளக்கியிருந்தால் மேலும் சிறப்பாக இருந்திருக்குமென்று கருதுகிறேன்.

**- பெ. ஜெகந்நாதன், புக்குளம், கோவை மாவட்டம்.**

✱ **இந்தியா டுடே** போன்ற அமெரிக்க அடிமைப்புத்தி பத்திரிகைகளின் அமெரிக்க ஆதரவுக் கருத்து விபச்சாரத்தை ஆதாரபூர்வமாக முறியடித்தது இந்தச் சிறப்பிதழ். இணையத்தில் வெளியிட்ட பு.க. கட்டுரைக்கான பதில்களைப் படித்த போது, உலகெங்கும் உள்ள அமெரிக்க எதிர்ப்புணர்வு நிச்சயம் ஒருநாள் அமெரிக்க மேலாதிக்க பயங்கரவாதத்தை வீழ்த்தும் என்பது தெளிவானது. மக்களிடம் அமெரிக்க பயங்கரவாதத்தை அம்பலப்படுத்தி பிரச்சாரம் செய்வதற்கு இவ்விதழ் தகவல் களஞ்சியமாகவும், கருத்து ஆயுதமாகவும் இருக்கும். தொடரட்டும் புதிய கலாச்சாரத்தின் புரட்சிப் பணி.

**- வாசகத் தோழர்கள், திருநெல்வேலி.**

✱ அமெரிக்க - ஆப்கான் போருக்கு, தகர்க்கப்பட்ட உலக வர்த்தக மையம் காரண மல்ல, அமெரிக்காவின் எண்ணெய் வர்த்தகம்தான் காரணம் என்று கூறி, போரின் பொருளாதாரப் பின்னணியை புரிய வைத்தது ஆப்கான் - ம.ஆசியா - எண்ணெய் - இசுலாமியத் தீவிரவாதம் என்ற கட்டுரை.

சி.ஐ.ஏ.வின் சித்திரவதைகள் படித்ததும் உறையச் செய்தன. ஷிண்ட்லர்ஸ் திரைப்படமும், நாஜி ஹிட்லரின் யூதப் படுகொலைகள் பற்றிய நூல்களும் கொடூரமான கொலைகள் என்றாலே நாஜிக்கள்தான் என்ற கருத்தை எனக்குள் ஏற்படுத்தியிருந்தன. சி.ஐ.ஏ. அதிகாரி ஸ்டாக்வெல்-இன் பேட்டியைப் படித்ததும் நாஜி கொடுங்கோலர்களுக்கு சி.ஐ.ஏ. கொலைப்படை சற்றும் சளைத்ததல்ல என்ற விசயம் புரிந்தது.

சவுதியின் ஷேக்குகளும், பாக்கிஸ்தான் ஜெனரல்களும் தமது வர்க்க நலன்களுக்காக அமெரிக்காவுடன் அணி சேர்ந்துள்ள நிலையில், அந்நாடுகளின்

# வாசகர் கடிதம்




தொழிலாளி வர்க்கம் அமெரிக்காவின் மேலாதிக்கத்தை முறியடிக்க மதத்தைத் துறந்து, வர்க்க ரீதியில் திரண்டு பாட்டாளி வர்க்க சர்வதேசியத்தை உயர்த்திப் பிடிப்பதே ஒரே வழி என்பதை ''இசுலாமிய சர்வ தேசியம் ஒரு மாயமான்'' கட்டுரை உணர்த்தியது.

**- சுரேஷ், திருச்சி.**

✱ செப்டம்பர் 11 சம்பவத்திற்குப் பிறகு உங்கள் இதழை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தேன். இப்போதுதான் வந்து சேர்ந்திருக்கிறது. மிகுந்த மகிழ்ச்சியடைகிறேன். அந்த தாக்குதல் பற்றியும் அதன் பின்னணியில் உள்ள அமெரிக்க அரசியலையும் வேறு எங்கே நான் தெரிந்து கொள்ள முடியும்!

**- அருள் சின்னையா, ஸ்விட்சர்லாந்து, மின்னஞ்சல் மூலம்.**

✱ 'வாஞ்சிநாதன்' திரைப்படத்தை பார்த்திருக்கிறேன். அதில் விஜயகாந்த் போலீசு அதிகாரி. படத்தில் அவர் தீவிரவாதிகளைத் திசைதிருப்புவதற்காக இராணுவத் தளத்தையே தாக்குவதாக நாடகமாடுவார். இப்போது ஜார்ஜ் பெர்னாண்டஸ் விஜயகாந்தின் வேடத்தை ஏற்றுவிட்டார். எதிர்க்கட்சிகள் ஒரு வாரமாக பாராளுமன்றத்தை கார்கில் ஊழல் காரணமாக முடக்கியிருந்ததால், பெர்னாண்டஸ் திசை திருப்புகிறார். பொடோ சட்டத்தை எதிர்க்கட்சிகளும், பத்திரிகைகளும் கேள்வி கேட்கின்றன. எனவே மத்திய அரசே சமீபத்திய பாராளுமன்றத் தாக்குதல் நாடகத்தை போதிய ஒத்திகையின்றி நிறைவேற்றியிருக்கிறது.

**- தமிழரசன் அருள், மின்னஞ்சல் மூலம்**

✱ இணையத் தளத்திலும் உங்கள் இ ழிலும் நீங்கள் பிரசுரித்துள்ள கட்டுரையி கருத்துடன் நான் வேறுபடுகிறேன்.

'அமெரிக்க அரசின் கண்ணோட்ட தையும் அமெரிக்க மக்களின் கண்ணோ டத்தையும் ஒன்றாக்க முடியாது. ஆப்கா மீது போர் தொடுப்பதற்கு எதிரா செப்.12-ம் தேதியே எதிர்ப்பு கிளம்பி யதும் அங்கேதான்...

இந்தியாவைப் பற்றியும் நைஜீ யாவைப் பற்றியும் தெரிந்து கொள்ளாம ருப்பதற்குக் காரணம் அமெரிக்கர்களி ஆணவம் என்கிறீர்கள். துனீசியாவையு திமோரையும் நம்மில் எத்தனை பேருக்கு தெரியும்? இந்த அறியாமைக்குக் காரண ஆணவமல்ல. அரசு சொல்லிக் கொடுக்கு வரலாறு என்பது இதுதான். எனவே புற லைதான் காரணம். அகநிலையி (மக்களின்) எதிர்வினையைப் பொறுத் வரை நம் நாட்டைவிட அமெரிக்க தேவலாம்....

அமெரிக்காவையும் அமெரிக்கர் ளையும் ஒரே நிலையில் வைத்துப் பார்க்க தீர்கள்.

**- கோபால், மின்னஞ்சல் மூலம்**

**குறிப்பு:**

வாசகர் கருதுவது போன்ற பொருளி அக்கட்டுரை எழுதப்படவில்லை என்பதை சென்ற இதழில் பிரசுரிக்கப்பட்ட அமெரிக் வாசகர்களின் கடிதங்களே உணர்த்துகி றன.

அடுத்து பாசிசம், மதவெறி, சா வெறி, தேசவெறி ஆகியவற்றுக்கு 'பலிய கும்' மக்களை வெறும் பலிகடாக்களாக ம டுமே கருதி அனுதாபத்துடன் பார்க்க மு யாது. அவர்களது தவறை இடித்துரைக் வும் வேண்டும். இந்துவெறிக்கு பலியா 'அப்பாவி' இந்துக்களுக்கும், அமெரிக் ஏகாதிபத்திய 'திமிருக்குப் பலியான அப்பாவி அமெரிக்கர்களுக்கும், இன்னு சகலவிதமான 'அப்பாவிகளுக்கும்' இ பொருந்தும்.

**— ஆசிரியர் கு**

## அறிவிப்பு

*செப்டம்பர் 2001 இதழில் ஈழத்து எழுத்தாளர் சக்கரவர்த்தியின் சிறு கதை ஒன்றை வெளியிட்டு அவரது நூல் விமரிசனம் அடுத் இதழில் வெளியிடுவதாக அறிவி திருந்தோம். தவிர்க்க இயலாத கா ணங்களினால் அக்கட்டு அடுத்த மாதம் இடம் பெறும்.*

**- ஆசிரியர் குழு**


படிப்பகம்

www.padippakam.com

கலை இலக்கியம்
யாவும் மக்களுக்கே

• புதிய கலாச்சாரம்

• மக்கள் கலை இலக்கியக் கழக மாத இதழ்

• போர்: 19
• குரல்: 8
• ஜனவரி – 2002

உள்நாடு
தனி இதழ்: ரூ. 5.00
ஆண்டு சந்தா: ரூ. 60.00

வெளிநாடுகள்
(வான் அஞ்சலில்)
ஆண்டு சந்தா: US$ 9

மின் அஞ்சல் முகவரி:
puthiyakalacharam@hotmail.com

சந்தா,
படைப்புகள் அனுப்பவும்
தகவல்களுக்கும்:

இரா. சீனிவாசன்,
18, முல்லைநகர் வணிக வளாகம்,
2-வது நிழற்சாலை, அசோக் நகர்,
சென்னை - 600 083.

அலுவலக நேரம்:
காலை 10 முதல் 2 மணி வரை
ஞாயிறு விடுமுறை

# பார்ப்பன இந்து மதவெறி அடுத்த சுற்று ஆரம்பம்

டிசம்பர் 6-ஆம் நாள் அயோத்தி பாபரி மசூதி இந்துமதவெறிக் கூட்டத்தால் இடித்துத் தள்ளப்பட்ட கருப்பு நாள். குண்டு வெடிப்புகள் மூலம் இசுலாமியத் தீவிர வாதக் குழுக்களும், மக்கள் திரள் வழிகள் மூலம் பிற இசுலாமிய அமைப்புகளும், கம்யூ னிசப் புரட்சியாளர்களும் நாட்டு மக்களுக்கு இதை நினைவூட்டி வந்தனர். இதை எதிர்த்து மசூதி இடிப்பையே இந்து எழுச்சி தினமாக இந்து மதவெறியர்கள் கொண்டாடி வந்தனர். மசூதி இடிக்கப்பட்ட இடத்தில் இராமன் கோவில் கட்டுவதற்கான இரகசிய - சதி வேலைகளில் மூழ்கியிருந்ததால் இந்து எழுச்சி தினத்தை அடக்கமாகவே கொண்டாடி வந்தனர். இந்த வழக்கத்துக்கு மாறாக, இந்த விவகாரத்தில் இந்துமத வெறி யர்கள் இந்த ஆண்டு சூடு கிளப்பி இருக்கிறார்கள்.

வரவிருக்கும் உத்திரப்பிரதேசத் தேர்தல்களில் இந்து - முசுலீம் என்று ஓட்டு வங்கியை இரண்டாகப் பிளவுபடுத்தி அரசியல் ஆதாயம் தேடுவதுதான் நோக்கம் என்று பாரதீய ஜனதா கட்சியின் எதிர்த்தரப்பு ஓட்டுக் கட்சிகள் கூறுகின்றன. ஆனால், அதுமட்டும் இந்து மதவெறியர்களின் நோக்கமல்ல. அயோத்தியில் பாபரி மசூதி இடிக் கப்பட்ட இடத்தில் இராமன் கோவிலைக் கட்டுவதற்காக இந்து மதவெறியர்கள் குறித்த காலக்கெடு நெருங்குகிறது. இராமன் கோவிலைக் கட்டுவதற்கான கற்தூண்கள், சிற்ப வேலைகள் அனைத்தும் முடிந்துவிட்டன. வெளிமாநிலங்களில் இருந்து அவை அயோத்திக்குக் கொண்டு வரும் வேலை மட்டுமே எஞ்சி இருக்கிறது.

''வரும் மார்ச்சு - 12-ந் தேதிக்குப் பிறகு, தர்ம சன்சாத் என்ற இந்துமதச் சாமியார்கள், மடாதிபதிகளின் மாநாடு தீர்மானிக்கும் ஒரு நாளில் இராமன் கோவில் கட்டும் பணி துவங்கி சில வாரங்களில் முடிக்கப்படும்; எநதச் சக்தியாலும் அதைத் தடுக்க முடியாது'' என்று விசுவ இந்து பரிசத்தின் நிர்வாகிகள் பேசி வருகின்றனர். இந்துமத வெறியர்களி லேயே அத்வானி, வாஜ்பாயி போன்று ஆட்சியிலுள்ளவர்களும், அதன் பின்னணியில் உள்ள ஆர்.எஸ்.எஸ்., விசுவ இந்து பரிசத், பஜ்ரங் தள் தலைவர்களும் தந்திரமாகவும், திமிரோடும் மாறி மாறிப் பேசி வருகின்றனர். பாபரி மசூதி இடிப்புக்கு முன்பு அவர்கள் கையாண்ட உத்தியையே இப்போதும் கையாளுகின்றனர்.

''அயோத்தியில் தற்போதுள்ள கட்டமைப்பை - தற்காலிக இராமன் கோவிலை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி எவ்வித மாறுதலும் இல்லாமல் அப்படியே பாதுகாப்போம். தற்போதுள்ள நிலையில் எந்த மாறுதலும் செய்வதற்கு எவரையும் அனுமதிக்க மாட்டோம்'' என்று நாடாளுமன்றத்துக்கு அத்வானி வாக்குறுதி அளிக்கிறார். ''மார்ச் 12-ந் தேதிக்குள், இராமன் கோவில் கட்டுவதற்கான தடைகளை அகற்றுவோம்'' என்கிறார் வாஜ்பாயி. ''வாஜ்பாயியின் வாக்குறுதியை நம்புகிறோம்'' என்கிறார் ஒரு விசுவ இந்து பரிசத் தலைவர். ''வாஜ்பாயி தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணி அரசு நீடிப்பது பற்றி எங்களுக்கு அக்கறை இல்லை. முன்பு நடந்ததைப் போன்ற வன்முறை விளைவுகளையும் எதிர்கொள்வோம்'' என்று திமிரோடு பேசுகிறார் இன்னொரு தலைவர்.

இராமன் கோவிலைக் கட்டுவதற்கு என்று பல இலட்சம் கரசேவகர்கள் அயோத் தியில் திரளும்போது, முன்பு உ.பி. முதல்வர் கல்யாண் சிங் செய்ததைப் போல அரசு பலத்தை அவர்கள் மீது ஏவ மறுத்து, இராமன் கோவிலைக் கட்டுவதற்கு அனும திப்பார்கள்; கட்டிடப் பணி பெருமளவு நடக்கும்போது நடந்தவற்றுக்குத் தார்மீகப் பொறுப்பேற்று பதவி விலகி விடுவார்கள். அரசியல் உறுதியற்ற நிலையையும் குழப் பத்தையும் பயன்படுத்தி கொண்டு நாடு முழுவதும் மதவெறி இரத்தக் களறியைக் கட்ட விழ்த்துவிட்டு, கரசேவகர்கள் என்கிற பெயரில் பாசிசக் குண்டர்களை அரணாக நிறுத்தி இராமன் கோவில் கட்டுமானப் பணியைச் செய்து முடிப்பதுதான் இந்துவெறியர்களின் திட்டம்.

இந்தத் திட்டத்திற்கு வெள்ளோட்டம் பார்ப்பதைப் போல, அயோத்தியிலுள்ள தற்காலிக இராமன் கோவில் வளாகத்துக்குள் தடையை மீறி விசுவ இந்து பரிசத் தலை வர்கள் அசோக் சிங்காலும், தீட்சித்தும் நுழைந்து பூசை செய்துள்ளனர். எதிர்க் கட்சிகள் கேள்வி எழுப்பிய பிறகு ஒரு கண்துடைப்பு வழக்கு போடப்பட்டுள்ளது. இது மத வெறியர்களுக்கு மேலும் தெம்பூட்டுவதாக அமைந்துவிட்டது. ''கோவில் கட்டுவதற்கு அரசின் அனுமதி தேவையில்லை. அவர்கள் எது வேண்டுமானாலும் செய்து கொள்ளட்டும். எங்கள் திட்டத்தில் மாற்றம் இல்லை. இலட்சக்கணக்கான

படிப்பகம்

www.padippakam.com

இராம பக்தர்கள் கோவில் வளாகத்தில் திரண்டு, தங்கள் விருப்பம் போல எதையும் செய்வதை எந்த அரசாங்கமும் தடுக்க முடியாது'' என்று திமிரோடு கொக்கரிக்கின்றனர் வி.இ.ப. தலைவர்கள்.

கோவில் கட்டுமானப் பணிக்கு ஆள்திரட்டும் பணியை இந்து மதவெறியர்கள் துவக்கியும் விட்டார்கள். மசூதியை இடிப்பதற்கு முன்பு இரதயாத்திரைகள், யாகம் - வேள்விகள் - செங்கல் பூசைகள் போன்றவை நடத்தப்பட்டதைப் போல இப்போதும் வடநாடு முழுவதும் நடத்தப்படுகிறது. வீட்டுக்கு ஒரு செங்கல் வழங்கியதற்குப் பதிலாக, கொலை ஆயுதமாகப் பயன்படுத்தும் வகையிலான கூரான ஒன்றரை அடி திரிசூலங்கள் ஒவ்வொருவருக்கும் வழங்கப் படுகின்றன. வரும் பிப்ரவரி 16-ந் தேதி 20,000 விசுவ இந்து பரிசத் குண்டர்கள் அயோத்தியில் கூடி 100 நாட்களுக்குத் தொடர் மந்திரங்கள் ஓதி, யாகங்கள், பூசைகள் போன்ற வழிபாடுகள் நடத்தவும் திட்டமிட்டுள்ளனர். இதை அப்படியே விரிவுபடுத்தி கோவில் கட்டும் வேலை துவங்கும். இத்தகைய ஆத்திரமூட்டும் நடவடிக்கைகளைக் கண்டு கொதித்தெழும் இசுலாமிய அமைப்புகள், அரசு நடவடிக்கை எடுக்காவிட்டால், தாமே நேரடியாகத் தலையீடு செய்யப் போவதாக அறிவித்துள்ளன. முன்பு அத்வானியின் இரத யாத்திரை சென்ற இடமெல்லாம் மதக் கலவரங்கள் மூண்டதைப் போல, இப்போது கட்டுமான வேலைக்குச் செதுக்கப்பட்ட கற்தூண்களும், சிற்பங்களும் அயோத்திக்கு எடுத்துச் செல்லப்படும் சாலைகள் மனித இரத்தத்தால் குடமுழுக்குச் செய்வதற்குத் தயாராகின்றன.

அடாவடி, வன்முறை, அராஜக வழிகளில் இராமன் கோவிலைக் கட்டும் இந்து வெறியர்களை மதச் சார்பின்மை பேசும் ஓட்டுக் கட்சிகளும், இசுலாமிய அமைப்புகளும் எவ்வாறு எதிர் கொள்ளப் போகின்றன? பாரதீய ஜனதாவுடன் கூட்டுச் சேர்ந்துள்ள கருணாநிதி, இராமதாசு, வைகோ, மமதா கூட்டணியில் நீடிப்பதற்குக் குந்தகம் ஏற்படாதவாறு நாடகமாடுவார்கள். எதிரணி ஓட்டுக் கட்சிகள், அறவழி ஆர்ப்பாட்டங்கள், கண்டன அறிக்கைகள், நாடாளுமன்றக் கூச்சல்களுக்கு மேல் எதுவும் செய்ய மாட்டா. இசுலாமியச் சமுதாயம் முழுவதும் கொதிப்புணர்வு இருந்தாலும், அதைப் பெருந்திரள் இயக்கமாக மாற்றக்கூடிய இசுலாமிய அமைப்புகள் கிடையாது. இசுலாமிய சமூக - மதத் தலைவர்களின் சட்டவாத எதிர்ப்புகள் சாதாரண சலசலப்பைக் கூட ஏற்படுத்தாது. இசுலாமியத் தீவிரவாதக் குழுக்களின் குண்டு வைப்பு போன்ற பயங்கரவாதச் செயல்கள், இசுலாமியச் சமுதாயத்தைத் தனிமைப் படுத்தித் தாக்குதல் இலக்காக்கி வைப்பதற்குத்தான் பயன்படும். இத்தகு சந்தர்ப்பம் - வாய்ப்புக்காகக் காத்திருக்கும் இந்துமதவெறியர்களின் அரசாங்கம் ஏற்கனவே பயங்கரவாத பீதி கிளப்பி ''பொடோ'' சட்டம் என்கிற கொடிய சதிகார, பாசிச வஞ்சக வலையை விரித்து வைத்திருக்கிறது.

இந்து மதவெறியர்கள் அரசியல் ஆதாயத்திற்காக மதத்தைப் பயன்படுத்திக் கொள்வதை, இந்துமத நம்பிக்கையாளர்களில் மிக மிகப் பெரும்பாலான மக்கள் வெறுக்கின்றனர். அதேபோல இசுலாமிய மத பயங்கரவாதத்தை இசுலாமிய மத நம்பிக்கையாளர்களிலும் பெரும்பாலான மக்கள் ஏற்பதில்லை. இம்மக்களை உண்மையான மதச்சார்பற்ற சக்திகளின் தலைமையில் அணி திரட்ட வேண்டும். மதவெறி அமைப்புகளின் செயல்பாடுகள் அனைத்தையும் மக்களே திரண்டு தாக்குதல் நடத்தித் தடுத்திட வேண்டும். குறிப்பாக, கரசேவைக்கு நிதி, ஆள் திரட்டுவதை ஒவ்வொரு பகுதியிலும் முறியடிக்க வேண்டும். இந்து மதவெறியர்கள் அயோத்தியில் குவிக்கப்படுவதற்கு எதிராகச் சாலை மறியல்கள், தடைகளை ஏற்படுத்தி ஆயுதங்களைப் பறித்து விரட்ட வேண்டும். எந்த ஓட்டுக் கட்சியும் அரசும் இதைச் செய்யும் என்று எதிர்பார்க்க முடியாது.

●

## அமெரிக்காதான் நீதிபதி அடிமைக்கு எதற்கடா தேசவெறி?

# போர் வெறியை நிறுத்து!

*''நாடு மிக இக்கட்டான சூழ்நிலையைக் கடந்து வருகிறது... நாட்டுக்காக வாழ்வது, தேவைப்பட்டால் அதற்காக உயிர் துறப்பதே வாழ்வின் அர்த்தமாகும்.''*

**- 78-ஆவது பிறந்த நாளில் வாஜ்பாயி ஆவேசம்'' - தினமணி 26.12.2001.**

*''துப்பாக்கிச் சத்தத்தைச் சில நொடிகள் கேட்டேன். அதிர்ச்சியில் சில கணங்கள் உறைந்து போனேன். பிறகுதான் என் மூளையே வேலை செய்தது. ஓடிப்போய் ஒரு தூணுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டேன்.''*

**- ஹரின் பாதக், பாதுகாப்புத் துறை இணை அமைச்சர் - ஸ்டார் நியூஸ் பேட்டியில் டிசம்பர் - 13 தாக்குதல் பற்றிக் கூறியது.**

துப்பாக்கி துளைக்காத கூண்டிற்குள் நின்று கொண்டு நாட்டுக்காக உயிர்த் தியாகம் செய்யுமாறு நம்மைக் கோருகிறார் பிரதமர். அவரது அமைச்சரோ தூணுக்குப் பின்னால் ஒளிந்து கொண்டு பாகிஸ்தானுக்கு எதிராகப் போர் முழக்கம் செய்கிறார்.

2500 கிலோ மீட்டர் தூரம் சென்று தாக்கக்கூடிய அக்னி ஏவுகணைகளைத் தயார் நிலையில் நிறுத்தியிருக்கிறது இந்திய இராணுவம். அதே அளவு தூரம் வந்து தாக்கும் திறன் படைத்த ஷாகீன்-II ஏவுகணைகளைத் தயார் நிலையில் வைத்திருக்கிறது பாகிஸ்தான்.

இராணுவத்தினரின் விடுப்புகள் ரத்து செய்யப்பட்டு விட்டன. இராணுவ தின அணி வகுப்பும் ரத்து செய்யப்பட்டு விட்டது. குஜராத், இராஜஸ்தான், பஞ்சாப், காசுமீர் எல்லையோரம் இராணுவம் குவிக்கப்படுகிறது.

டாங்குகளும், கவச வண்டிகளும், இராணுவ டிரக்குகளும் எல்லையை நோக்கிச் செல்கின்றன. எல்லைப்புறத்து மக்களோ ஊரைக் காலி செய்துவிட்டு இராணுவத்திற்கு எதிர்த் திசையில் நாட்டின் உட்புறம் நோக்கி ஆயிரக்கணக்கில் வருகிறார்கள்.

கார்கில் போரின் செலவு சுமார் 10,000 கோடி என்று கணக்குச் சொன்னார் நிதியமைச்சர். தற்போது நாடு கடும் நிதி நெருக்கடியில் இருந்தபோதிலும் ''தேசத்தின் பாதுகாப்பு என்று வந்துவிட்டால் செலவு செய்யத் தயங்கமாட்டோம்'' என்று கஜானாவைத் திறந்து வைத்துவிட்டார்.

தேசமே போர்ப் பிரகடனத்தை எதிர்பார்த்துக் காத்திருக்கையில், ''எங்கப்பன் குதிருக்குள் இல்லை'' என்ற கதையாக பிப்ரவரி - 13 முதல் உ.பி. உள்ளிட்ட நான்கு மாநிலங்களில் சட்டமன்றத் தேர்தலை அறிவித்திருக்கிறது தேர்தல் ஆணையம்.



படிப்பகம்

www.padippakam.com

உத்திரப் பிரதேசத்தின் வாக்குப் பெட்டிகளை இந்து வாக்குகளால் நிரப்பவும், கார்கில் போரின் ஊழல் சவப்பெட்டிகளை சிப்பாய்களைக் கொண்டு நிரப்பவும் பா.ஜ. அரசுக்கு இப்போது போர் தேவைப்படுகிறது. பொருளாதாரத் தாராளமயம், விவசாயச் சீர்குலைவு, பெருகும் பட்டினிச் சாவு, வேலையின்மை ஆகியவற்றாலும் உ.பி. பாரதிய ஜனதா அரசின் கிரிமினல் ஆட்சியாலும் ஆத்திரமடைந்திருக்கும் மக்களைத் திசைதிருப்பப் போர் தேவைப்படுகிறது. இராமன் கோயிலைக் காட்டி மீண்டும் ஓட்டு வாங்க முடியுமா என்ற ஐயம் ஆர்.எஸ்.எஸ். கும்பலுக்கே தோன்றிவிட்டதனால், மதவெறிக்குப் பதிலியாக தேசவெறியைத் தூண்ட போர் தேவைப்படுகிறது.

இராமஜென்மப் பூமியின் 'புனிதத்தை'க் காட்டிப் பாராளுமன்றத்தைப் பிடித்த பாரதிய ஜனதா, இப்போது 'புனிதமான', பாராளுமன்றம் தாக்கப்பட்டதைக் காட்டிச் சட்டமன்ற நாற்காலிகளைப் பிடிக்க முயல்கிறது. ஒரு பூசாரியின் பித்தலாட்டத்தை இன்னொரு பூசாரியால் அம்பலப்படுத்த முடியாது என்பதைப்போல, ஏற்கனவே தேசவெறியைக் கைமுதலாகக் கொண்டு ஆட்சி நடத்திய காங்கிரசு, இப்போது அதே துருப்புச் சீட்டைப் பயன்படுத்தும் பாரதிய ஜனதாவை அம்பலப்படுத்த முடியாமல் தடுமாறுகிறது.

''பயங்கரவாதத்தின் பிடியிலிருந்து நாட்டைக் காப்பாற்ற நாங்கள் அனைத்தையும் செய்யத் தயாராக இருக்கிறோம். ஆனால், இதை உத்திரப் பிரதேசத்தின் தேர்தல் ஆதாயத்திற்குப் பயன்படுத்துவதை அனுமதிக்க முடியாது'' என்று முணகுகிறது 'மார்க்சிஸ்டு' கட்சி. போரின் அவசியத்தைக் கேள்விக்குள்ளாக்குவதற்குப் பதிலாக, ''இன்னும் ஏன் போரைத் தொடங்கவில்லையா?'' என்று பாரதிய ஜனதாவுக்குக் கிடுக்கிப்பிடி போட்டுத் தன்னை அதிதீவிர தேசபக்தனாகக் காட்டிக் கொள்கிறார் முலாயம் சிங் யாதவ்.

தேர்தல் நெருங்க நெருங்க, போரின் அரசியல் ஆதாயத்தை அறுவடை செய்வதற்கான போட்டி அதிகமாகும். பாகிஸ்தான் எதிர்ப்பு தேசவெறியை முசுலீம் எதிர்ப்பு இந்து வெறியாக மாற்றுவதற்கு எல்லாத் தந்திரங்களையும் பாரதிய ஜனதா செய்யும். பாபர் மசூதிப் பிரச்சினையில் இந்து மதவெறியை எதிர்கொள்வதற்கே தடுமாறிய எதிர்க்கட்சிகளால் இந்தத் தேசவெறிக்கு முகம் கொடுக்கவும் முடியாது. இதனால் பாரதிய ஜனதா அடையக்கூடிய அரசியல் ஆதாயத்தைச் சகித்துக் கொள்ளவும் முடியாது. இந்தப் போரின் பின்னணியில் உள்ள உண்மைகள் ஒருவேளை அப்போது கசியத் தொடங்கலாம்.


***

இந்தப் போருக்குக் காரணம் என்று கூறப்படும் டிசம்பர்-13 பாராளுமன்றத் தாக்குதல் பற்றி மூன்று விதமான கருத்துக்கள் கூறப்படுகின்றன.

பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ.-இன் திட்டத்தின்படி, லஷ்கர் - இ -தொய்பா, ஜெய்ஷ்-இ-முகம்மது ஆகிய அமைப்புகளின் தற்கொலைப் படையினர் நடத்திய திட்டமிட்ட தாக்குதல்தான் இது என்கிறது இந்திய அரசு. இதற்கான போதிய ஆதாரங்கள் தன்னிடம் உள்ளதாகவும், அவற்றை அமெரிக்கா, ஜெர்மனி, பிரான்சு, பிரிட்டன் ஆகிய நாடுகளிடம் தந்திருப்பதாகவும் கூறுகிறது. 'ஆதாரத்தைக் காட்டினால் நடவடிக்கை எடுக்கிறோம்' என்று பாக். அரசு கூறுவதை இந்திய அரசு நிராகரிக்கிறது. ''குற்றவாளியே பாகிஸ்தான் அரசுதான் எனும்போது அவர்களுடன் ஆதாரத்தைப் பகிர்ந்து கொள்ள முடியாது. இரு அமைப்புகளின் தலைவர்களையும் இந்தியாவிடம் ஒப்படைக்க வேண்டும்; பாகிஸ்தானிலுள்ள பயங்கரவாதப் பயிற்சி முகாம்களைக் கலைக்க வேண்டும். இதைச் செய்ய மறுத்தால் பதிலடி கொடுப்பதைத் தவிர வேறு வழியில்லை'' என்கிறது பா.ஜ.க. அரசு.

●○●

**உத்திரப் பிரதேசத்தின் வாக்குப் பெட்டிகளை இந்து வாக்குகளால் நிரப்பவும், கார்கில் போரின் ஊழல் சவப்பெட்டிகளை சிப்பாய்களைக் கொண்டு நிரப்பவும் பா.ஜ. அரசுக்கு இப்போது போர் தேவைப்படுகிறது.**



இந்திய அரசு கொடுத்த ஆதாரங்களைப் பெற்றுக் கொண்ட அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் அந்த ஆதாரங்களைப் பற்றிக் கருத்தேதும் கூறவில்லை. ஆனால், லஷ்கர் மற்றும் ஜெய்ஷ் ஆகிய அமைப்புகளைப் பயங்கரவாத அமைப்புகள் என்று அமெரிக்க அரசு அறிவித்துள்ளது. இவ்வமைப்புதான் இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளிலும் பயங்கரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதாகவும், இரண்டு நாடுகளுக்கும் இடையிலான உறவைச் சீர்குலைப்பதாகவும் கூறுவதன் மூலம் ''பாராளுமன்றத் தாக்குதல் - பாகிஸ்தானின் சதி'' என்ற இந்திய அரசின் குற்றச்சாட்டை மறைமுகமாக மறுத்து, தாக்குதலை அந்த அமைப்புகளின் சுயேச்சையான நடவடிக்கையாகச் சித்தரிக்கிறது அமெரிக்கா.

''தனது சொந்த அரசியல் நோக்கங்களுக்காக இந்திய அரசே திட்டமிட்டு நடத்திய நாடகம்தான் இந்தத் தாக்குதல்'' என்கின்றது பாகிஸ்தான். ஆதாரங்களை வெளியிட மறுப்பது, கூட்டு விசாரணைக்கு மறுப்பது போன்ற இந்திய அரசின் நடவடிக்கைகளே இதை நிரூபிப்பதாகக் கூறுகிறது பாக். அரசு.

போர் வேண்டுமா, வேண்டாமா என்று முடிவு செய்வதற்கு இந்த மூன்று விதமான கருத்துக்களில் எது உண்மை என்று கண்டுபிடிப்பது அவசியமானதல்ல.

பாகிஸ்தானிய உளவு அமைப்பே இதை இயக்கியிருக்கக்கூடும். அமெரிக்க நலனுக்காக தாலிபானை ஊட்டி வளர்த்து, இப்போது அமெரிக்காவின் ஆணைப்படி அதனைக் கைகழுவ வேண்டிய நிலையிலும், பெயரளவிலான சுயேச்சைத் தன்மையையும் இழந்து அமெரிக்காவின் உத்தரவுகள் அனைத்திற்கும் மறுப்பின்றி அடிபணிய வேண்டிய நிலையிலும் இருக்கிறது முஷாரப் அரசு. இதன் காரணமாக உள்நாட்டில் தோன்றிவரும் அதிருப்திக்கு வடிகாலாகவும், இசுலாமிய தீவிரவாதிகளைச் சமாதானப்படுத்தும் ஒரு சலுகையாகவும் ஐ.எஸ்.ஐ. இதனைச் செய்திருக்க வாய்ப்புண்டு.

பாக். அரசுக்குத் தெரியாமல் இசுலாமியத் தீவிரவாத அமைப்புகளே இதைச் செய்திருக்கவும் வாய்ப்புண்டு. தாலிபானின் வீழ்ச்சியும் உலக இசுலாமிய நாடுகளில் தோன்றிய


படிப்பகம்

www.padippakam.com

எதிர்ப்புகள் வடிந்துவிட்டதும், முஷாரப் அரசு திடீரெனத் தங்களைக் கைகழுவி விட்டதும் ஏற்படுத்திய ஆத்திரத்தில் இந்தியா - பாகிஸ்தான் பதட்ட நிலையை உருவாக்குவதன் மூலம் முஷாரப்பிற்கு ஒரு நெருக்கடியைத் தருவதற்கென்றே இவ்வமைப்புகள் இதைச் செய்திருக்கக் கூடும். அல்லது எவ்விதத் தொலைநோக்கான திட்டமுமின்றி பயங்கர்வாதிகளுக்கேயுரிய சாகச மனப்பான்மையிலும் இதைச் செய்திருக்கக் கூடும்.



இந்திய - பாக் எல்லைக் கிராமமொன்றிலிருந்து வெளியேறும் ஒரு குடும்பம்

இத்தாக்குதல் பா.ஜ.க. கும்பல் நடத்திய நாடமாகவோ, அல்லது உளவுத் தகவல் தெரிந்திருந்தும் வேண்டுமென்றே அனுமதித்த தாக்குதலாகவோ கூட இருக்கலாம். பொடோ சட்டத்தை ஆதரிக்கும்படி எதிர்க்கட்சிகளை நிர்பந்திக்கவும், கார்கில் ஆயுதபேரம் மற்றும் சவப்பெட்டி ஊழல் கிளப்பும் நாற்றத்தை அடக்கவும், உத்திரப் பிரதேசத்தில் தோல்வியைத் தடுக்கவும் இத்தகையதொரு நாடகம் பா.ஜ.க.வுக்குத் தேவைப்படுகிறது.

ஜெர்மன் பாராளுமன்றத்திற்குத் தீ வைத்துவிட்டு அதற்கு கம்யூனிஸ்டுகளைக் குற்றம் சாட்டிய ஹிட்லரைப் போன்றே சிந்திக்கக் கூடியவர்கள்தான் அவனுடைய வாரிசுகளான இந்து மத வெறி பாசிஸ்டுகள். பாபர் மசூதியை இடித்ததன் மூலம் ஆட்சியைக் கைப்பற்றிய கிரிமினல்கள், பாராளுமன்றத்தைத் தாக்குவதன் மூலம் ஆட்சியைத் தக்கவைத்துக் கொள்ள முயலமாட்டார்கள் என்று எப்படிக் கூறமுடியும்?

இந்த மூன்று வாய்ப்புகளில் எதுவொன்றின் காரணமாக இந்தத் தாக்குதல் நடந்திருந்தாலும் அதனால் உடனடி ஆதாயம் அடைபவை முஷாரப் அரசும் வாஜ்பாயி அரசும்தான். உள்நாட்டுப் பிரச்சினைகளிலிருந்து மக்களைத் திசைதிருப்பவும், தேசவெறியைத் தூண்டி விடவும் இரு அரசுகளுக்குமே இத்தாக்குதல் பயன்பட்டிருக்கிறது.

பாராளுமன்றத்தின் மீதான இந்தத் தாக்குதலை ஜனநாயகத்தின் மீதான தாக்குதலாகச் சித்தரிப்பதைப் போன்ற மோசடி வேறில்லை. தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற போர்வையில் கிரிமினல்களும், இலஞ்ச - ஊழல் பேர்வழிகளும், அந்நியக் கைக்கூலிகளும், சாதி - மதவெறியர்களும், மக்கள் விரோதிகளும், அதிகாரத் தரகர்களும் கூடியிருக்கும் மண்டபம்தான் பாராளுமன்றம். தாங்களே கூறிக் கொள்ளும் ஜனநாயகத்தை இவர்கள் உள்ளிருந்தே தகர்த்ததைக் காட்டிலும் பயங்கரமான முறையில் வெளியிலிருந்து யாராலும் அதனைத் தகர்த்துவிட முடியாது. பாராளுமன்றத்திற்குத் தெரியாமலேயே போடப்பட்ட காட் ஒப்பந்தம், 13 நாள் பிரதமர் வாஜ்பாயி போட்ட என்ரான் ஒப்பந்தம், தற்போதைய பொடோ அவசரச் சட்டம், எண்ணிறந்த முறைகள் அரங்கேறிய ஆட்சிக் கலைப்புகள்... என்று இவற்றைப் பட்டியலிட்டு மாளாது. இன்று பாராளுமன்றம் தாக்கப்பட்டவுடனே வேற்றுமைகளை மறந்து அனைத்துக் கட்சிகளும் ஒன்றுபட்டுவிட்டதாகக் கூறி புல்லரிக்கிறார் வாஜ்பாய். மக்கள் விரோத தாராளமயக் கொள்கைகள் அனைத்தும் இதே போன்ற சர்வகட்சி ஒற்றுமையுடன்தான் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப் பட்டிருக்கின்றன. எனவே மக்களின் ஜனநாயக உரிமைகள் மீது தாக்குதல் நடத்தும் எதிரிகளின் கோட்டையாகத்தான் பாராளுமன்றம் இருக்கிறது.

இதனை நாட்டின் இறையாண்மையின் மீது நடந்த தாக்குதலாகவோ, ஆக்கிரமிப்பாகவோ சித்தரிப்பது அதனினும் பெரிய கோமாளித்தனம். ஏற்கனவே உலக வர்த்தகக் கழகத்தின் ஆக்கிரமிப்பால் நாடே தீப்பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. அந்த ஆக்கிரமிப்புக்குச் சட்டபூர்வமான தகுதியை வழங்குவதையே தனது உரிமையாகவும், கடமையாகவும் கொண்ட மன்றம் இறையாண்மை என்ற சொல்லை உச்சரிக்கவும் தகுதியற்றது.

எனவே, தம் மீது திணிக்கப்படும் இந்தப் போரை இந்திய, பாகிஸ்தான் மக்கள் எதிர்க்க வேண்டும். தேசத்தின் பாதுகாப்பு என்று இவர்கள் எதைச் சித்தரிக்கிறார்களோ, எதற்காகப் போரைத் தொடங்குகிறார்களோ, அது மக்களின் பாதுகாப்பின்மையை அதிகரிக்கும். வரிச்சுமைக்கும் பட்டினிச் சாவிற்கும் மரணத்திற்கும் மக்களைத் தள்ளும். போர் தோற்றுவிக்கின்ற பொருளாதார நெருக்கடியே இன்னும் தீவிரமான மறுகாலனியாதிக்கத்திற்கான ஒரு முகாந்திரமாகி விடும்.

காஷ்மீர் மக்களின் சுயநிர்ணய உரிமையை மறுப்பது, தெற்காசியப் பிராந்திய மேலாதிக்கம் என்ற தனது கொள்கைகள் மூலம் இந்திய ஆளும் வர்க்கம் இந்தப் போருக்கான காரணத்தை உருவாக்கியிருக்கிறது. அமெரிக்க கைக்கூலித்தனம், உள்நாட்டில் இசுலாமிய சர்வாதிகாரம் என்ற தனது நலன்களுக்கான கொள்கைகள் மூலம் பாகிஸ்தானிய ஆளும் வர்க்கம் அம்மக்கள் மீது போரைத் திணிக்கிறது.

எந்தத் திட்டவட்டமான இலக்கையும் இந்தப் போர் எட்டப் போவதில்லை. தீவிரவாதிகளின் முகாம்களைத் தாக்கி அழிப்பதுதான் நோக்கமென்றால், அவர்கள் தம் முகாமை மாற்றிக் கொள்வார்கள் என்பது பாமரனுக்கும் புரியக்கூடிய உண்மை. பாகிஸ்தானை வென்று அடக்குவதுதான் போரின் நோக்கம் என்றால் அது கேலிக்குரியது. காஷ்மீரை வென்றெடுக்க முடியாத இந்திய அரசு வானமேறி வைகுந்தம் போகும் கதை அது. போர் தீவிரமடைந்தால் அது அணு ஆயுதப் பேரழிவாக மாறாது என்பதற்கான உத்திரவாதம் எதுவும் இல்லை.

இவை அனைத்தும் தெரிந்தேதான் பாரதிய ஜனதா கும்பல் போர்ச் சவடால் அடிக்கிறது. தெற்காசியாவில் காலூன்றியிருக்கும் அமெரிக்காவின் கவனத்தை ஈர்க்கவும், தனது பிராந்திய மேலாதிக்கத்திற்கு அமெரிக்காவின் ஆசியைப் பெறவும் முயல்கிறது. தனது உலக மேலாதிக்க நலன்களுக்கும், ஆப்கானில் தற்போது நடத்தி வரும் போரின் நலனுக்கும், தெற்காசிய ஆதிக்கத் திட்டத்திற்கும் உட்பட்டே அமெரிக்கா தனது காய்களை நகர்த்தும். அமெரிக்க அரசு தற்போது செய்திருக்கும் அறிவிப்புகள் இந்திய அரசை நோக்கி வீசப்பட்டுள்ள எலும்புத் துண்டுகள். இருந்தாலும் தனது குரைப்பை நாய் உடனே நிறுத்திவிடாது. உ.பி. தேர்தல் முடியும் வரை விட்டு விட்டுக் குறைத்துக் கொண்டுதானிருக்கும்- எசமானின் கவனத்தை ஈர்க்க, அப்படியே மக்களை மிரட்டி வைக்கவும்தான்.

● சூரியன்

●○●

**தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் என்ற போர்வையில் கிரிமினல்களும், இலஞ்ச - ஊழல் பேர்வழிகளும், அந்நியக் கைக்கூலிகளும், சாதி - மதவெறியர்களும், மக்கள் விரோதிகளும், அதிகாரத் தரகர்களும் கூடியிருக்கும் மண்டபம்தான் பாராளுமன்றம்.**



படிப்பகம்

www.padippakam.com

## அர்ஜென்டினா உணவுக் கலகம்:

# தீப்பொறிக்காகக் காத்திருக்கும் சருகுகள்!



பாராளுமன்றத்தின் கதவுகள் பூட்டப்பட்டு விட்டன; யாரும் உள்ளே நுழையவோ வெளியேறவோ முடியாது. சுற்றிலும் ராணுவம் பாதுகாப்புக்கு நின்றிருந்தது. இது டிசம்பர்-13, டில்லி பாராளுமன்றக் காட்சி அல்ல; டிசம்பர் 20-ம் தேதி அர்ஜென்டினாவின் தலைநகரம் போனஸ் அயர்ஸில் நடைபெற்ற மக்கள் எழுச்சி.

பாராளுமன்றத்தைச் சுற்றிலும் பல்லாயிரக்கணக்கில் மக்கள். பஞ்சைப் பராரிகள், நடுத்தர வர்க்கத்தினர், தொழிலாளிகள், கையில் சோற்றுப் பானையும் கரண்டியுமாகப் பெண்கள்; எந்தக் கட்சியையும் சாராத, எல்லாக் கட்சிகள் மீதும் நம்பிக்கை இழந்த உழைக்கும் மக்கள்.

அது ஒரு உள்நாட்டுப் போர். பணக்கார வர்க்கத்தின்மீது ஏழைகள் தொடுத்த வர்க்கப் போர். மெக்டொனால்டு உணவு விடுதிகள் சூறையாடப்பட்டன. வெளிநாட்டு வங்கிகள் அடித்து நொறுக்கப்பட்டன. போனஸ் அயர்ஸின் ஆடம்பரமான பல்பொருள் அங்காடிக்குள் நுழைந்து உணவுப் பொருட்களைப் பறித்தெடுத்த 45 வயது சேரிப் பெண் ''இப்போது போகிறேன், தெருக்காரர்களுடன் திரும்பி வருவேன்'' என்று எச்சரித்தாள். அவர்கள் கூட்டமாக மறுபடியும் வந்த போது 250 மூட்டை தானியங்களைக் கொடுத்து கையெடுத்துக் கும்பிட்டான் கடை முதலாளி.

''அர்ஜென்டினாவில் அராஜகம்'' என்று செய்தி வெளியிட்டன முதலாளித்துவப் பத்திரிகைகள். அராஜகம்தான்; அது உலகமயமாக்கலும், ஐ.எம்.எஃ.பும், அமெரிக்காவும் தோற்றுவித்த அராஜகம்.

1978இல் அர்ஜென்டினாவின் அந்நியக்கடன் 8 பில்லியன் டாலர் மட்டுமே. ஐ.எம்.எஃப் நுழைந்தவுடன் அது 1983இல் 43 பில்லியன் டாலராகவும் இன்று 135 பில்லியன் டாலராகவும் உயர்ந்துவிட்டது. கடனுக்கு வட்டிகூடக் கட்ட முடியாமல் திவாலாகிவிட்டது அந்நாட்டின் பொருளாதாரம். அர்ஜென்டினாவின் நாணயமான பெசோ மதிப்பில்லாத காகிதமாகிவிட்டது; எங்கும் வேலையின்மை, பஞ்சம் - அதன் விளைவுதான் உணவுக் கலகம்.

அமெரிக்கக் கைக்கூலியான நிதியமைச்சரின் வீட்டை நள்ளிரவில் ஆயிரக்கணக்கான மக்கள் முற்றுகையிட்டனர். பதவியை ராஜினாமா செய்துவிட்டு வெளிநாட்டுக்கு ஓட முயன்ற அந்தக் கிரிமினலுக்கு, நீதிமன்றம் தடையுத்தரவு பிறப்பித்தது.

அதிபர் மாளிகையைச் சுற்றிலும் முற்றுகை. நகரின் மையப் பகுதியான பிளாசா டி மேயோவில் நாட்கணக்கில் முற்றுகை. தடையரண்களை மீறிய மக்கள் மீது போலீசின் குதிரைப்படை ஏவிவிடப்பட்டது. தனது முன் பாதங்களை குதிரையின் குளம்புகள் பிய்த்தெடுத்த பின்னரும் ஆவேசமாகக் குரலெழுப்பிக் கொண்டிருந்தாள் ஒரு பெண். 27 பேர் சுட்டுத் தள்ளப்பட்ட பின்னரும் யாரும் பின்வாங்குவதாகத் தெரியவில்லை.

தன்னை நோக்கி அச்சுறுத்தும் வகையில் நெருங்கிக் கொண்டிருந்த போலீசு வண்டிக்குக் குறுக்கே தனது சைக்கிளை நிறுத்திவிட்டு ''வா... வா... சுடுடா என்னை'' என்று வெறிகொண்டவனைப் போலக் கத்தினான் ஒரு இளைஞன்.

''ஏய்... வா... இந்தப்பக்கம் வந்துவிடு. அவர்கள் எங்களுக்கு மட்டுமல்ல, உனக்கும் உன் குடும்பத்துக்கும்கூட எதிரிகள்தான், எங்களோடு சேர்ந்துவிடு'' என்று ஒரு இளம் போலீசு அதிகாரியை நோக்கிக் கத்திக் கொண்டிருந்தாள் ஒரு அலுவலக குமாஸ்தா. தலையைக் குனிந்து கொண்டு காதில் விழாதது போல நடித்துக் கொண்டிருந்தான் அந்த அதிகாரி. ''உங்கள் மிரட்டலுக்குப் பயந்த காலம் போய்விட்டது'' என்று போலீசைத் தள்ளிக் கொண்டு முன்னேறினாள் ஒரு நடுத்தர வயதுப் பெண்.

''மக்களை சாந்தப்படுத்த எல்லாக் கட்சிகளும் சேர்ந்து கூட்டாட்சி அமைக்கலாம்'' என்று அதிபர் பெர்னாண்டோ டி லா ருவா கோரிக்கை விடுத்தார். எதிர்க்கட்சிகள் பொறியில் சிக்க மறுத்தனர். நாடாளுமன்றத்திற்கு வெளியே எல்லா ஓட்டுப் பொறுக்கிகளையும் மக்கள் சகட்டுமேனிக்கு வைதுகொண்டிருந்தனர். இனிமேலும் நாற்காலியில் ஒட்டிக் கொண்டிருந்தால் ஆபத்து என்பதை உணர்ந்த அதிபர், நாலே வரியில் ராஜானாமாவை அறிவித்துவிட்டு மொட்டை மாடியில் இருந்த ஹெலிகாப்டரில் ஏறித் தப்பி ஓடினார். வியத்நாமிலிருந்து அமெரிக்க ராணுவம் தப்பி ஓடிய காட்சியை அது நினைவுபடுத்தியது.

புயலடித்து ஓய்ந்தது போல் மக்களின் ஆத்திரம் சற்றே தணிந்திருக்கிறது. அடுத்த தேர்தலை நடத்தும்வரை ஓர் இடைக்கால அரசு பொறுப்பேற்றுள்ளது. அரசியல் கட்சிகள் பீதியில் மவுனம் சாதிக்கின்றன. அடுத்தது என்ன? **டி லா ருவா**-வுக்குப் பதில் **மெனம்** மீண்டும் பதவிக்கு வரலாம். ''எல்லாப் பயல்களும் ஒரே கோப்பையில் மது அருந்துபவர்கள்தான்'' என்று குமுறுகிறாள் ஒரு பெண்.

அமெரிக்க எதிர்ப்பும், ஏகாதிபத்திய எதிர்ப்பும் நாடெங்கும் கன்று கொண்டிருக்கிறது. ஆளும்வர்க்கம் பிளவுபட்டுள்ளது. நடுத்தர வர்க்கம் மக்களுடன் இணைந்து களத்தில் இறங்கியிருக்கிறது. தொழிலாளி வர்க்கமும் வேலையற்ற இளைஞர்களும் இரண்டு ஆண்டுகளாகத் தொடர்ந்து போராட்டக் களத்தில் நிற்கின்றனர்.

புரட்சிக்குக் குறைவான எத்தகைய ஆட்சி மாற்றமும் அர்ஜென்டினாவை சாந்தப்படுத்த முடியாது. புரட்சிகர கம்யூனிஸ்டு கட்சியொன்றின் தலைமைக்காக அர்ஜென்டினா தவித்துக் கொண்டிருக்கிறது.

● புதூர் ராசவேல்

www.padippakam.com



# ஆணாதிக்கத்தைப் புரிந்து கொள்ள
# பெண்களைப் பேசவிடு!

"**த**யவு செய்து கணவனே கண்கண்ட தெய்வமென்று உங்கள் மகள்களுக்குக் கற்றுக் கொடுக்காதீர்கள். சிறுமிகளை வளர்ப்பதை நீங்கள் அளவுக்கதிகமாக வெறுக்கிறீர்கள் என்றால், அவர்களைப் பிறப்பதற்கு அனுமதிக்காதீர்கள். அப்போதுதான் பல சிறுமிகள் கொல்லப்படுவதற்குப் பதில் ஒரேயொரு பெண் மட்டும் இறந்து போவாள்!'' என்று நீண்ட நெடிய பெண் வாழ்வின் அவலத்தை நான்கு வரியில் சொல்கிறார் ஷகீலா. ஷகீலாவின் கதை என்ன?

அவரது சகோதரி வகிதா ஒரு மருத்துவர். அவளும், அவளது மூன்று மகள்களும் கணவனால் அமிலம் ஊற்றிக் கொல்லப்பட்டார்கள். வகிதாவின் குற்றம் என்ன? ஆண் வாரிசுக்குப் பதிலாகத் தொடர்ந்து மூன்று பெண் குழந்தைகளைப் பெற்றுக் கொண்டதும், அது குறித்து அடிக்கடி அடித்துச் சண்டையிடும் கணவனைச் சகித்துக் கொண்டு அவனோடு வாழ்ந்ததும்தான் அவளது குற்றங்கள்.

மருத்துவராகப் பணியாற்றும் ஒரு மேல்தட்டு இசுலாமியப் பெண்ணுக்கே இக்கதி என்றால் ஏழை எளிய பெண்களின் நிலை? அமிலம் ஊற்றிக் கொல்லப்படுவதும் குதறப்படுவதும் வடஇந்திய - பாக்கிஸ்தான் - வங்கதேச இசுலாமியப் பெண்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையாக இருக்கும்போது, 'இந்து'ப் பெண்களுக்கோ ஸ்டவ் வெடித்து எரிக்கப்படுவது என்று வேறுபடுகிறது. உலகை உய்விக்க வந்தது தன் மதம்தான் என்று மார்தட்டும் இரும மத அடிப்படைவாதிகளும், பெண்களை ஆசிட் ஊற்றியோ - மண்ணெண்ணெய் ஊற்றியோ 'அழகு' பார்ப்பதில் மட்டும் ஒன்றுபடுகிறார்கள். பெண்ணினத்திற்கு எதிராக ஆண்களும் கடவுள்களும் இணைந்து அமைத்த கூட்டணியில் மதம் ஒரு பொருட்டல்ல.

உத்திரப் பிரதேசமாநிலப் பெண்களின் வாழ்க்கையில் வன்முறை எப்படிப் பிரிக்க முடியாதபடி ஒன்றியிருக்கிறது என்பதை அரசு நடத்திய 'மக்கள் நீதிமன்றத்தில்' விளக்கிய பெண்களின் கதைகளை வைத்து 'தி இந்து' பத்திரிகையில் கல்பனா சர்மா என்பவர் எழுதியிருக்கிறார். அதிலொன்றுதான் முன்னர் கண்ட ஷகீலாவின் கதை. இந்தியாவின் பெரிய மாநிலமான உ.பி. பரப்பளவில் மட்டுமல்ல, மத்திய அரசின் தலைமையைத் தீர்மானிக்கின்ற மாநிலமாகவும் இருக்கிறது. இன்னொரு புறம் வறுமை, எழுத்தறிவின்மை, இந்து மதவெறி, பெண்கள் மீதான வன்முறை, சுகாதாரக் கேடு இவற்றிலும் முன்னணியில் இருக்கிறது. இத்தகைய பின்தங்கிய இந்தி பேசும் மாநிலங்களில்தான் பாரதீய ஜனதாக் கட்சி பலமாக வேரூன்றியிருக்கிறது என்பதும் மேற்படி பட்டியலின் விளைவுதான்.

இந்தியாவில் வரதட்சணைக் கொடுமையினால் கொல்லப்படும் பெண்களில் மூன்றிலொரு பங்கு உ.பி. மாநிலப் பெண்களாக இருக்கின்றனர் என்ற உண்மை இம்மாநிலத்தின் கொடூர முகத்தையும் இந்தியப் பெண்களின் சராசரி அவலநிலையையும் தெளிவாக எடுத்துக் காட்டுகிறது.

அரசு நிறுவனங்கள் - தன்னார்வ அமைப்புகள் நடத்திய இம்மக்கள் நீதிமன்றத்தில் கலந்து கொண்ட குடியரசுத் தலைவர் நாராயணன் 'பெண்களின் உரிமைகளும் மனித உரிமைகள்தான்' என்ற 'அரிய' உண்மையைக் கண்டெடுத்துப் பேசினார்; 'நள்ளிரவில் நகையணிந்து பயமின்றி நடமாடும் நிலை வந்தால்தான் பெண்களுக்குச் சுதந்திரம் கிடைத்ததாகக் கருத முடியும்', என்ற மற்றொரு அரிய தத்துவத்துக்குச் சொந்தக்காரரான காந்தியின் சுவரொட்டியையும் வெளியிட்டார். நள்ளிரவிலோ, பகலிலோ போராடுவதற்கு நகை வேண்டுமே, அந்த நகை இல்லாததால் நடந்த கொடுமைகளை வந்திருந்த பெண்கள் விளக்கினார்கள். மற்றபடி 'மகாத்மா'வின் கனவை ஜெயா்-சசி வகையறாக்கள் மட்டும் நிறைவேற்றியிருக்கிறார்கள் என்பதால் அவரது ஆன்மா சாந்தியடையலாம்.

ஆணாதிக்கக் கொடுமைகளை தனது மதத்திலும், தனது அணிகளிடமும் வைத்திருக்கும் மாநில பா.ஜ.க. அமைச்சர் - தலைவர்களும் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்கள். இக்கொடுமைகளை நேரடியாகச் செய்தும், 'சட்டப்படி' ஆதரித்தும் செயல்படுகின்ற மாநிலப் போலீசும் அங்கே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தது. இறுதியில் வந்திருந்த பெண்கள் தமது உள்ளக் குமுறல்களைக் கொட்டியது மட்டுமே இந்நிகழ்ச்சியின் ஒரு பலன்.

உ.பி. மாநிலத்தின் பல பகுதிகளிலிருந்தும் வந்திருந்த பெண்கள் குடும்ப வன்முறை, சாதி வன்முறை, அரசு - போலீசு வன்முறை என விதவிதமான கொடுமைகளைச் சொன்னார்கள். சித்திரக்கோட் மாவட்டத்திலிருந்து வந்த 19 வயது கிஸ்மாத்தூன் பானோ கூறுகிறார்:

''ஏழு வருடங்களுக்கு முன்பு மணமுடிக்கப்பட்டேன். எனது கணவன் மோட்டார் சைக்கிள் வாங்குவதற்காகப் பத்தாயிரம் ரூபாயை வரதட்சணையாகக் கேட்டு நச்சரித்தான்; தொடர்ந்து அடித்துக் கொண்டுமிருந்தான். இதை எனது கிராம மக்களிடமும், போலீசிடமும் தெரிவித்தேன். எவரும் காது கொடுத்துக் கேட்பதாக இல்லை. ஆனால் கணவனுடன் சேர்ந்து வாழவேண்டும் என்பதை மட்டும் வலியுறுத்தினார்கள். அப்படி ஒவ்வொரு முறையும் திரும்பியபோதும் அடிப்பதை மட்டும் அவன் நிறுத்தவில்லை. இப்போது என் உடல்நலத்தையும் இழந்துவிட்டேன். ஆயினும் வயதான என் தாயையும், மூன்று வயதுக் குழந்தையையும் காப்பாற்ற வேலை செய்ய வேண்டும். எனது கணவனும் அவனது குடும்பத்தாரும் தொடர்ந்து மிரட்டிக் கொண்டிருக்கிறார்கள்.''

ஒரு தாய், தனது 11 வயது மகளை கற்பழித்துக் கொலை செய்யப்பட்ட பிணமாகப் பார்த்தது, 68 வயதுப் பெண்மணியை 27 வயது இளைஞன் கற்பழித்தது இப்படிச் சில உண்மைகள் பார்வையாளர்களை அதிர்ச்சியடைய வைத்தது. இப்பெண்களில் பலர் ஏழை - எளிய - தாழ்த்தப்பட்ட சாதிகளைச் சார்ந்தவர்களாக இருக்கின்றனர். அதேசமயம் நகர்ப்புறத்தைச் சேர்ந்த நடுத்தர வர்க்கப் பெண்களும் நிம்மதியாக வாழ்கின்றனர் என்பதில்லை.

லக்னோவைச் சேர்ந்த தீப்தி கல்லூரிப் படிப்பு முடித்து கணினி ஆசிரியையாகப் பணிபுரிபவள். பெற்றோரால் சதீஷ் என்ற அறிவியல் ஆராய்ச்சியாளனுக்கு மணம் முடித்துக் கொடுக்கப்பட்டாள். ''மணமான முதல் நாளிலிருந்தே எனது கணவனும், அவனது பெற்றோர்களும் வரதட்சணை

www.padippakam.com



கேட்டு நச்சரித்தும் பின்னர் அடித்துத் துன்புறுத்தவும் செய்தார்கள். மேலும் எனது கணவனுக்கு இரண்டாவது திருமணம் செய்யப் போவதாகவும் மிரட்டினார்கள்'' என்று தன் மணவாழ்க்கையை ஆயுள் தண்டனையாகத் தொடங்கியதை நினைவு கூர்கிறாள் தீப்தி. இறுதியில் அவளது கணவன் ஏதோ கருத்தரங்கம் ஒன்றிற்குச் சென்றிருந்த போது வீட்டைவிட்டுத் துரத்தப்பட்டாள். இந்த அதிர்ச்சியிலிருந்து மீள்வதற்கு முன் அவளைத் தேடி விவாகரத்து வழக்கு வந்தது. பின்னர் மகளிர் அமைப்பு ஒன்றின் உதவியுடன் எதிர் வழக்குப் போட்ட தீப்திக்கு கடந்த 6 மாதமாக முடிவோ, இல்லை அமைதியோ கிடைத்துவிடவில்லை.

நிகழ்ச்சிக்கு வந்திருந்த கிராமப்புற தலித் பெண்கள், நகர்ப்புற நடுத்தரவர்க்கப் பெண்கள் அனைவரும் அரசு - அதிகார வர்க்கம் - போலீசுத் துறைகள் சாதி - பண பலத்தின் முன் மண்டியிட்டு தமது அவலங்களைப் பாராமுகத்துடன் நடப்பது குறித்து விளக்கினார்கள். ஏதோ ஒரு மகளிர் அமைப்பின் தொடர்பினால் இங்கு வந்த பெண்களின் எண்ணிக்கை நூற்றுக் கணக்கில் இருக்கும்போது வெளியுலகம் அறியாத பெண்களின் எண்ணிக்கை பல ஆயிரம் இருக்கும். 1998-ஆம் ஆண்டின் அதிகாரப்பூர்வ புள்ளி விவரப்படி உ.பி. மாநிலத்தின் பெண்கள் மீதான வன்முறை 17,497 ஆகும். எனில் பதிவு செய்யப்படாத புகார்களின் எண்ணிக்கை எத்தனை இலட்சமிருக்கும்? இந்த எண்ணிக்கையுங்கூட வேறு இந்திய மாநிலங்களின் கணக்கைவிட மிக அதிகம். இந்தியாவின் பெரிய மாநிலத்தின் பெண்களின் வாழ்க்கை இப்படித்தான் இருக்கிறது.

> அமிலம் ஊற்றிக் கொல்லப் படுவதும் குதறப்படுவதும் வடஇந்திய — பாக்கிஸ்தான் — வங்கதேச இசுலாமியப் பெண்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனையாக இருக்கும்போது, 'இந்து'ப் பெண்களுக்கோ ஸ்டவ் வெடித்து எரிக்கப்படுவது என்று வேறுபடுகிறது. பெண்ணினத்திற்கு எதிராக ஆண்களும் கடவுள்களும் இணைந்து அமைத்த கூட்டணியில் மதம் ஒரு பொருட்டல்ல.

இந்த அதிகாரபூர்வ வழக்குகளில் பாதி கற்பழிப்பு வழக்குகளாகவும் அதில் பாதி ஆதாரமில்லையென மூடப்படுவதாகவும் இருப்பது நடைமுறை உண்மை. பெண்களுக்கு நியாயம் கிடைப்பதற்குச் சட்டம் ஒரு தடையாக இருக்கக்கூடாது என்பதற்காகவே கற்பழிப்பு - வீட்டு வன்முறை - அலுவலகப் பாலியல் வன்முறை குறித்த குற்றவியல் சட்டங்களில்' ஏராளமான திருத்தங்களும், புதிய சட்டங்களும் கொண்டு வந்தார்கள். ஆயினும் என்ன, வரதட்சணைக்காக எரிக்கப்படுவதும் மேல் சாதி வெறியர்களால் கற்பழிக்கப்படுவதும், காமவெறிக் கிரிமினல்களால் கற்பழித்துக் கொலை செய்யப்படுவதும் அதிகரித்தே வருகிறது. பதிவு செய்யப்படும் வழக்குகளிலும் பெரும்பாலானோர் விடுவிக்கப்படுகிறார்கள்.

தற்போது ஓடிக் கொண்டிருக்கும் 'பவாந்தர்' எனும் இந்தித் திரைப்படத்தில் கதைக்குச் சொந்தக்காரரான பன்வாரி தேவி, இராஜஸ்தான் மாநிலத்தில் மேல் சாதியினரை எதிர்த்து நின்று அதனால் கற்பழிக்கப்பட்டு, நீதிமன்றத்திலும் நியாயம் கிடைக்காத ஒரு அப்பாவிப் பெண். 'பண்டிட் குயின்' திரைப்படக் கதைக்குச் சொந்தக்காரரான பூலான் தேவி பாராளுமன்றம் வரை சென்றும் விடுதலை கிடைக்காமல் கொலை செய்யப்பட்ட மற்றுமொரு பெண். ரவுடிகள் - போதை - சிறை அதிகாரிகளால் மனநிலை சிதையுமளவு குதறப்பட்ட தமிழகத்தின் ரீட்டாவுக்கு, 5 லட்சத்தைக் கொடுத்துவிட்டார்கள் என்பதைத் தவிர பன்வாரி தேவிக்கு நேர்ந்தது இவருக்கும் நேரிடும்.

இப்படிப் பெண்கள் மீதான வன்முறையின் புள்ளி விவரம் சலிப்பூட்டும் ஒரு சடங்காக மாறிவிட்டது. அவர்களின் அவலங்களைப் பாலுணர்வைக் கிளப்பும் பரபரப்பான பத்திரிக்கைச் செய்திகளாக மாற்றிவிட்டார்கள். உழைப்பைச் செலுத்தும் பெண்களை வீட்டு வாழ்க்கையில் கூட சரிசமமாக மதிக்காமல் அடிமைகளாக நடத்தும் நாட்டில் அவர்களின் விடுதலையும் எளிதில் கிடைத்துவிடாது. அரசியல் - சமூக - பொது வாழ்க்கையில் அதிகம் பங்கேற்பதும், போராடுவதும்தான் விடுதலைக்கான தொடக்கமாக இருக்கும். அப்போதும் கூட அரசு நடத்தும் 'மக்கள் நீதிமன்றத்தில்' துயரங்களைப் பகிர்ந்து கொள்வது என்பதைத் தாண்டிச் செல்வது கடினம்.

> ''தயவு செய்து கணவனே கண்கண்ட தெய்வமென்று உங்கள் மகள்களுக்குக் கற்றுக் கொடுக்காதீர்கள். சிறுமிகளை வளர்ப்பதை நீங்கள் அளவுக் கதிகமாக வெறுக்கிறீர்கள் என்றால், அவர்களைப் பிறப்பதற்கு அனுமதிக்காதீர்கள். அப்போதுதான் பல சிறுமிகள் கொல்லப்படுவதற்குப் பதில் ஒரேயொரு பெண் மட்டும் இறந்து போவாள்!''

அதற்கு உ.பி. மாநிலத்தின் அருகிலிருக்கும் பீகார் மாநிலத்திற்குச் செல்ல வேண்டும். தெற்கு பீகாரிலும், ஜார்க்கண்ட் மாநிலத்திலும் வலுவாக இருக்கும் மாவோயிச கம்யூனிச மையம் (M.C.C) என்ற நக்சல்பாரிப் புரட்சியாளர்களால் கிராமங்கள்தோறும் உண்மையான மக்கள் நீதிமன்றம் நடத்தப்படுகிறது. சாதி - வர்க்க - பாலியல் கொடுமைகளை எதிர் கொள்ளும் பெண்களுக்கு அங்கே உடனுக்குடன் நீதி கிடைக்கின்றது. குற்றவாளிகளுக்கான தண்டனையும் மக்களால் உடன் நிறைவேற்றப்படுகிறது. ஒப்பீட்டளவில் இப்பகுதிகளில் பெண்கள் மீதான வன்முறை ஏனைய மாநிலங்களைவிடக் குறைவு. நிலவுகின்ற சமூகக் கொடுமைகளிலிருந்து விடுபடத் துடிக்கும் ஒரு பெண்ணுக்கு இதைவிடத் தெளிவான வழி வேறு ஏதும் இருக்கிறதா?

● இளநம்பி



www.padippakam.com

சிறுகதை

# கரும்புக்கு ஆசைப்பட்ட வேம்பு

● *இலட்சுமணப் பெருமாள்*

**வே**ம்புக் கோனாரை யாரு கோப்பு பண்ணி விட்டாங்கன்னு தெரியலை. நல்லா செவ செவன்னு வெத்திலையை ஒதுக்கிட்டு ரொம்ப சுதாரிப்பா திரிஞ்சார். எதுக்க வர்ற ஆளுங்களையெல்லாம் வல்ருட்டியா பிடிச்சி ''எங்க அண்ணாச்சி தூரவா? ஒரு வெத்திலை மெல்றதானே, ஆளு முன்னைக்கி 'இப்பொ என்ன ரொம்ப ஒடஞ்சி தெரியுது, மூத்த பிள்ளையெ வருசநாட்டு திக்கெம் கொடுத் திருந்ததே, எதும் பிள்ளை குட்டின்னு தாக்கல் உண்டுமா'' இப்பிடியெல்லாம் ஆளாளுக்கு தக்கன விசாரிச்சி கடைசியில் கையெடுத்துக் கும்பிட்டு விலகிப் போய்க்கிட்டிருந்தார்.

''ஒண்ணக்குமத்த பயகளுக்கு ஓட்டுப் போட்டு என்ன செய்ய? எவனாவது உருப் படியான பயல் நிக்கிறானா? பத்து வட்டிக்கி கொடுக்கிறவனும் வேல செஞ்ச தவசம் கொடுக்காதவனுந்தான் எலக் சன்னா ஆளுக்கு முந்தி நின்னுர்றான். இப்படி வேம்பு கூட்டாளி நின்னா, போடுற ஓட்டுக்கு ஒரு மருவாதியிருக்கும்'' டீ குடிச் சுக்கிட்டிருந்த வேம்புக்கோனோட உதடும் கண்ணும் லேசா விரிஞ்சது.

''நம்ம பாடு சோலிக்கு அதெல்லாம் லாயக்கப்படும்?'' சொல்லிக்கிட்டே வெறுங் கிளாஸை வெச்சிட்டு மடியிலிருக் கிற சில்லறையை எடுத்தவர் 'நீங்க டீ சாப்ட றதானே'ன்னு தலையை மேலாக்க தூக்கி ஆட்டியவாறே கேட்டார்.

''சாப்டுவோம் சாப்டுவோம், இப்பதான் சாப்ட்டோம்''

வாங்கிக் கொடுத்தா குடிக்கிற நெலமை யிலே ஒரு பேச்சுக்கு அப்படி சொன்னாங்க. ''சாப்ட்டா என்ன இன்னொரு நாலு டீ போடப்பா'' சில்ல றையை ஒதுக்கிட்டு பத்து ரூபா தாளை எடுத்து நீட்டினார்.

வேம்புக் கோனாருக்கு பல மாதிரி யான யோசனை. நெனச்சுக்கூட பாத்த தில்லை. நாமளும் பிரசிரண்ட் எலக்சன்ல நிப்பமுன்னு. எலக்சன்னா சும்மாவா. நம்மள ஆளுன்னு மதிச்சு சனங்க மெனக் கிட்டு வந்து வரிசையில நின்னு ஓட்டுப் போடுறதுன்னா விளையாட்டு காரியமா?

வேம்புக் கோனு சின்னப் பையனா இருக்கும்போது பாத்த எலக்சனுக்குப் பிறகு இப்பெதாம் எலக்சன்ல ஒரு ஆர்வம் வந்திருக்கு. அந்த நேரத்துல சம்சாரிகளை எதுத்து நிக்கிறதுக்கு யாருக்கும் தைரியம் கிடையாது. ஏன்னா விடிஞ்சி எந்திரிச்சதும் ஆடுமாடுகள் அவங்க நிலத்துலதான் போய் நிக்கெணும். அவங்க காட்டுல பாடு பட்டாத்தான் ரெண்டு கஞ்சித்தண்ணி கிடைக்கும். அவங்கள பகைச்சிக்கிட முடி யுமா?

அப்படி காலத்துல்யே அந்த ஊரு மொதலாளி கானா ஆனாவை எதுத்து வேம்புவோட தகப்பனார் மலையாண்டி கோனார் நின்றார். மொதல்ல பரம்மா இருந்த சம்சாரிக, நாள் நெருங்க நெருங்க சட்டடியா வேலைக்கு ஆள் கூப்பிடுறதை மொதல்ல நிறுத்துனாங்க. ஒவ்வொரு வீட்டுல உலை வக்கெ முடியல பாவம். வடக்குத் தெருவில கானா ஆனா மொத லாளி வீட்டுக்கு முத்தார்பட்டி மைனர், மொதலாளி உப்பத்தூர் கோதண்டம், மொதலாளி அழகாபுரி, பெரிய முதலா ளின்னு கார்கள் சர்ரு புர்ருன்னு பறந்துக் கிட்டிருந்த்து.

தெக்குத்தெரு சனங்க சர்வமும் ஒடுங்கிப் போய் தெருவே அரவமத்துப் போய் கிடக்கு. பேச்சுக்கால்கூட ஒருத்தருக் கொருத்தர் குசுகுசுன்னு பேசிக்கிடுவாங்க. பூராம் கூரை வீடுக. ஆளுக எச்சரிக்கையா வீட்டுக்கு ஒருத்தர் தெருவை காவல் காத்தாங்க. விடிஞ்சா என்ன நடக்குமோ அடைஞ்சா என்ன ஆகுமோன்னு ஆளுக உசிரை கையில பிடிச்சிக்கிட்டு அலைஞ் சாங்க.

மலையாண்டி கோனாருக்கு ரோதக் கல்லு (ரோடு ரோலர்) சின்னமும் கானா ஆனா மொதலாளிக்கு பூசணிக்காய் சின்னமும் கிடைச்சது. எலக்சன் அன்னிக்கி பள்ளிக்கூடத்துக்கு முன்னாடி வடக்குத் தெருப் பையன்களும் இளவட்டங்களும் மாதிரிவாக்குச் சீட்டை வச்சிக்கிட்டு பூச ணிக்காயில குத்தி எப்படி மடிக்கணும்னு சொல்லிக்கிட்டிருந்தாங்க.

ரோதக் கல்லுக்கு சொல்ல ஒரு நாதியும் காணோம். தெக்குத் தெருவுல மொத்தம் படிச்ச பையங்களே கிடையாது. ஒண்ணு ரெண்டு விவரந் தெரிஞ்ச ஆளுகளும் துணிச்சலா அங்க நின்னு சொல்றதுக்கு தைரியமில்லை. வீட்டுகள்ல போய் ஆளு களுக்கு ஓட்டுப் போடுற விவரஞ் சொல்லித் தருமுன்னே தொண்டை கிழிஞ்சி போச்சு.

கானா ஆனா வெளியூர்ல இருக்கிற ஓட்டுகளை கார்கள்ல கொண்டு வந்து இறக்கிக்கிட்டிருந்தார். மலையாண்டி கோனாரும் அவருக்குத் தக்கன வெளியூர் ஆளுகளுக்கு பஸ் சார்ஜ் கொடுத்து வர ழைச்சிருந்தா. ஸ்ரீவில்லிபுத்தூர்ல இவ ரோட அக்கா வீட்டுல இருந்த அம்மாவை ஒரு ஆளுவிட்டு மெனக்கிட்டு கூப்பிட்டு வந்து ஓட்டுப் போட வச்சார். ஓட்டுப் போட்டுட்டு வந்த அம்மாவை வீட்டுல வச்சி கேட்டார். ஓட்டு எப்படிம்மா போட்டேன்னு. அவ சொன்னா ''அதாம்பா நீ ரோதக் கல்லுல போடச் சொன்னியா, அந்தப் படம் சரியில்லாம தெரிஞ்சது கட்டாணியும் முட்டாணியுமா சீலு குத்த எசவில்லாம இருந்தது. மேல பூசணிக்கா குத்துறதுக்கு ரொம்ப சீலாத்துலா இருந்தது அந்தக் கட்டத்துலதான் போட்டேன்.''

''எடுபட்ட பய மவளே இங்கிருந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கு நடந்தேபோ. இதுக்கு இன்னும் பஸ்சார்ஜ் வேற செல்வா?''

எலக்சன்ல தோத்ததுதான் தாம்சம் மலையாண்டிக் கோனாருக்கு ஊர்ல குடியி ருப்பு கிடையாது. இடைஞ்சலான இடைஞ்சல். வீட்டையும் ஆறு மொய் ஆடு களையும் வந்த விலைக்கு வித்துப் போட்டு குடும்பத்தோட வெளியேறி இங்க வந்து சேர்ந்தார். அதுலயிருந்து எலச்சன்னாலே ஓட்டுக்கூடப் போடப் போகாத வேம்புக் கோனுக்கு எப்படி இந்த எண்ணம் தலைதூக்கிச்சி?

இவருகிட்ட வாரத்துக்கு ஆடு மேச்சிக் கிட்டிருந்த கனகு போன பீரிடுல குருட்டாந் திசையா ஒரு யோகத்துல பிரசிரெண்ட் ஆகி இப்பொ கையிருப்பு மட்டும் நாலஞ்சு லட்சம் தேறுமுங்கிறாங்க. அட ஒரு இழவுக்கும் ஆகாதவன்ல்லாம் மெம்ப ருன்னுக்கிடுறான்.

வந்து போற ஆளுகளும் வேம்புக்கோ னாரு ரொம்ப பொருத்தமானவருங்கிறா களா? நின்று பாத்துற வேண்டியதான். அப்பன் ஆசைப்பட்டதுக்கு அந்த நாற்கா லியில உக்காந்து காட்டீர வேண்டியதான். ஒரு வெறியாயிருச்சி.

நாமினேசன் கட்டுற மொதநா ஊருக் குள்ளே வேம்புக்கோனுக்கு ஆதரவு ஜே ஜேன்னு இருந்தது. எங்க பாத்தாலும் இவ ருத்தான் செயிப்பார்ன்னு பிரல்யமாக்கிடந் தது. வேற பொருத்தமான எதிரி இருக்கி றதா தெரியலை.

அப்பதான் நெய்வேலி செட்டியார் வந்தார். பிழைக்கிறதுக்காக காலுங்கை யோட ஊரைவிட்டுப் போன மனுசன்

www.padippakam.com

இப்போ பாத்தா பெரீய்ய கடை வச்சி திட்டங்கெட்ட சம்பாத்யமாம். துட்டு இரும்பு பெட்டியில பூசணம் பிடிச்சிகி டக்காம். பிள்ளையில்லே கொள்ளி யில்லே. துட்டை பெட்டியில வச்சிருந்து என்னசெய்ய, பிறந்த ஊர்ல பவுசை காட்ட வேண்டாம்? வாக்காளர் பட்டியல்ல சில ஆயிரம் செலவழிச்சு உடனே இடம் பிடிச்சார். ஜாதிக்காரங்களை பூராம் திரட் டிட்டுப் போய் கடைசி நா அன்னக்கி நாமி னேசன் கட்டிட்டார். கெளரா செட்டியா ருக்கு பாத்தியப்பட்ட கல்யாண மண்டபத் துலே வந்தவங்களுக்கெல்லாம் கோழி சாப்பாடு. இலையைப் போட்டதும் இலைக்கு மேலே ஒவ்வொரு குவாட்டர் பாட்டில். துட்டு 'தண்ணியா' செலவழிஞ்ச துங்கிறது செட்டியார் விஷயத்துலே சரியா யிருந்தது.

வேம்புக்கோனார் நாமினேசன் அன்னக்கி, ரூபா ஐயாயிரம் வரைக்கும் கோட்டப்பட்டி நாக்கெரு கடையில வாங்கிப் போட்ட சைவ சாப்பாடு 'ப்பூ'ன்னு உதட்டைப் பிதுக்கிற அளவுக்கு ஆகிப் போச்சு.

இன்னொரு பக்கம் போனவட்டம் நின்னு தோத்துப் போன வீரநல்லுத்தேவர், ஒவ்வொரு ஜாதிவாரியா ஆளுகளைக் கண்டு பேசி பகுதி இளவட்டங்களுக் கெல்லாம் ராத்திரி ராத்திரி புல், ஆப்பு, குவாட்டர், மினின்னு கேஸூ கேஸா இறக்கி கலக்கிட்டிருந்தார். தினமும் ரெண்டு மூடை காராச்சேவு, சிகரெட் பீடி பாக்கெட்டுன்னு அவர் பக்கமும் கூட்டம் பெருவாரியாத்தான் திரிஞ்சது.

வேம்புக்கோனார் வீட்டுல மலைச்சிப் போய் உட்கார்ந்திருந்தார்.

பத்து இருபது பேர் பெரிய கும்பிடு போட்ட மட்டுலெ 'என்ன அண்ணாச்சி'ன்னு சுத்தி உட்கார்ந்தாங்க. 'உங்களுக்கு கட்டிலு, செட்டியாருக்கு குலுக்கை, வீரநல்லுக்கு உடுக்கு, சின்னங்க ஒதுக்கியாச்சி.'

வேம்புக்கோனார் அமைதியாக இருந்தார்.

''இன்னென்ன யோசனை? இனி மேத்தான் ஒரச்சி அடிக்கணும். அதெல்லாம் ஒண்ணும் கவலைப்படா தீங்க. ஈசா ஜெயிப்போம். ஒரு மயிராண் டியும் ஒங்கள தொயர முடியாது. வெட்டியா அவங்க செலவு பண்ண வேண்டியதான். வேண்ணா பாத்துக்கிட் டேயிருங்க.''

''செட்டியார் நேத்து ஊருக்கு வந்துக் கிட்டு ஓட்டுப் போடுன்னா எவன் போடுவான். ஜெயிச்சப்புறம் மயிர் போச்சுன்னு நெய்வேலியில போய் உட்கார்ந்துக்கிடுவார். எவம் போய் பாக்கு றது?''



''வீர நல்லுத் தேவன் யோக்கியம் தெரி யாதாக்கும். போன வட்டம் ஓட்டுக்கு அம்பது ரூபா கொடுத்தான் தோத்துப் போனான். அவம் பொண்டாட்டி என்ன பண்ணுனா தெரியுமா? கூடத்தட்டை ஏந்திக்கிட்டு போயி 'எம் புருசனுக்கு ஓட்டு போட்டையின்னா கூடத்தை அமத்தி சத்தியம் பண்ணு. இல்லேன்னா ஓட்டுக்கு வாங்குன துட்டை திருப்பிக் கொடு'ன்னு எலக்சன் முடிஞ்சப்புறம் திரும்ப ஊரு பூராம் வசூல் பண்ணீட்டா. இவங்களுக்கு யாரண்ணாச்சி ஓட்டு போடுவா?''

ரொம்ப நேரம் மௌனமாயிருந்த வேம்புக்கோனார், ''இல்லே வரவர ஜாதி இனமுன்னு சனங்க பாக்கிற மாதிரி தெரி யுது. ஊர்ல செட்டியாரும் தேவமாரும் சாஸ்தியா இருக்காங்க. நாங்களும் அரி சன்ஸூம் ரொம்ப மைனாரிட்டியா இருக்கோம்... அதான்.''

''அண்ணாச்சி உள்ளாட்சி தேர்தல்னா ஆளத்தான் பாப்பாங்க. போலீசு ஸ்டேசன்


படிப்பகம்

www.padippakam.com

தாலுகா ஆபீஸுன்னு கூப்புட்டா உடனே வர்ற ஆளா, அதத்தான் மெயினா வச்சி முடிவு பண்ணுவாங்க. இதுலே சாதியாவது மண்ணாவது.''

''நம்மகிட்ட ஒரு பத்து இளவட்டங்க இருக்கான். கழுதைக தண்ணிக்குத்தான் பேயா திரியுறான். அவங்களெ தினேமும் ரப்பட்டுக்கு ரப்பட்டுக் குளிப்பாட்டி விட்டுருங்க. இறங்கினது இறங்கியாச்சி. ஒரு ஓட்டுக்கு நூறு ரூபான்னு மளமளன்னு முந்திக்கூடி கொடுத்துருவோம்... செயம் உறுதியண்ணாச்சி வேற சிந்தனைக்கே இடங் கொடுக்காதீக...''

துலுக்கப்பட்டி சிமெண்ட் பாக்டரி பக்கத்துலெ மலையாண்டி கோனார் அந்த நேரத்துல ஏக்கர் ஆயிரம் ரூபாய்க்கு வாங்கிப் போட்டது. இன்னக்கி ரேட் ரெண்டு லட்சம் வரைக்கும் கேட்டு இவரு கொடுக்க மாட்டேனுட்டார். இப்பவோ அப்பவோன்னு மூணு பொம்பளெப் பிள்ளைகளும் ஒண்ணுபோல உக்கார்ர வயசுல இருக்குதுக. அதுகளோட கல்யாணம் காட்சிக்கின்னு இன்னக்கி வரைக்கும் அந்த நிலத்தை விலை சொல்லாமலே வச்சிருந்தார். மூணு பொம்பளைப் புள்ளெகளும் தன்னை ஆதரவா பிடிச்சி சந்தோசமா சிரிச்ச மட்டுல இடுக்கிற போட்டோவை ஏறிட்டுப் பார்த்தார். தன்னைத்தவிர வேறு உலகந்தெரியாத சம்சாரம் கோமதியும் ''அவரு எது செஞ்சாலும் நம்ம நல்லதுக்குத்தான் செய்வார்'' என்ற நம்பிக்கையிலே அடுப்படியில அப்புராணியாய் கிடந்தாள்.

தீப்பெட்டி ஆபீஸிலே குறுக்கு வலிக்கப் பாடுபடும் புள்ளைகள் 'அய்யா அய்யா'ன்னு ஆசையா வந்து சுத்திக் கிடக்குங்க. உஸ்... பட்டபாடுகளும் கடந்து வந்த கஷ்டங்களும் வானமாய் ஒரு நிமிசம் விரிந்து பரவ...

''அண்ணாச்சியோவ் நாமளும் ரெண்டு துட்டைச் செலவழிக்கலேன்னா எலக்சன்ல நிக்கிறதே தெரியாம அடி பட்டுப்போவோம். இது என்னத்த ஜெயிக்கும்னு பேசக்கூடுருவாங்க. இப்பொ இருக்கிற மௌசை அப்படியே கடைசி வரைக்கும் ரொம்ப அமெரிக்கையாக் கொண்டு போயிரணும்.

வேம்புக்கோனார் பொத்திப் பொத்திக் குருவி சேத்த மாதிரி வச்சிருந்த துட்டுக்கு றெக்கை முளைச்சிருச்சி.

வால் போஸ்டர்களும் டோர் சிலிப்பும் தெருவெல்லாம் ரொம்ப ஜிலுஜிலுப்பா தெரிஞ்சது. கட்டில் சின்னத்தோடு கும்பிட்ட மட்டுல அவரு இருந்த படத்தைப் பாக்க அவருக்கே பெருமையா யிருந்தது.

''நம்மகிட்ட ஒரு பத்து இளவட்டங்க இருக்கான். கழுதைக தண்ணிக்குத்தான் பேயா திரியுறான். அவங்களெ தினேமும் ரப்பட்டுக்கு ரப்பட்டுக் குளிப்பாட்டி விட்டுருங்க. இறங்கினது இறங்கியாச்சி. ஒரு ஓட்டுக்கு நூறு ரூபான்னு மளமளன்னு முந்திக கூடி கொடுத்துருவோம்... செயம் உறுதியண்ணாச்சி வேற சிந்தனைக்கே இடங் கொடுக்காதீக...''

ஓட்டுக்கு நூறு ரூபா மேனிக்கு குறிப்பான ஆயிரம் ஓட்டுக்கு மட்டும் ஆதரவாளர்களோட போய் கொடுத்துட்டு வந்து வீட்ல உட்கார்ந்தாங்க. அவரு சம்சாரமும் மூணு பொம்பளைப் பிள்ளைகளும் சாமம் வரைக்கும் முழிச்சிருந்து சாப்பாடும் காபியும் சடைக்காம செஞ்சி பரிமாறினாங்க.

ஒரு மணி இருக்கும். எல்லோரும் புறப்பட்டுப் போயிட்டாங்க. செத்த கண்ணு அசருவோம்னு நெனச்சு துண்டை விரிக்கும் போது ''மாப்ளே! மாப்ளே! வேம்பு மாப்ளே!'' கடை கருப்பையா உள்ள நொழஞ்சார்.

'நல்ல தூக்க கலக்கத்துலெ வந்துட்டானா சரி சரி வேறொண்ணுமில்லே எங்க வீட்டுல அஞ்சு ஓட்டுக்கு ஐநூறு ரூபா கொடுத்திட்டு , வந்தீகளாமுல்லே. இந்தாங்க சடச்சிக்கிடாதீக மொதல்ல இதப் பிடிங்க.''

பையிலிருந்து எடுத்து எண்ணிக் கொடுத்தார்.

''அதனாலே என்ன மாமா சும்மா இருக்கட்டும் வச்சிடுங்க'' கையாலே தள்ளினார். அவர் வலுக்கட்டாயமா இவரு கையில திணிச்சுட்டார்.

''நா அதுக்கு சொல்லலை மாப்ளே சாயந்தரமா நெய்வேலி செட்டியார் கடைக்கு வந்தார். ஓட்டுக்கு இருநூற்றி அம்பது மேனிக்குச் சுளையா எண்ணிக் கொடுத்திட்டாரு. ஜெயிப்புக்குப் பிறகு வீடு தேடி வந்து ஓட்டுக்கு அம்பது ரூபா வீதம் தர்ரேண்டிருக்கார்.

வேம்புக்கோனாருக்கு வார்த்தை வெளியே வரலை. மாமான்னு சொல்ல முகச்சி பண்ணி தொண்டையிலே ஏதோ பிளேடால கிழிச்சுவிட்ட மாதிரி பிசிறு தட்டி சத்தம் உள்ளிறங்கி ஒண்ணம் பேசா மலேயே மடியை அவிழ்த்து எடுத்து மெல்ல ''இந்தாங்க இன்னொரு ஐநூறு... முடிங்க''. குரல் கிடுகிடுன்னு நடுங்கி நின்னது.

''இல்லே.. இல்லே.. நா வாரேன். தலையை உதறிய கருப்பையா கொஞ்ச நேரம் கழிச்சி, 'வேணுண்ணா முந்நூறுக்கு மேலே ஒரு பேரு வக்கெ முடியுமா?' வேம்புக்கோனர் பேசாம இருந்தார். பிறகு முடிஞ்சமட்டம் .மல்லாடுனார். ஒண்ணும் நடக்கலை.

போலிங் ஆபீசர்களுக்கு சாப்பாட்டுச் செலவுன்னு வேட்பாளரு ஒவ்வொருத் தரும் ஆயிரம் ரூபா தரணுமுன்னு ஊர் தலையாரி வந்து வேம்புக்கோனார்கிட்டே போலிங்குக்கு மொதநா வாங்கிட்டுப் போனார். பூத் செலவுக்குன்னும் ஏஜெண்டுக சம்பளம் சாப்பாடு போக்குவரத்துன்னு ஆளுக அரியா அரிச்சி எடுத்துட்டாங்க.

செட்டியார் தெருவுல ஒண்ணாவது வார்டு போலிங் விறுவிறுப்பா நடந்துக்கிட்டிருந்தது. ஓட்டுப் போட்டுட்டு வந்தவங்க ஓட்டுப் போடப் போறவங்களைப் பாத்து கும்பிட்டு கேன்வாஸ் பண்ணிக்கிட்டிருந்த கோனாரை கையலச்சி கூப்பிட்டு கையை மூஞ்சிக்கு நேரா நீட்டி ''யோவ் கோனாரே! நல்ல ஆளுகள பிடிச்சீருய்யா. ஒரு மாசமா ஒம்மகிட்டே குடிச்சுகிட்டு தின்னுகிட்டு திரிஞ்ச பயகள்லாம் உடுக்குக்கும் குலுக்கைக்கும் போடச் சொல்லி சொல்லிக்கிட்டிருக்காங்க போய் பாருமய்யா'' ஆத்திரத்தோடு சொன்னாங்க.

''ஆங்! பாத்தீகளாய்யா... நல்லருப்பாங்களா...'' அவரை அறியாமலே பயத்துலயும் ஏமாற்றத்துலயும் ஒரு நீண்ட கேவல் ஒலி அடிவயிற்றிலிருந்து கிளம்பி மூக்கு வழியா முனகலா சிந்துனது. விறுவிறுன்னு நடந்து பூத் ஆபீசு பக்கம் போய் நின்னார். பயல்கள் வாயை கையால் ஒருச்சாச்சி பொத்திக்கிட்டு வரிசையில நிக்கிறவங்க கிட்டே தியேட்டர்ல பிளாக் டிக்கட் விக்கிறவங்க மாதிரி ''உடுக்குக்குப் போடுங்க... உடுக்குக்குப் போடுங்க... ஐயா உடுக்கு.. மதினி உடுக்கு'' அந்தப் பக்கம் ரெண்டு பேர் ''குலுக்கை... குலுக்கை... குலுக்கையில போடுங்க... ஜெயிக்கிற சின்னத்துல போடுங்க...'' வேம்புக் கோனார் நெருங்கிப் போனார்.

''ராசாக்கா... எய்யா தம்பிகளா இது உங்களுக்கே நல்லாருக்கா. கடைசியில என்னய்ய கட்டில்ல படுக்க வச்சிட்டீகள்ல.. சந்தோசந்தான சாமி. நல்லாருங்கப்பா நல்லாருங்... நா என்ன செய்யலையா உங்களுக்கு.. என்ன கொற வச்சேனுயா...''

அழுத மாதிரியான அவரு மூஞ்சி



படிப்பகம்

www.padippakam.com

பாக்கப் பரிதாபமா இருந்தது. ''ஏன்யா... ஏன்யா... எம் மூஞ்சியப் பாத்து பேசுங்க..'' அனத்துனார்.

''ச்சூ சரி சரி இங்க வச்சி அதெல்லாம் பேசிக்கிட்டு விடுங்க... போங்க போங்க அடுத்த எலக்சன்ல பாப்பொம்.'' கொஞ்சங் கூட யோசிக்காம அசால்டா சொல்லிட்டு பக்கமா திரும்பி ''யக்கா உடுக்கு உடுக்குல குத்துங்க.'' அப்படீங்கிறாங்க. கிறுக்குப் பிடிச்ச மாதிரி என்னவோ ஆகிப்போன கோனாரு துண்டை தலையிலிருந்து அவிழ்த்து பழையபடிக்கும் தலைப்பா கட்டிக்கிட்டே புறப்பட்டார். ஆளாளுக்கு தன்னை முடுக்கி வந்து செருப்புட்டே அடிச்ச மாதிரி ஒடுங்கி போய் நடந்தார். நடு வீதியில் வேப்பமரத்துக்குக் கீழ ஒத்தையாளா ரொம்ப நேரம் நின்னுக்கிட்டிருந்தார். மணி பதினொன்னு இருக்கும். ரெண்டாவது வார்டு போலிங் ஆகும் தேவமார்தெரு பூத் ஆபீசுக்குப் போனார். அவரை எதுக்காட்டி குபீர்னு மறிச்ச ரெண்டுபேர் ''அண்ணே அண்ணே அந்தப் பக்கம் போகாதீங்க. போகாதீங்கண்ணே அந்த பூத்ல ரெண்டு செட்டுகளுக்கும் மல்லுக்கட்டாகி ஒருத்தனை அடிச்சே கொன்னு போட்டாங்க. அந்தா தெரு மேலே பொணங் கிடக்குது பாருங்க.''

கோனாரு பதறிப் போய் பார்த்தார். தூரத்துல பூத் ஆபீசுக்கு முன்னாடி வெள்ளெ வேட்டியால் மூடி வேட்டியெல்லாம் ரத்தக் கறைப் படிஞ்சு போய் மொளேர்ன்னு ஈ மொய்க்க பிணங் கிடந்தது. ஆளுக நடமாட்டமில்லாமல வெறிச்சோட்டமாக இருந்தது.

தெருவே அரண்டு போய்... ஒத்த சனங் கிடையாது அங்கே!

''ஐயையோ என்ன காரியமுய்யா இது. யாரு செஞ்ச வேலை. அடப்பாவமே!'' வேம்புக்கோன் தலையில தலையில அடிச்சார்.

''அண்ணாச்சி நீங்க வேட்பாளர். இங்க நிக்காதீங்க. போலீசு ரிஜிமிண்டுக்கு தகவல் போயாச்சு. சடார்னு எடத்தைக் காலி பண்ணி எங்குட்டாவது காட்டு வாயில போய் பிரச்சினை முடியற வரைக்கும் இருங்க.... ம்...''

வேம்புக்கோனாரை தெக்கூரு எல்லை வரைக்கும் கொண்டு போய் தள்ளிவிடாத குறையா விட்டுட்டு வந்தாங்க. அங்கிருந்து துவரைப் புஞ்சையில் நடுக்கொண்டு போய் நின்னுக்கிட்டு, ''என்ன இருக்க என்ன வந்து சேந்தது பகவானே! எம்புத்தியெ இவ்வள காலத்துக்குப்பிறகு இப்படி பறிகொடுத்திட்டனே, துட்டுக்கு துட்டும் போயி கடைசில கொலப்பழி வேற வந்திரும் போலிருக்கே... ஏ ஆயிரங்கண்

வானமே அந்து தலையில விழுந்த மாதிரி பொத்துன்னு தரையில உட்கார்ந்தார். எல்லாம் முடிஞ்சு போச்சு இன்னும் பதறியோ அலறியோ என்ன ஆகும். செத்த கழுதை மேலே எத்தனை ஏறினாலும் சொமை தெரியப் போகுதா?

ணுடையா எம்புத்திய இப்படி தடுமாற விட்டுட்டயே... ஒம்புள்ளெ இப்படி சீரழியுறேன் பாத்துக்கிட்டிருக்கயே..''

மேல் துண்டையெடுத்து மூஞ்சியெ பொத்திக்கிட்டு விக்கி விக்கி அழுதார். என்னென்னமோ அவரு மனசுல தோணுனது. செத்துப் போன தகப்பனார் வந்து மானங்கெட்ட வசவு வச்ச மாதிரி ஒரு அரிச்சல். பெண்டு பிள்ளைகளை அநியாயமா தெருவுக்குக் கொண்டு வந்து விட்டுட்டதா ஓலம்... ஊர்ல பெரிய அவமானம். சிவந்து போன கண்ணுகளை பொழுதன்னைக்கும் தொடச்சார் மூக்கைச்சிந்தினார். துண்டை தலையில கட்டுனதும் பொழுதைப் பார்த்தார். மேற்கே சாஞ்சி மணி நாலு இருக்கும் போல் தெரிஞ்சது. கெட்டதே கெட்டோம் இன்னும் எப்படி வந்தாலும் ஏத்துக்கத்தான் வேணும்.

''யோவ் கோனாரே எங்கய்யா போயி தொலைஞ்சீரு! வகைய்யா கடாவிட்டாகய்யா ஒம்மை.''

கோனார் சோகமா நின்னார். ''எல்லாப் பழியும் நம்ம மேலதானா'' மலங்க மலங்க முழித்தார்.

''கள்ள ஓட்டு ரெண்டு திக்கமும் நல்ல சீருக்குக் குத்தீட்டாக. நீரு ஜாலியா எங்கேயோ படுத்து எந்திரிச்சி வாரீரு.

கூட்டமெல்லாம் சுத்தி நின்னு எரிச்சல் பட்டு மாறிமாறிப் பேசுனாங்க. கணக்கு பண்ணி செத்தவன் பிழைச்சவன் வந்தவன் போனவன் எல்லா ஓட்டையும் வீரநல்லுத் தேவருக்கும் செட்டியாருக்கும் போட்டி போட்டுக் குத்தித் தள்ளீட்டாங்க.''

''ஏதோ அடிதடி கொலை... அப்படீன்னாங்களே!''

''அப்படிப் போடு நீரும் ஏமாந்திட்டீரா... ஐயோ ஐயோ. கொலையாவது கொம்பாவது. எல்லாரும் கூடிச் சேர்ந்து குத்திப் போடும்போது ஒம்ம கூட்டாளி வந்துட்டா. அதனாலே ஒருத்தனை ரோட்டுல படுக்கவச்சி வெள்ள வேட்டியாலே நெறைய்யா மூடி, மூணு ரூபாய்க்கு வள்ளிமார்க் கருப்பு கலர் ஒண்ணு வாங்கி ஈ மொய்ச்சுக் கிடக்கட்டுமுன்னு மேல ஊத்தி விட்டுட்டாங்க. அடிபிடியாகி ஆள் காலியாயிடுச்சி. அந்தா பொணங்கெடக்கு பொணங் கெடக்குன்னு புரளியக் கிளப்பி விட்டு பதினொரு மணிக்கு மேல ஒரு சனம் ஓட்டுப் போட வரலை. பிறகென்ன அவங்க வச்சதுதானே வரிசை.'' 'கோனார் கயித்துல தொங்குன பொணமா விறைச்ச மட்டுல நின்னார்.

''ஒண்ணாவது வார்டு எதுடா சாக்குன்னு இருந்தாங்களா? அவ்வளவு தான். இந்த பூத்துல இப்படி தட்டுப்புரட்டு நடந்தது தெரியவும் அங்கிருக்கிறவங்களைக் கணக்குப் பண்ணி மளமளன்னு குலுக்கைக்குக் குத்திக் குமிச்சிட்டாங்க. நாங்கள்லாம் ஒருத்தரும் ஓட்டுப் போடலை. நல்ல எலக்சனப்பா...''

வானமே அந்து தலையில விழுந்த மாதிரி பொத்துன்னு தரையில உட்கார்ந்தார். எல்லாம் முடிஞ்சு போச்சு இன்னும் பதறியோ அலறியோ என்ன ஆகும்.

செத்த கழுதை மேலே எத்தனை ஏறினாலும் சொமை தெரியப் போகுதா?

மடியை அவிழ்த்து வெத்தலைப் பாக்கை எடுத்தார். வாய் பொதும்ப செக்கச் செவேல்ன்னு பிடிக்கும்படியா சக்கு சக்குன்னு ரொம்ப நேரம் மென்றார். எந்திரிச்சி போலிங் பூத்துக்குள்ள விறுவிறுன்னு போனார்.

''இவ்ரு ஓட்டையும் சேத்து குத்திப் போட்டாங்களே போயி என்ன பண்ணப் போறாராம்.''

போல் முடிய பத்து நிமிசம் இருந்தது.

ஒரு நிமிசத்துல வெளியே வேகமா வந்து செட்டியார் தெரு பூத்துக்கும் நெடு நெடுன்னு நடந்தார். அடுத்த செகண்டுல பூத்துல இருந்து பாரா போலீசும் அதிகாரிகளும் ஓடி வந்தாங்க. போன மாயத்துல அந்த பூத்துல இருந்தும் திரும்பி ரொம்ப வெறப்பா நடந்து வந்துக்கிட்டிருந்தார். அங்கிருந்த போலீசும் அதிகாரிகளும் பின்னாடி விரட்டிக்கிட்டே வந்தாங்க. அதிகாரி பதட்டத்தோடு கூப்பாடு போட்டார்.

''எல்லா ஓட்டுப் பெட்டிக்குள்ளேயும் புளிச்சு புளிச்சுன்னு செவேர்ன்னு வெத்தலை எச்சியெ துப்பி நாசம் பண்ணிட்டாரய்யா...!''

●



படிப்பகம்

www.padippakam.com

# வறுமைக் கோடு

**டி**சம்பர் ஒன்றாம் தேதி முதல் தமிழக அரசு அறிவித்த கட்டண உயர்வு விலை உயர்வுகளுக்கு எதிராக உடனே கிளர்ந்தெழுந்து போராடினார்கள் தமிழக மக்கள். பேருந்து மறியல், மருத்துவமனைக்குள் ஆர்ப்பாட்டம், ரேசன் விலை உயர்வுக்கெதிராகச் சாலை மறியல் ஆகிய போராட்டங்களில் முன் நின்ற எமது தோழர்கள் போலீசால் தாக்கப்பட்டுச் சிறை வைக்கப்பட்டிருக்கிறார்கள்.

உலக வங்கியின் கைக்கூலி ஜெயலலிதா அரசு தொடுத்துள்ள இந்தத் தாக்குதலுக்கு எதிராக நாங்கள் வெளியிட்டுள்ள **'வறுமைக் கோடு'** என்ற பேச்சு ஒலிப் பேழையிலிருந்து சில பகுதிகளை வெளியிடுகிறோம். உரையாற்றியவர்:

**தோழர். சிவகாமு,**
விவசாயிகள் விடுதலை முன்னணி.

●

**ஏழையைக் கண்டுபிடிக்க குறுக்கு வழி!**

இப்போ
மொத்தத் தமிழ்நாட்டையே
ரெண்டா பிரிக்கப் போறானாம்

இ.மே., இ.கீ

மாத வருமானம்
இரண்டாயிரத்துக்கு மேல்

இரண்டாயிரத்துக்கு கீழ்.
அடுத்த மூணு மாசத்துல
வீடு வீடா ஆள்வரப் போறான்.
உனக்கு
ரெண்டாயிரத்துக்கு மேல
வருமானம் வருதான்னு
கண்டு பிடிக்கப் போறான்

ஏண்டா இப்படி கஷ்டப்படுறீங்க?
ஏழையை கண்டு பிடிக்க
நான் ஒரு
லேசான வழி சொல்றேன் கேளு.

ஆர்.டி.ஓ. தாசில்தாரு ஆர்.ஐ.
எல்லாப் பயலும் ஊர்ஊராப் போ
சொட்டு மருந்து முகாம் மாதிரி
ரேசன் கார்டு முகாம்னு ஒண்ணு நடத்து.
புழுத்த அரிசிய ஆக்கி....
தலையாரிகிட்ட குடுத்துரு.

சனங்கள, ஒவ்வொருத்தரையா
வரிசையாக் கூப்பிட்டு
ஒரு உருண்டைச் சோறும்
ஒருகிளாசு தண்ணியும் குடு.



உருண்டைய வாயில போட்டு
தண்ணியக் குடிச்சி
உள்ளே அமுக்கிட்டான்னா
அவனுக்குப் பச்சைக் கார்டைக் குடுத்திரு.

இந்த கொடுமையைப் பார்த்து
அரண்டு போனவன்
''அய்யா
எனக்கு புளூ கார்டே போதும்யா''னு
கையெடுத்து கும்புடுவான்.
அவன் கையில
புளூ கார்டைக் குடுத்துடு!
போகஸ் கார்டு பிரச்சனையே
என்னைக்கும் வராது

ஏண்டா லஞ்சத்துக்கு பொறந்த நாயே...
நீ போடுற புழுத்தரிசிக்கு
இவ்வளவு ஆராய்ச்சி தேவையா?

**மானியமும் அலவன்சும்**

மானியம்... மானியம்..ன்றீங்களே
எவன்டா கண்டுபிடிச்சான்
இந்த வார்த்தய?
அந்தக் காலத்துல... ராசாக் கல்லாம்
புலவனுக்கும், பாப்பானுக்கும்,
வப்பாட்டிக்கும்
எழுதி வச்சானே....
அதத்தான் மானியம்பாங்க.

அப்படி
உங்க பரம்பரச் சொத்த வித்து
எங்களுக்குச் செலவு பண்றீங்களா?
எல்லாம் எங்க வரிப்பணம் தானடா.
சொல்லப் போனா
நாங்க அளக்குற மானியத்துலதான்
நீ பொழைக்கிற.

கலெக்டரு பொண்டாட்டி
அரசாங்க கார்ல
ஷாப்பிங் போனா...
அலவன்ஸ்.

டி.எஸ்.பி. மச்சினன்,
ஜீப்ப எடுத்துக்கிட்டு
செகண்டு ஷோ போனா.. - அது
அலவன்ஸ்..

ஏட்டய்யா,
பெட்டிக்கடையில கையவிட்டு
பில்டர் சிகரெட்ட எடுத்தா...
அது பேட்டா!
ஆனால் கஞ்சிக்கில்லாதவனுக்கு
3.50 ரூபாய் புழுத்தரிசி குடுத்தா
அது மா....னியம்!

**தமிழக முதல்வர் உலக வங்கிக்காரனைப் பார்த்த கதை!**

இப்ப,
உலக வங்கிக் கதையக் கேளு
நம்ம... பன்னீர் செல்வமும்
பொன்னையனும்
போன மாசத்துல
டெல்லிக்குப் போனாங்க.
உலக வங்கிக்காரனப் பார்த்தாங்க.
ரெண்டு பேரும்
உள்ள வெவரத்தைச் சொன்னான்:

''இப்டி... இப்டி...
ஊருல எவனுக்கும்
சம்பளங்கூட குடுக்க முடியலண்ணே
வெளியில சொன்னா
ரொம்ப அசிங்கம்ணே....
டீச் செலவுக்குக்கூட
காசில்லண்ணே.

அதான்...
அம்மா உங்களப் பாத்து
ஒரு 18 ரூபா
வாங்கிட்டு வரச் சொன்னாங்கண்ணே!''

இப்படிச் சொல்லிகிட்டே....
நைசா
நாலு சீப்பு வாழைப்பழத்தை எடுத்து
டேபிள்ல வச்சிட்டு
சிரிச்சான்.. பன்னீரு.
அவன் என்ன
வாழப் பழத்துக்கு மசியிற ஆளா...
''சீப்பு குடுத்து வுட்டாளே மயிலு
சில்லறை கொடுத்து வுட்டாளா?
அக்கவுண்ட்ல எக்கச்சக்கமா
பாக்கி இருக்குடா வெண்ணெ.

ஆளாளுக்கு வாரீங்க
அவனவன் சோலி முடிஞ்சவுடனே
போயிடறீங்க.
இப்படி 18,0000 கோடி கேக்குறே
என் காசுக்கு என்னடா காரண்டி?

கடன் குடுக்கறேன்
கடனை அடைக்க
உனக்கு வழியும் சொல்லித் தர்றேன்
இதுக்கு மேல



படிப்பகம்

www.padippakam.com

நாங்க என்னதான் செய்யிறது?

அந்த வெளங்காத
ரேசன் கடைய இழுத்து மூடு.
விவசாயிக்கு
ஓசியில கரண்டு குடுக்காதேன்னு
சொன்னேனே் கேட்டீங்களா?

அந்த பஸ்காரப் பயலுக
தீவாளிக்குத் தீவாளி
தொந்தரவு பண்றான்ல
அந்தச் சனியன வித்துர்றா...
அவிங்கள
நான் பாத்துக்கறேன்னு சொன்னா
கேக்கறீங்களாடா?

என்னா...
உலக்கைய முழுங்குனவன் மாதிரி
திருதிருன்னு முழிக்கிறீங்க?
வாயத் தொறந்து பேசுங்கடா...''

''இல்லேண்ணே''

''என்ன நொள்ளண்ணே?''

''துட்டக் குடுத்திட்டு
உன் பின்னால அலைய
நான் என்ன இளிச்சவாயனா?
நீ என்ன செய்யிற
ஊருக்குப் போற.

ரேசன் கடைய இழுத்து மூடுற
பஸ் சார்ஜி, கரண்டு பில்லக் கூட்ற.

பள்ளிக்கூடம் ஆஸ்பத்திரின்னு
இந்த
தர்மகர்த்தா வேலையெல்லாம் நிறுத்திடு.
அப்புறம் வா பார்ப்போம்.''

அப்டீன்னு பன்னீரப் பத்திவிட்டான்
உலக வங்கிக் காரன்.

இதான் நடந்த கதை.
இதுக்கப்புறம்தான்
மினி பட்ஜெட் வருது.

**சிக்கு வலை!**

மீனு பிடிக்குறதுல
ரெண்டு விதம் இருக்கு.

வெடி வச்சும் பிடிக்கலாம்
வலை போட்டும் பிடிக்கலாம்.

வெடி வச்சவன்
வீட்டுக்குப் போகமுடியாது.
வீட்டுக்குப் போயிட்டா
மிதக்குற மீனு ஆத்தோட போயிரும்.
இல்லன்னா...
காக்கா கொத்திட்டுப் போயிரும்.
நின்னுதான் புடிச்சாகணும்.

இது,
வெள்ளைக்காரன் நம்மநாட்டை
200 வருசம் ஆண்ட கதை!

ஆனா,

சிக்கு வலை போட்டவன்
வீட்டுக்குப் போயிறலாம்.
விடிஞ்சு வந்து வலைய இழுத்தா
வேண்டிய மீன அள்ளிக்கிறலாம்.

இது,
இப்ப நடக்குற கதை!

இப்ப போட்டிருக்குறது சிக்குவலை.
இதைத்தான் நாங்க
மறுகாலனியாக்கம்னு சொல்றோம்.

சில லூசுப் பயலுக,
வெள்ளக்காரனக் காணோமே
வேட்டுச் சத்தத்தைக் காணோமே
நாங்க எப்படி நம்புறதுன்னு கேக்குறான்!

இப்படி ஆளுகள என்ன செய்யிறது?
இவங்கள உரசி, மசாலா தடவி
வெயில்ல காயப் போட்டு


**வறுமைக் கோடு**

உரை:
தோழர். சிவகாமு
*விவசாயிகள் விடுதலை முன்னணி*

ஒலிப்பேழை விலை ரூ. 30

தபாலில் வேண்டுவோர் ரூ. 15
சேர்த்து அனுப்பவும்.

இரா. சீனிவாசன்,
புதிய கலாச்சாரம், கடை எண்: 18,
முல்லை நகர் வணிக வளாகம், 2-வது
நிழற்சாலை, அசோக்நகர், சென்னை.


எண்ணச் சட்டியில முக்கும்போதுதான்
அய்யய்யோ-னு கத்துவான்.

**பச்சைத் தண்ணியா
பச்சை நோட்டா?**

பச்சைத் தண்ணிக்கு
பேரு வச்சு விக்குற
காலம் ஒண்ணு வரும்னு
நெனச்சிப் பாத்திருப்பியா?

முக்கால் லிட்டர் பச்சத் தண்ணி
15 ரூவா.
கொக்கோ கோலாவும்,
பெப்சிக்காரனும் விக்குறான்.

அதென்ன அமெரிக்காவுலேருந்து
குழாய் போட்டுக் சொண்டு வந்ததா?
எல்லாம் நம்ம
ஆத்துத் தண்ணிய மோந்துதான்
விக்குறான்.

நீ ஆத்துக்குப் போனா
குளிப்ப, துவைப்ப,
ஆடு-மாடு குளிப்பாட்டுவ.
மொத்தத்துல அது உனக்கு
வெறுந் தண்ணியாத்தான் தெரியும்.

பெப்சிக்காரன் கண்ணுக்கு
அது பூராவும்
500 ரூபா காகிதமா...
தெரியுது!

நம்ம பொம்பளைக
குடம் குடமா
தண்ணி மோந்துகிட்டு போனா,
அய்யய்யோ...
5000, 10000 ரூபா சரக்க
அசால்ட்டா
இடுப்புல வச்சிக்கிட்டுப் போறாளேனு
அவன் மனசு பதறுது!

மறிச்சுக் காசு கேட்டா
சப்புனு அறை விழுகுமே!
என்ன செய்யலாம்னு
யோசிக்குறான்.

குடி தண்ணிய காசாக்க...
கூட்டுக் குடிநீர் திட்டம்!
பாசனத் தண்ணியக் காசாக்க
பாசன் மேம்பாட்டுத் திட்டம்!
ரெண்டுமே
உலகவங்கித் திட்டம்தான்!

இனிமே,
ஏரி, குளம், கம்மாயெல்லாம்
தனியாருக்கு ஏலம் விடறதுன்னு
நம்ம... அரசாங்கமும் அறிவிச்சிட்டான்.
உலகவங்கி உத்தரவையே சட்டமாவும்
ஆக்கிட்டான்.

**இனி யுத்தம்தான்!**

நாங்க வேலை கேட்டோம்
வேலை இல்லன்னுட்டே.
வேலையில இருந்தவனையும்
வீட்டுக்கு அனுப்பிட்டே.

செய்யுற வேலைக்கு
உன் சட்டப்படி உள்ள
கூலிய வாங்கிக் குடுன்னு கேட்டோம்.
அதுவும் முடியாதுனுட்டே.

கையை ஊன்றிக் கரணம் போட்டு
பிளாட்பாரத்துல ஒரு கடை வச்சா
ஊருக்கு அசிங்கமா இருக்கு
ஓடிப் போயிருனு துரத்துற.

மகாபாரதக் கதை தெரியுமா?
5 ஊரு கேட்டான்,
5 வீடு கேட்டான்
ஊசி முனையளவு
இடமாவது கேட்டான்
எதுவும் கிடையாதுன்ன பிறகு...
யுத்தந்தான்!

யுத்தம் தொடங்கிருச்சு.
டிசம்பர் 1-ம் தேதி
சனங்க ரோட்டுக்கு வந்தாங்களே
அதுதான் தொடக்கம்!



படிப்பகம்

www.padippakam.com



# ஒரு மானியத்தின் உண்மைக் கதை

"உடல் நலம் குன்றிய ஒருவருக்கு சில நேரங்களில் கசப்பான மருந்து கொடுக்கும் சூழ்நிலை உருவாகிறது" - விலைவாசி உயர்வு குறித்த ஜெயலலிதாவின் மணிமொழி, அவரது சொந்த மணிமொழியல்ல. தாராளமயப் பொருளாதாரத்தால் மக்களின் வாழ்க்கைத்தரம் குறைந்து வருகிறதே என்ற கேள்விக்கு சோ, ப. சிதம்பரம், யஷ்வந்த் சின்ஹா, சந்திரபாபு நாயுடு, மன்மோகன் சிங், முரசொலி மாறன் மற்றும் இந்தியா டுடே போன்ற பத்திரிகைகளும் என்ன சொன்னார்களோ அதையே செல்வி. பன்னீர் செல்வமும் விளக்கியிருக்கிறார்.

மக்களின் வாழ்க்கைத் தரம் உயரவும், பொருளாதாரம் வளரவும் இந்தியாவின் அடிப்படைக் கட்டுமான வசதிகள் (சாலை, மின்சாரம், துறைமுகம், பிற) பிரம்மாண்டமாக வளர வேண்டுமாம். அதற்கு முதலீடு செய்ய நிறையப் பணம் வேண்டுமாம். அந்தப் பணத்தை அரசால் திரட்ட முடியவில்லையாம். காரணம் ரேசன், இலவச மின்சாரம், விவசாய மானியம், இலவச வேட்டி சேலை, சத்துணவு, இலவச மருத்துவம், கல்வி மானியம் போன்ற ஜனங்களைக் கவரும் கவர்ச்சித் திட்டங்கள் அந்தப் பணத்தை விழுங்கி விடுகிறதாம்.

இவை இந்தியாவில் தனியார்மய - தாராளமய - உலகமயச்சுரண்டலை அமல்படுத்தி ஆதரிக்கும் அனைவரது கருத்து. கூடவே கணிசமாக மாத சம்பளம் வாங்கும் படித்த, நடுத்தர வர்க்கமும் இப்படித்தான் பேசுகின்றது. இலவசம், மானியம், ரேசன் என்ற வார்த்தைகளைக் கேட்டாலே அருவெறுப்பும், ஆத்திரமும் இவர்களிடமிருந்து கொப்பளித்து வழியும். இந்தப் பொருளாதார தேசபக்தர்களுக்கு என்ன பரிசு கொடுக்கலாம் என்பதை இக்கட்டுரையின் முடிவில் நீங்களே முடிவு செய்யலாம்.

ஏதோ மக்களுக்குப் பிச்சை போட்டு சோம்பேறிகளாக மாற்றுவதற்கு இந்த 'மானியங்கள்' துணை போவதாகக் குமுறும் இந்தத் 'தேசபக்தர்கள்' அதிலும் குறிப்பாக விவசாயிகளை வெறுப்புடன் சபிப்பார்கள். பேருந்துக் கட்டண உயர்வு ஏன் - வருமானமற்ற கிராமங்களுக்கு இயக்கப்படும் பேருந்தின் நட்டத்தினால்; மின் கட்டண உயர்வு ஏன் - விவசாயிகளுக்கு வழங்கப்படும் இலவச மின்சாரத்தின் நட்டத்தினால்; விவசாய உணவுப் பொருள் விலை உயர்வு ஏன் - உரம், பூச்சி, மருந்து, கடனுதவி என ஒதுக்கப்படும் பல் ஆயிரம் கோடி மானிய உதவியினால் — என்று தங்கள் 'நியாயப்பட்டியலை' ஓதுவார்கள்.

நிலங்களை விற்பதும், சிறுநீரகங்களைத் தானம் செய்வதும், தற்கொலை செய்வதும், நகர்ப்புற உதிரி வேலைகளுக்கு ஓடுவதும்தான் விவசாயிகளின் யதார்த்தம் என்பது ஒருபுறமிருக்கட்டும். உண்மையில் அந்த 'தேசபக்தர்கள்' கவலைப்படும் பல்லாயிரம் கோடி மானியம் யாருக்காகச் செலவிடப்படுகிறது, அதற்கென்ன அளவுகோல், அதனால் யார் ஆதாயம் அடைகிறார்கள் என்ற கேள்விகளுக்கான விடையைக் கண்டுபிடிப்போம்.

இந்திய விவசாயத்திற்கு ஒதுக்கப்படும் மானியத் தொகையில் பெரும்பங்கு உரங்களுக்குச் செல்கிறது. உரமும் - மருந்தும் தேவையின்றியே இருந்த அபூர்வ பயிர் வகைகளைக் கொண்ட நமது விவசாயம் பசுமைப் புரட்சியின் பெயரால் பெரும் முதலாளிகள் கொள்ளையடிப்பதற்காக ஒழிக்கப்பட்டது. இந்த நிகழ்ச்சிப் போக்கில் செலவு குறைந்த விவசாயத்தைச் செலவு பிடிக்கும் நிலைக்கு மாற்ற விவசாயிகளுக்குக் காட்டப்பட்ட தூண்டில் புழுதான் இந்த மானியம் - கடன் எல்லாம்.

அதனால் ஆரம்பத்தில் உரங்களும் குறைந்த விலையில் விற்கவேண்டும் என்று அரசால் முடிவு செய்யப்பட்டது. அதிலும் இந்த உரமானியம் உரங்களைத் தயாரிக்கும் பெரும் தரகு முதலாளிகளுக்குத்தான் நேரடியாகப் போய்ச் சேருகிறது என்பதே முக்கியமான விசயம்.

பிர்லாவின் சுவாரி அக்ரோ, ஏ.சி. முத்தையாவின் ஸ்பிக், அஜய் சர்மாவின் எஸ்.எப்.சி, டாடாவின் டாடா கெமிக்கல்ஸ் போன்ற பெரும் நிறுவனங்களே 1977 முதல் உரங்களுக்கான பல நூறு கோடி ரூபாய் உதவித்தொகை பெற்று தொழில் நடத்துகின்றன. அதிலும் உரங்களைத் தயாரிப்பதில் எரிபொருள் செலவே மிக அதிகம் என்பதால் - அதற்கு மட்டும் இந்த உதவித் தொகையைப் பயன்படுத்த வேண்டும் என்பது மத்திய அரசின் நிபந்தனை. அதன் பொருட்டு குறிப்பிட்ட காலப்பிரிவில் ஒவ்வொரு தொழிற்சாலைக்கும் சென்று எரிபொருள் கணக்கைச் சோதித்தறிவதும், அதன்படி உதவித் தொகையைத் தீர்மானிப்பதும் அந்த நிபந்தனையின்படி மத்திய அரசு செய்ய வேண்டும்.

ஆனால் 1994-ஆம் ஆண்டு முதல் எல்லா உரத் தொழிற்சாலைகளும் குறைவான செலவில் எரிபொ



உர முதலாளிகள் கோயங்கா, முத்தையா. இவர்களும் ஏனைய முதலாளிகளும் நான்கு வருடங்களாக அடித்த கொள்ளை 3,200 கோடி ரூபாய். கொள்ளைப் பணத்தை வசூலிக்க வேண்டிய அரசோ இவர்களுக்கு தள்ளுபடி தருவதை மட்டும் வகை வகையாய் அமல்படுத்துகிறது.



படிப்பகம்

www.padippakam.com

ருளைப் பயன்படுத்தும் தொழில்நுட்பத்தை ஏற்படுத்திக் கொண்டன. அதன்படி எரிபொருள் செலவினத்துக்காக அரசால் கொடுக்கப்படும் உதவித் தொகையும் குறைந்திருக்க வேண்டும். ஆயினும் ஒரு நயாபைசா கூட குறையவில்லை.

சோதனை செய்ய வேண்டிய அரசும், கணக்குக் காட்ட வேண்டிய முதலாளிகளும் மோசடி செய்தனர். இந்திய விவசாயிகளுக்குச் செல்வதாகக் கருதப்படும் இந்தக் கொள்ளை பல ஆயிரம் கோடியைத் தாண்டும். அது அர்ஷத் மேத்தா, போபர்ஸ், நிலக்கரி, தொலைபேசி ஊழல்களின் ஒட்டு மொத்த மோசடித் தொகையைவிட அதிகம்.

பாராளுமன்ற மேலவையில் சஞ்சய் நிருபம், பிரேம் குப்தா என்ற இரு உறுப்பினர்கள் கேள்வி கேட்ட போது இந்தப் பிரச்சினை வெளிஉலகிற்குத் தெரிய வந்தது. அதேசமயம் விவசாயிகளின் வயிற்றிலடித்துச் சுருட்டப்படும் இந்த பகற்கொள்ளை எந்த அதிர்ச்சியையும் ஏற்படுத்தவில்லை. காரணம் இந்தக் கொள்ளையில் சம்பந்தப்பட்டிருப்பது தனி நபர்களல்ல, மத்திய அரசையே வழிநடத்தும் பெரும் தொழில் நிறுவனங்கள்.

இருப்பினும் ஓரளவுக்கு மேல் இதை மறைக்க முடியாது என்ற நிலை வந்ததும் நிதியமைச்சர் யஷ்வந்த் சின்ஹா இது குறித்து 'ஆய்வு' செய்து யூரியா தயாரிக்கும் 8 நிறுவனங்களுக்கும் தோராயமாக ரூ. 500 கோடி அதிகம் தரப்படுவதாகக் 'கண்டுபிடித்தார்'. அந்தக் கண்டுபிடிப்பையே கடிதமாக்கி உரத்துறை அமைச்சர் தின்சாவிற்கும் அனுப்பி வைத்தார்.

தின்சாவும் அதை ஏற்று 'நடவடிக்கை' எடுக்கப் போவதாக அறிவித்தார். அது என்ன நடவடிக்கை? 94-ஆம் ஆண்டு முதல் இன்று வரை அதிகம் கொடுத்த உதவித் தொகையை நியாயப்படுத்தும் காரணங்களைத் தேடி எடுத்து உருவாக்குவதுதான் அந்த அதிரடி நடவடிக்கை. எரிபொருள் செலவை மிச்சப்படுத்தும் தொழில்நுட்பத்தை நிறுவியதற்கான முதலீட்டுச் செலவு மிக அதிகமாம். அதனால் 94 முதல் 97-ஆம் ஆண்டு வரை கொடுத்த உதவித் தொகை உர நிறுவனங்களில் எரிபொருள் மூலதனச் செலவாகக் கருதப்பட வேண்டுமாம்.

சரி போகட்டும், 97-ஆம் ஆண்டிலிருந்து கூட இந்த உதவித் தொகை குறைக்கப்படவில்லையே ஏன்? அதற்கு அந்த உர நிறுவனங்களிடமிருந்து தொழில்நுட்பப் புள்ளி விவரங்கள் வருவதற்குத் தாமதமாயிற்றாம். இந்தத் 'தாமதத்தினால்' பரிசாகக் கொடுக்கப்பட்ட மக்கள் பணம் 3,200 கோடி ரூபாய். சோதித்தறிவது, கணக்கு காட்டுவது போன்றவையும், சில ஆயிரம் கோடி ரூபாயும் வெறும் கேலிக்கூத்து என்பதையே பா.ஜ.க. உர அமைச்சர் சொல்ல வருகிறார்.

மேலும் உர முதலாளிகளின் மோசடியை நியாயப்படுத்துவதும் விளக்குவதும் முதலாளிகள் அல்ல, அமைச்சர் என்பதே முக்கியம். அதிலும் இந்த மோசடி காங்கிரசு - ஐக்கிய முன்னணி ஆட்சிகளின்



பருத்தி விவசாயத்திற்கு கடன் வாங்கிய கணவன் ஐங்கையா இறந்து விட்டார். கடனைத் திருப்பக் கோரும்வங்கி அறிவிப்பை வைத்துக் கொண்டு மனைவி பொச்சம்மா செய்வதறியாது நிற்கிறார். இம்மாநிலத்தில் தற்போது பாடப்படும் ஒரு நாட்டுப்புறப் பாடலின் பொருள் என்ன தெரியுமா?
'விவசாயிகளின் தயிர்சாதமாக பூச்சி மருந்து மாறிவருகிறது'

போது நடந்தது எங்களுக்குப் பங்கில்லை என்று கூட பா.ஜ.க. கூறவில்லை. என்றால் எந்த அளவிற்கு எஜமான் பக்தி ஆட்டிப் படைக்கிறது! இதற்கு மேலும் உர அமைச்சர் அசடு வழிய முடியாது என்ற நிலையில் பிரச்சினை கவிஞரின், அதாவது, பிரதமரின் அலுவலகத்திற்குச் சென்றது.

செப்டம்பர் இறுதியில் பிரதமரின் அலுவலகம் உரநிறுவனங்களுக்கு அதிகமாகக் கொடுத்த உதவித் தொகையைத் திரும்பப் பெறப்போவதாகவும், இனிமேல் குறைவான தொகை மட்டும் கொடுக்கப் போவதாகவும் அறிவித்தது. ஒரு மாதம் கழித்தும் எதுவும் வேகவில்லை. இந்தக் கோப்பு வாஜ்பாய் வசம் இருக்கும்போதே நவம்பர் மாதம் உரத்துறை அமைச்சகம் உரநிறுவனங்களிடம் வசூல் செய்ய வேண்டிய தொகை மொத்தம் 3198 கோடி ரூபாய் எனவும், ஏப்ரல் 2000-த்திலிருந்து 1045 கோடி ரூபாய் என்றும் அறிவித்தது.

அதிலும் ஒரு மோசடி என்னவென்றால், வாஜ்பாயி அலுவலகத்தில் கோப்பில் இருந்த ஏப்ரல் 2000-த்திலிருந்து தரவேண்டிய தொகையில் ரூ. 400 கோடி ரூபாய் முதலாளிகளுக்காகத் தள்ளுபடி செய்யப்பட்டது. அதன்படி பிர்லாவிற்கு 75 கோடி, ஏ.சி. முத்தையாவிற்கு 56 கோடி, அஜய் சர்மாவிற்கு 32 கோடி என முதலரளிகளுக்குப் பங்கிடப்பட்டது. இந்த போனசுத் தொகைக்குக் காரணம், உர முதலாளிகளின் சார்பாக உ.பி. பா.ஜ.க. முதல் அமைச்சர் ராஜ்நாத் சிங் பிரதமருக்குக் கடிதம் எழுதினார். கருணையுள்ளம் கொண்ட கவிஞரும் இந்தா பிடி என்று 400 கோடியைத் தூக்கிக் கொடுத்து விட்டார்.

சரி, இந்தத் திரும்பப் பெறும் வைபவம் ஏப்ரல் 2000-லிருந்துதான் கணக்கிடப்பட்டிருக்கிறது. அதற்கும் வட்டி விகிதம் சேர்க்கப்படவில்லை. 97-ஆம் ஆண்டிலிருந்து வசூல் செய்ய வேண்டிய 3200 கோடி ரூபாய்க்கு எந்தக் கால இலக்கும், திட்டமும் கிடையாது. அதற்கு முன்பு அடிக்கப்பட்ட கொள்ளைக் கணக்கு பற்றி நமக்கு எதுவும் தெரியாது. மேலும் இந்த ஏப்ரல் 2000 வசூல் கணக்கில் மற்றுமொரு பயங்கரமும் அடங்கியிருக்கிறது. இப்கோ, கிப்கோ எனும் இரண்டு கூட்டுறவுத் துறை உர நிறுவனங்கள், மத்திய அரசின் உதவித் தொகைப் பட்டியலில் இடம் பெற்றுள்ளன. டாடா - பிர்லா - ஸ்பிக் முதலாளிகளுக்குத் தள்ளுபடி செய்த பிரதமர் மேற்கண்ட கூட்டுறவு நிறுவனங்களுக்கு மட்டும் 40 + 30 கோடி ரூபாயை அதிகப்படுத்தியிருக்கிறார். அதன்படி முதலில் நிர்ணயிக்கப்பட்ட தொகையை விட 70 கோடி ரூபாயை இந்நிறுவனங்கள் அரசிடம் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

அப்புறம் இரண்டும் நட்டத்தில் நடப்பதாக இழுத்து மூடச் சொல்லிவிட்டு, இந்தியா டுடேயில் நட்டத்தில் இயங்கும் பொதுத்துறை குறித்து ஒரு கவர் ஸ்டோரி போடச் சொன்னால் போயிற்று!

விவசாயிகளுக்குப் பிச்சையிடப்படுவதாக இகழப்படும் 'மானியத்தின்' ஒரு கிளைக்கதையே நம்மை அதிர்ச்சியடைய வைக்கிறது. அரசே ஒத்துக் கொண்ட குறைந்த பட்ச தொகையான 3200 கோடி


படிப்பகம்

www.padippakam.com

ரூபாய் முதலாளிகளால் கொள்ளையடிக்கப்பட்டதும், அது சரிதான் என்று வாதாடும் மாமா மத்திய அரசின் விபச்சாரமும் எத்தனைப் பேருக்குத் தெரியும்?

இந்தக் கொள்ளை நடந்த காலத்தில்தான் டாடாவும், பிர்லாவும் தங்கள் தொழிற்துறை சாம்ராச்சியங்களை விரிவுபடுத்தியிருக்கிறார்கள். ஏ.சி. முத்தையா செட்டியாரோ ஸ்பிக் நிறுவனத்தில் இருந்த தமிழக அரசின் பங்குகளை கசப்பு மருந்துக்காரி ஜெயா உதவியுடன் அடிமாட்டு விலைக்குக் கைப்பற்றியிருக்கிறார். இன்னும் அவர் தோற்றுப் போன கிரிக்கெட் வாரியத் தேர்தலுக்கே பல கோடி ரூபாய் செலவழித்திருக்கிறார்.

ஆனால் இவர்கள் தயாரித்த உரங்களை கடன் பெற்றும், அடகு வைத்தும் வாங்கிய விவசாயிகள், விளைச்சலின்றி கடன் அடைக்க வழியின்றி இறுதியில் 3200 கோடி கொள்ளையடித்த கயவர்கள் தயாரித்த பூச்சி மருந்தைக் குடித்து உயிர் துறந்திருக்கிறார்கள். இவையும் 94-ஆம் ஆண்டிலிருந்துதான் அதிகரித்திருக்கின்றன. முதலாளிகள் கொள்ளையடிக்க கோடிகளைக் கொட்டும் அரசுதான், விவசாயிகள் உயிரையும் சில ஆயிரங்களின் பெயரால் பறிக்கிறது. முதலாளிகளின் கொள்ளையை வெட்கமின்றி நியாயப் படுத்தும் அமைச்சர்கள் இருக்கும் இந்த நாட்டில், மருந்து குடித்துச் சாவும் விவசாயிகளின் அவலத்தை ஏறெடுத்தும் பார்க்க ஒரு நாய்கூட இல்லை.

ஆந்திராவின் பாபரலாபள்ளி கிராமத்தைச் சேர்ந்தவர் மல்லப்பா கிரி இராமகிருஷ்ணா என்ற 37 வயது விவசாயி. 1.5 ஏக்கர் நீர் வசதியும், 4 ஏக்கர் காய்ந்த நிலமும் கொண்ட இவருக்கு கடந்த 4 வருடங்களாகப் பயிர் செய்து தோல்வியடைந்ததில் கடன் சுமை அதிகரித்தது. ஆந்திர
வங்கிக்கு ரூ. 40,000, கர்நாடக உறவின
ஒருவருக்கு ரூ. 30,000, சொந்தக் கிர
மத்தில் ரூ. 35,000 என்பவை இவர
கடன் பட்டியல். கடந்த டிசம்பர் 16 இர
பூச்சி மருந்து குடித்து உயிர் துறந்த இ
ருக்கு மனைவியும், மூன்று மகள்களும்
ஒரு மகனும் உண்டு.

இதே மாநிலத்தில் திப்பாபுரம் கிர
மத்தைச் சேர்ந்த மரீனா என்ற கூலி வி
சாயி, அருகி வரும் விவசாய வே
யினால் வாழ முடியாது என்ற நிலையி
அதே நாளில் தற்கொலை செய்
கொண்டார். இவருக்கு மனைவியும் இ
மகள்களும், ஒரு மகனும் உண்டு. இவ
கிராமத்தின் வெளியே மரத்தில் தூக்கு
போட்டுக் கொண்டு உயிர் துறந்தார். பூச்
மருந்து குடிக்காததன் காரணம் காசில்ல
என்பதுதான்.

● வேல்ராச

# பார்வைகள்

சென்ற மாதம் சென்னை கோடம்பாக்கம் மேம்பாலத்தில் ஒரு சாலைமறியல் போராட்டம் நடந்தது. மறியல் செய்தவர்கள் பார்வையற்றோர். பார்வையற்றோருக்கென அரசு சலுகையினடிப்படையில் வழங்கிவந்த வேலை வாய்ப்பினை முற்றாகக் கைகழுவி விட்டதைக் கண்டித்துதான் இந்த மறியல். ஐம்பதுக்கும் மேலான ஆண்களும் பெண்களும் மேம்பாலத்தின் நடுப்பகுதியில் சாலையின் குறுக்கே அமர்ந்து முழக்கமிட ஆரம்பித்தனர்.

அன்று திங்கட்கிழமை. பரபரப்புக்குச் சொல்லவா வேண்டும்? மேம்பாலத்தின் இரண்டு பக்கங்களிலும் வாகனங்கள் தேங்கி அலறத் தொடங்கின. 'என்னாச்சு?' என்ற ஆவல் மேலிட வேடிக்கை பார்க்க வந்து விவரமறிந்ததும் ''என்னதான் நடக்கும்? பார்க்கலாமே!'' என்பதற்காகச் சிலர் நின்றனர். ''எப்படிப்பா இங்க வந்தாங்க?'' என்று ஆச்சரியத்தை வெளிப்படுத்தினர் ஒருசிலர். ''எனக்கு மட்டும் வழி விட்டா போயிடுவேன்'' என்று தலையை உயர்த்தி எங்காவது இடுக்கில் வழி கிடைக்கிறதாவென்று அலைபாய்ந்தனர் இன்னும் சிலர்.

தகவலறிந்து போக்குவரத்துப் போலீசு வந்தவுடன் மறியலில் ஈடுபட்டவர்களின் முழக்கம் ஒரு சுற்று உயர்ந்தது. எப்படியாவது போக்குவரத்தைச் சீர்செய்ய வேண்டுமென்பதைத் தவிர வேறெதையும் கண்கொண்டு பார்க்காத 'கண்ணியவான்கள்' அவசரப்பட்டனர். ஓரத்திலிருந்த இரண்டு மூன்று பேரை இழுத்து அகற்றப் பார்த்தனர். சுற்றி நின்ற மக்களை ''போய் வேலையைப் பாருங்க சார்'' என்று விரட்டுவதில் குறியாயிருந்தனர்.

அப்போதும் போராட்டம் உறுதியாய்த் தொடர்ந்தது. ஒரு வண்டி நிறைய போலீசு திபுதிபுவென்று குதித்து ஓடிவந்தது. உயரதிகாரியாய் இருந்த ஒருவர், இரண்டு நிமிடம் பொதுவாகப் பேசினார். பின்னர் மிரட்டினார்.

கடைசியில், ''யோவ்! வேலை வேணும்னு கேட்டா எப்படியா அரசாங்கம் வேலை கொடுக்கும்? படிச்சிட்டு, நல்லா கண்ணு தெரியறவனே வேலையில்லாம சுத்திட்டிருக்கான்! கொஞ்சங்கூட உலகம் புரியாம....'' என்று நியாயம் ஓதத் தொடங்கினார். அதுவும் எடுபடவில்லையென்றதும் போலீசு பலவந்தப்படுத்திக் கூட்டத்தைக் கலைக்க முயன்றது.

சுற்றி நின்றவர்களில் ஒருவர் சகிக்க முடியாமல் ''ஏன் சார்? அவங்க கோரிக்கையை அவங்க சொல்றாங்க? நீங்க ஏன் கண்ணு தெரியாதவங்களைப் போய் இப்படி இழுக்குறீங்க?'' என்று கேட்டதுதான் தாமதம், மண்டைக்குள்ளிருந்து இரண்டு கொம்புகள் துருத்திக் கொண்டு வெளிவர கேள்வி கேட்டவரை ஒரு பார்வை பார்த்தார் போலீசுக்காரர்.

''வாய்யா! பப்ளிக்! கேள்வி கேட்குறியா? வா! வந்து இவனுங்ககிட்ட பேசி வழியைச் சரிபண்ணு! வா'' என்று அவரைக் கையைப் பிடித்து நடைபாதையிலிருந்து உள்ளே இழுத்தார்.

கடைசியில் மறியலில் ஈடுபட்டவ
களைக் கைது செய்யப் போவதாக
போலீசு முடிவு செய்தது. அந்நேர
கூட்டத்திலிருந்து முப்பத்தைந்த வய
டைய ஒரு ஆள் வேகமாய் வந்து பார்வை
யற்றோர்களிடம் நேராய் சண்டைக்கு
போனான். ''பின்னால ஆம்புலன்
நிக்குது, ஒரு உயிரு போராடிக்கிட்டிருக்
வழி விடுங்கய்யா! வந்துட்டானுங்க
என்றதோடு அவர்களைக் கெட்
வார்த்தைகளால் திட்டவும் தொட
கினான்.

சுற்றியிருந்தவர்கள் அவனை விரட்ட
தொடங்கியதும் அவன் எல்லோரிடமு
உணர்ச்சிவயமாய் நியாயம் பேசினா
''ஒரு உயிரு போவுதுய்யா!'' என்
மீண்டும் சொன்னான். போராட்டத்துக்
ஆதரவாய் நின்ற ஒருவர், ''இங்க ஐம்ப
உயிர் போராடிக்கிட்டிருக்கு!, ஆம்புலன்
வேற வழியிலே போகச் சொல்லு
என்றதை மற்றவர்களும் ஆமோதிக்
போலீசு அவனை அமைதிப்படுத்தி அனு
புவது போல் காட்டி, ''இவங்களா
எல்லோருக்கும் எவ்வளவோ பிரச்சனை
பாரு'' என்று ஒரு போடு போட்டது.

ஒரு வழியாய் மறியலில் ஈடுபட்
அனைவரையும் கைது செய்து பேருந்தி
ஏற்றி போக்குவரத்து நகரத் தொடங்
யதும் பின்னால் பார்த்தால் 'ஆம்புலன்
எதுவுமில்லை. 'ஆம்புலன்ஸ்' பே
சொல்லி நியாயம் கேட்டவன் மிதிவ
டியில் சாலையைக் கடந்து போய்
கொண்டிருந்தான்.

'முதல்வன்' பெற்றெடுத்த 'இந்திய
நிழல் உருவாக்கிய நிஜம்.

● தீப



படிப்பகம்

www.padippakam.com



கற்பு நெறி என்ற பெயரில் கண்ணகி
தை கூறும் பெண்ணடிமைத்தனத்தை கடு
மயாக எதிர்த்தவர் பெரியார். சிலப்பதி
ரம் பழந்தமிழர் இலக்கியமானாலும்
தில் காணப்படும் மடமையையும்,
ார்ப்பன அடிமைத்தனத்தையும் சாடுவ
ற்கு அவர் தயங்கவில்லை. பகுத்தறி
க்கு ஒவ்வாத எதையும் 'தமிழ்ப்
ண்பாடு' என்ற பெயரில் தலைமேல்
வத்துக் கூத்தாடுவதை அவர்
ண்டித்தார்.

எனினும் மன்னனின் அதிகாரத்
தயும் நீதி வழுவாமையையும் கேள்விக்
ள்ளாக்கிய கண்ணகி எனும் இலக்கிய
ாயகி - அதற்குரிய கவுரவத்தைப்
பறத்தான் செய்கிறாள்.

அந்தக் கண்ணகியின் சிலை சென்னை
லும், பெரியார் மையம் டெல்லியிலும்
டித்துத் தள்ளப்பட்டிருக்கின்றன. மூட
ம்பிக்கையும், பார்ப்பனத் திமிரும் இரண்
றக் கலந்த ஜெயலலிதா கும்பல் கண்ணகி
லையை இடித்திருக்கிறது.

நீதியை விலைக்கு வாங்கும் தலைவி,
த்திரத்துடன் நீதி கேட்கும் ஒரு
பண்ணை - அது வெறும் சிலைதான்
னினும் - அன்றாடம் சந்திக்க நேர்வது
ன்பம்தானே!

மந்திரம் உள்ளிட்ட அனைத்திலும் அசைக்க முடியாத நம்பிக்கையும், ஜனநாயகத்தின் மீது அசைக்க முடியாத அவநம்பிக்கையும் கொண்ட புரட்சித் தலைவி, வாஸ்து சாத்திரக்காரனின் உத்தரவை நிறைவேற்றியதில் வியப்பில்லை.

வாஸ்து சாத்திர விதிகளின்படி நகர அமைப்புக்கு ஒவ்வாத கண்ணகி சிலை அகற்றப்பட்டதைப் போலவே, டெல்லியில் பெரியார் மையக் கட்டிடமும் இடிக்கப்பட்டிருக்கிறது. டெல்லி பெரு நகர வளர்ச்சிக் குழுமத்தின் நகர அமைப்பு விதிகளுக்குப் புறம்பானது என்ற காரணத்தைச் சொல்லித்தான் பெரியாரின் பெயரில் அமைந்த இந்தக் கட்டிடமும் இடிக்கப்பட்டிருக்கிறது. பெரியார் என்ற சொல் வாஸ்து சாத்திரத்துக்கு ஒவ்வாதது போலும்!

கோட்டைக்குச் செல்லும் வழியில் கண்ணகி முகத்தில் முழிக்க விரும்பாத ஜெயலலிதாவைப் போல, பாலம் விமான நிலையத்திலிருந்து வரும் வழியில் பெரியார் என்ற பெயரைப் படிக்க விரும்பாத பார்ப்பன வெறியர்களுக்குப் பஞ்சமா என்ன டெல்லியில்?

இத்தனைக்கும் அந்த மையம் பார்ப்பன எதிர்ப்பு, பகுத்தறிவுப் பிரச்சாரம் போன்ற அபாயகரமான வேலைகளிலெல்லாம் ஈடுபடவில்லை. கல்வி, சுய தொழில் போன்ற 'ஆக்கப்பூர்வமான' பணிகளை மட்டுமே செய்து வந்தது. பெரியார் என்ற ஒரு சொல்லே மையத்தை இடிக்கும் வெடி மருந்தாகி விட்டது.

ஆனந்த குமார் என்ற ஆர்.எஸ்.எஸ்.-காரரின் கீழிருக்கும் தில்லிப் பெருநகர வளர்ச்சிக் குழுமம்தான் சட்டவிரோதமாக போர்க்கால வேகத்தில் இதை இடித்திருக்கிறது. எனினும் இது குறித்த திராவிடர் கழக வெளியீடு ஒரு இடத்தில் கூட பார்ப்பன மதவெறிக் கும்பலையோ பாரதீய ஜனதாவையோ குற்றம் சாட்டவில்லை. புகார் கொடுத்த சுப்பிரமணிய சாமியை மட்டுமே குற்றம் சாட்டுகிறது. அரசியல் எதிரிகளைப் போலக் காட்டிக் கொள்ளும் சு.சுவாமியும், பாரதீய ஜனதாவும் கைகோர்த்துக் கொண்ட காரணம் வீரமணிக்குப் புரியவில்லை போலும்?



கட்சிகளைக் கடந்து இயங்கும் பெரியார் துவேசத்துக்குக் காரணம் பார்ப்பன வெறிதான் என்பதை அரசியல் ரீதியாக அம்பலப்படுத்துவதற்குப் பதில், சட்டம் - வழக்கு - காப்பீடு... என ஒரு தேர்ந்த வியாபாரிக்கே உரிய முறையில் பேசுகிறார் வீரமணி. வியாபாரியாக இருப்பதுடன் போயஸ் தோட்டத்தின் பூசாரியாகவும் இருப்பதால் கண்ணகி சிலை அகற்றியதை அவர் ஆதரிக்க வேண்டியிருக்கிறது. வியாபாரியாக இருக்கும்போது பகுத்தறிவு பேசாதவர், பூசாரி பாத்திரமேற்றவுடன் பகுத்தறிவு பேசுகிறார். சிலப்பதிகாரத்தின் பார்ப்பன அடிமைத்தனத்தைக் கண்டித்து பெரியார் பேசியவற்றை வெட்கமில்லாமல் வெளியிடுகிறது விடுதலை. பெண்ணடிமைத்தனத்தை எதிர்ப்பதற்காகத்தான் கண்ணகி சிலை அகற்றப்படுவதைப் போலக் காட்டுகிறது.

பெரியார் மையம் இடிக்கப்பட்டதைக் கண்டிக்கிறார் ஜெயலலிதா. கண்ணகி சிலையை இடித்ததைக் கண்டிக்கிறது பாரதீய ஜனதா. ''கண்ணகி சிலைக்காக உயிரைக் கொடுப்பேன்'' என்று கண்ணீர் விடும் கருணாநிதியோ, ''பெரியார் மையத்தை இடித்தவுடன் எழவுக்கு எனக்கு ஏன் சேதி சொல்லவில்லை'' என்று வீரமணியை மடக்குகிறார்.

## பெரியார் மையம் இடிப்பு, கண்ணகி சிலை தகர்ப்பு:

# ஒரு கடப்பாறை இரண்டு கையாட்கள்

தலைவிரி கோலமாக
ன்று நீதி கேட்கும் கண்ண
யின் சிலை வாஸ்து
த்திரப்படி தீங்கானது
ன்பதுதான் சிலை அகற்
ப்படுவதற்கான கார
ணம்.

கிளி ஜோசியம்,
ாகம், நேர்த்திக் கடன்,
ல்லி சூனியம், மாய

இரண்டு எதிரணிகளாகத் தோற்றம் தந்தாலும் பார்ப்பனக் கும்பல் தனது நடவடிக்கையில் ஒன்றுபடுகிறது. 'சூத்திரர் அணி'யும் அப்படித்தான்; தி.க., தி.மு.க. எனப் பிரிந்திருந்தாலும் பார்ப்பனச் சேவையில் ஒன்றுபடத் தானே செய்கின்றனர்!

● பாலன்

www.padippakam.com

# என்ன இருந்தாலும் தோழரே.....

*பொதுவாக இந்த சமுதாயம் மாற வேண்டும், புரட்சி வரவேண்டும் என்ற எண்ணம் எல்லோருக்கும் இருக்கிறது. புரட்சி என்பதை ஒரு பொதுச் சொல்லாக உச்சரிப்பது இன்பமாகவும் இருக்கிறது. அதனை ஒரு வினைச் சொல்லாக்கும் வேலைகளில் ஈடுபடுவதோ கஷ்டமாகப் படுகிறது.*

*புரட்சி என்பது உலகை மாற்றுவது மட்டுமல்ல. சமுதாய் நலனுக்காக முதலில் நம்மை மாற்றிக் கொள்வது. எதிரி வர்க்கத்தின் மேல் விமரிசித்துக் கை வைக்கும் வீரம் எளிதாக வந்து விடுகிறது. நம்மீது கைவைத்துப் பார்க்கும் தைரியம் மட்டும் அவ்வளவு சீக்கிரம் வருவதில்லை.*

*புரட்சியின் மீது ஆவல், அதே நேரத்தில் அதற்கான வேலை செய்வதில் தயக்கம். இதன் வகை மாதிரியாய் இருக்கும் இளைஞர் ஒருவரைச் சமீபத்தில் சந்தித்துப் பேசினேன்.*

★

● என்ன ஆரோக்கியசாமி நல்லாயிருக்கீங்களா?

○ அட! வாங்க தோழர். உங்கள வந்து பாக்க முடியல, நீங்களே வந்துட்டீங்க.

● ரொம்ப வேலையா? போன வாரம் ஆர்ப்பாட்டப் பிரசுரங்கள் கூட அனுப்பியிருந்தேன் வரக்காணுமே.....

○ (சிறிது நேரம் தயக்கத்துடன்) உங்க கிட்ட பொய் சொல்றதுக்கில்லை தோழர்! வேலை ஒண்ணும் இல்ல, செயல்பட்டா முழுமையா செயல்படணும். சும்மா பத்திரிகை மட்டும் வாங்கிப் படிச்சிட்டு, எதிலயும் ஈடுபடாம இருக்கிறதனால, உங்க மொகத்துல முழிக்கவே கஷ்டமா இருக்கு தோழர்.

● என்னங்க வட்டிக்காரன் கிட்ட பேசுற மாதிரி பேசுறீங்க. இதுல தனிப்பட்ட கவுரவப் பிரச்சினை ஒன்னுங் கெடயாது. மக்களுடைய நலனுக்காக உழைக்கணும்னு பொறுப்புணர்வுதான் முக்கியம். அப்புறம் என்ன, அமைப்பு வேலைய சேர்ந்து செய்யுங்க. (என் கையிலுள்ள தமிழ் மக்கள் இசைவிழா பிரசுரத்தைப் பார்த்தவுடன் ஆவல் பொங்கி உற்சாகத்துடன் பேச்சை வேறு கோணத்துக்குத் திருப்பினார்)

○ என்ன தோழர் இசைவிழா பிரசுரம் வந்துடிச்சா, முன்கூட்டியே டிக்கெட் ரிசர்வ் பண்ணிடுறேன் தோழர் (என் முகத்தை உற்றுப் பார்த்தவர் என்னிடமிருந்து பதில் வரவில்லை என்றாலும் மேற்கொண்டு தனது ஆவலை வெளிப்படுத்தினார்) தோழர், போனமுறை ஒயிலாட்டம், படுகர் ஆட்டம், தேவராட்டம் நல்லிருந்திச்சு. இந்த முறை வேற ஏதாவது புது ஆட்டம் இருக்குமா தோழர்.

● ஊம். இந்த முறை புது ஆட்டம் என்னங்கிறதை பெறகு பாப்போம். உங்க கிட்ட ஊசலாட்டம்னு ஒண்ணு இருக்கே அத பத்தி இப்ப பேசுவோமே.

○ சிரிச்சா தப்பா எடுத்துக்காதீங்க தோழர். நாந்தான் ஏற்கனவே சொன்ன மாதிரி நான்ல்லாம் சும்மா வேஸ்ட். உங்கள மாதிரி... முடியலையே.

● எங்கள மாதிரி, உங்கள மாதிரின்னு இந்த தெய்வமாக்குற வேலையெல்லாம் விடுங்க. நாம ஒண்ணும் குறி சொல்ற ஆளுங்க கெடையாது. ஒக்காந்த எடத்துலேயே ஜீபூம்பான்னு ஊதிவுடுறதுக்கு, நம்ம குறிக்கோள அடையணும்னா ஜனங்க மத்தியிலே போகணும். அவங்க பிரச்சினைகள முதல்ல நாம தெரிஞ்சிக்கணும் இதெல்லாம் செய்யிறதுக்குதாங்க மார்க்சியம், சும்மா டி.என்.பி.எஸ்.ஸி. கைடு மாதிரி வீட்ல உக்காந்து மார்க்சிய புத்தகத்தப் படிச்சா புரட்சி நடக்குமா சொல்லுங்க.

> **வீட்ட விட்டு வெளில போய்ட்டா அவங்களுக்குக் கஷ்டமாயிருக்குமுன்னு நீங்க நெனக்கிறீங்க. உண்மை என்னான்னா? எல்லா அப்பா அம்மாக்களுடைய பிரகடனமே 'வீட்டை விட்டு வெளியே போ' அப்படீங்கறதுதான். நாமளும் அதான் சொல்றோம். ஆனா அவுங்க வெளிய போயி சுயநலத்துக்கான ஜோலியப் பாருங்குறாங்க; நாம மக்களுடைய நலனுக்கான வேலையப் பாருங்குறோம்.**

○ ஆமா தோழர், பக்கத்து ஊர்ல, இப்ப கூட சாராய சாவு நடந்திச்சி, யாராவது தோழர்கள் வந்திருந்தா நாம போயி தகவல் திரட்டியிருக்கலாம்.

● அது சரிங்க. உடனே நீங்க போயி பாத்து தகவல் விசாரிக்கிறதுல என்ன பிரச்சினை?

○ அந்த ஊர்ல எல்லாம் தெரிஞ்ச மொகம் தோழர். எங்க அப்பா அந்த ஊர்லதான் டீச்சரு. உங்க பையன் இந்த கட்சியில எல்லாம் இருக்கான்னு சொல்லுவாங்க. உடனே எங்க அம்மா வீட்ல பிரச்சினை பண்ண ஆரம்பிச்சிடுவாங்க. மெயினா 'போலீஸ்காரன் இழுத்துப்போட்டு அடிப் பாண்டா உனக்கு ஏண்டா அந்த தலையெழுத்து'ன்னு சத்தம் போடுவாங்க. பெரிய தொல்லைங்க.

● அவங்க கண்ணோட்டத்துக்கு அப்ப டித்தான் பேசுவாங்க. நீங்க எந்த வர்க்கத் துக்காக வாழ விரும்புறீங்களோ அதுக்காக இறங்கி வந்து உங்க கருத்தைப் பேசுங்க. ஏசுவ சிலுவையில அறைஞ்சா மட்டும் தியாகம், போலீஸ்காரன் நம்மளச் செவுல்ல அறைஞ்சா மட்டும் கேவலமா? மக்களுக்காக அந்த வன்முறையையும் எதிர்கொள்றோம்னு உங்க கருத்தை நீங்க பேச ஏன் தயங்குறீங்க?

○ இல்ல தோழர். அம்மா, அப்பாகிட்ட பிரச்சினை பண்ணிகிட்டு மீறி நான் இயங் குறதில்ல. அது எங்கிட்ட உள்ள குறை பாடுதான்.

● அப்ப அரசாங்கம் வழியா ஒடுக்கு முறை வந்தா எதிர்ப்பீங்க, அதுவே அம்மா அப்பா வழியா வந்தா சகிச்சிக்கலாமா? எங்க சுத்தி வந்தாலும் அதாங்க. புரட் சின்னா மொதல்ல நம்மள மாத்திக்க போரா டணும். அதுக்கு ஏன் தயக்கம் காட்டுறீங்க?

○ அதாவது தோழர், அப்பா அம்மா 'கெவர்மெண்ட் ஸ்டாப்'. நான் ஒரே பையன். ஏதாவது வாதம் பண்ணி வெளிய வந்திட்டா கஷ்டமாயிருக்கும்.

● யாருக்கு கஷ்டமாயிருக்கும்? ஒரு பேச்சுக்கு வெச்சிக்குவோம்: ஒருவேளை நீங்க வீட்ட விட்டு வெளிய போயிட்டா அய்யோ புள்ள இருந்திருந்தா இந்நேரம் ரேசன் வாங்கிக்கிட்டு வந்து வச்சிருப்பான் புள்ள இருந்திருந்தா இந்நேரம் மளிகை சாமான் வாங்கியாந்து போட்டிருப்பான் அப்படின்னு நினைக்கிற அளவுக்கு உங்க வீட்ல நீங்க எந்த வேலையிலெயும் பங்கெ டுக்குறதில்ல. ஒரே புள்ள இப்படி கட்சி வேலைன்னு வெளியே போயிட்டா னேன்னு கவலைப்படுவாங்களே தவி

www.padippakam.com

மத்தபடி உங்க வீட்லேயே உங்களுக்கு சொல்ற உபதேசம் என்ன? முடிஞ்சா வேலைக்குப் போ இல்ல பேசாம சிங்கப்பூர், மலேசியான்னு ஏற்பாடு பண்றோம்னுதானே அவுங்களும் சொல்றாங்க.

○ ஆமாந் தோழர். நம்ம ''அமெரிக்க மோகம்'' புத்தகத்த படிச்சிட்டு ''விஷயம் சரிதான் நாமெல்லாம் அதுக்காக ஏதாவது 'டொனேஷன்' தர்றதோட நிறுத்திக்கனும். வசதி இல்லாதவன் போராடட்டும். யார் தப்புன்னு சொல்றா''ன்னு பச்சையா சொல்றாங்க.

நீ வீட்டவிட்டு மொதல்ல வெளில போனாதான் உருப்படுவ. மொதல்ல அதுக்கு ஏற்பாடு பண்றேன்னு பணம் கொடுத்து வேல வாங்கற ஐடியாகூட இருக்கு.

● வீட்ட விட்டு வெளில போய்ட்டா அவங்களுக்குக் கஷ்டமாயிருக்குமுன்னு நீங்க நெனக்கிறீங்க. உண்மை என்னான்னா? எல்லா அப்பா அம்மாக்களுடைய பிரகடனமே 'வீட்டை விட்டு வெளியே போ' அப்படீங்கறதுதான். நாமளும் அதான் சொல்றோம். ஆனா அவுங்க வெளிய போயி சுயநலத்துக்கான ஜோலியப் பாருங்குறாங்க; நாம மக்களுடைய நலனுக்கான வேலையப் பாருங்குறோம்.

○ அவங்களுக்கு விஷயம் நல்லாத் தெரியிது தோழர். ஆனா எவ்வளவு சொன்னாலும் ஏத்துக்க மாட்டேங்குறாங்க.

● விஷயம் தெரிஞ்சதனாலதாங்க அவங்க ஏத்துக்க மாட்டேங்குறாங்க. நீங்கதான் முடிவு பண்ணனும் வர்க்கப் பாசமா? தாய்ப்பாசமா?

○ இல்ல தோழர். எனக்கு சின்ன புள்ளையிலேர்ந்தே பாசம் ஜாஸ்தி. அதான் நான் தடுமாறிக்கிட்டே இருக்கிறது. என்ன இருந்தாலும் அப்பா அம்மாவ மீறி செய்யிறதுக்குக் கஷ்டமா இருக்குது தோழர்.

● நீங்க சொல்ற காரணத்த வெச்சி பார்த்தாக்கூட வீட்டவிட்டு வீதிக்கு வந்து போராடியாகனும். உங்க அம்மா அப்பா இவ்வளவு செலவு பண்ணி உங்கள ஆசிரியர் தகுதிக்குப் படிக்க வெச்சிருக்காங்க. ஆனா அரசாங்கம் இனிமே ஆளே எடுக்கப் போறதில்லேன்னு அறிவிச்சிடுச்சி. உங்க அம்மா, அப்பா எதிர்பார்ப்ப, குடும்பப் பாசத்த கொலைச்சது யாரு? புரட்சிகர அமைப்புகளா? ஜெயலலிதாவா?

கொஞ்சம் கஷ்டமா இருந்தாலும், சொல்லட்டுங்களா? உண்மை என்னான்னா, இப்படியே காலைல மெதுவா தூங்கி எழுந்திருச்சா அம்மா கைல காப்பி தருவாங்க ஒரு ரவுண்ட் வெளியே போயிட்டு வந்தா டிபனு. மத்தியானம் ஒரு நல்ல தூக்கம். அப்படியே சாயங்காலம் யாராவது தோழர்களப் பார்த்தா மார்க்சியம், விவாதம். அப்படியே நைட்ல டி.வி. உலகச் செய்திகள், புதிய கலாச்சாரம். இப்படியே இப்ப இருக்கிற வர்க்க நலன் குறையாம கம்யூனிசம் பேசிக்கிட்டு இருக்குறதுதான் உங்களுக்குப் பிடிக்குது.

இந்தச் சுகங்களை உதறிட்டு வர உங்களால முடியல அப்படீங்குறதுதான் உண்மையான பிரச்சினை. இந்த வீடு, அம்மா, அப்பா... இதெல்லாம் இது மேல பூசப்பட்ட வண்ணக் கலவையாத்தான் படுது. இல்ல வேற என்னதான் பிரச்சினைன்னு நீங்கதான் சொல்லுங்க விவாதிப்போம்.

(அந்தத் தோழர் நீண்ட நேரம் மௌனமானார்.)

● சித்தன்

## சிறுகதை

# வலி

**செல்வக்குமார்**

''டேய் மணி...'' பின்னாலிருந்து குரல் கேட்டது.

அந்தச் சிறுவன் இடது கையில் அழுக்கேறிய பிளாஸ்டிக் வாளியுடன் கலைந்த அழுக்குத் தலையுடன் கரிபுடிந்த நீலச் சட்டை, முழுக்கால் சட்டையுடன் எதிரே பள்ளிக் குழந்தைகள் விளையாடும் மைதானத்தையே வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான். அவனது கவனம் முழுக்க அவன் வயதையொத்த சிறுவர்களின் விளையாட்டில் இருந்தது. தானும் அவர்களாகிவிட மாட்டோமா என்ற ஏக்கம் கண்களில் தெரிந்தது. சட்டையைத் தொட்டுப் பார்த்துக் கொண்டான்.

''மணி'', இம்முறை அழுத்தமாக அழைக்கப்பட்டான்.

முன்னாலிருந்த பள்ளி மைதானம் சட்டென்று காணாமல் போனது போல் சொடுக்கிவிட்ட மாதிரி மணி திரும்பினான். சின்னத்தம்பி அண்ணன் நின்று கொண்டிருந்தார். லேசாகச் சிரித்தான். அவர் அதை சட்டை செய்யாது நக்கலாகப் பேசினார்.

''ஏண்டா முண்டம் அங்க அந்தாளு மணி, மணின்னு கத்திட்டிருக்கான். குப்பையைத் தூக்கிட்டு வந்தமா, கொட்டணமான்னு போவாம என்னடா வேடிக்கை வாழுது உனக்கு. பள்ளிக்கூடப் பசங்களப் பார்த்து நீ என்ன படிக்கப் போறியா? போ, போ ஒன் ஒனரு கோல் வைச்சுக்கிட்டு காய்ஞ்சுகிட்டிருக்கான். வட்டியும் முதலுமா கொடுப்பான். வாங்கிட்டு வந்து இங்கேயே நின்னு மேற்பார்வை பாரு...''

மணிக்கு உள்ளுக்குள் பயம் ஏற்பட்டாலும், சாதாரணமாக எடுத்துக் கொண்டு கடையை நோக்கி நடந்தான். பலமுறை குப்பை கொட்டுவதில் தாமதம் என்றும், சரியாக கிளாஸ் கழுவவில்லை என்றும், கிளாஸை உடைத்துவிட்டான் என்றும் அவனுக்கென்றே தயாரிக்கப்பட்ட கோலினால் உடம்பு வீங்க அடிவாங்கியிருக்கிறான். அதனால் சின்னத்தம்பி எச்சரித்தது சாதாரணமாகத் தோன்றியது.

இருந்தாலும் 10 அடிக்கு மேல் விழும். சொல்லி வைத்தாற் போல் பத்தாவது அடிக்கு எதிர்கடைக்காரர் அல்லது யாரோ வந்து ''சின்னப்பய தெரியாம செஞ்சுட்டான் விட்டிருங்க. பாவம் தாய் தகப்பன் இல்லாத பையன்'' என்று அனுதாப அலை வீசும். அவன் அடியும், திட்டும் வாங்கும் போது மட்டுமே அவனை தாய், தகப்பன் இல்லாதவனென்று சகல உலகத்திற்கும் தெரிவிக்கப்படும். இந்த நிமிடம் வரையில் ''ஏன்யா, சின்னப்பையனைப் போட்டு இந்த அடி அடிக்கிறியே, உன் புள்ளய இது மாதிரி திட்டுவியா, இல்ல அடிப்பியா'' என்று கேள்வி கேட்டு வக்காலத்து வாங்கியவர்கள் உண்டா என்றால் உண்டு. அதுவும் ஓரிருவர். அவர்கள் மறுபடியும் இதைக் கேட்க மாட்டார்கள்.

பதில் கீழ்க்கண்டவாறு வரும். ''இம்மாம் தூரம் சப்போர்ட் பண்றியே, தாய், தகப்பன் இல்லாத புள்ளைதான, நீயும் ஒரு தகப்பன்தானே, இந்தப் பயல நீ கூட்டிக்கிட்டுப் போய், ஓம் புள்ளையோட புள்ளையா உரிமை கொண்டாடிக்கோ நானா வேணான்னு சொல்றேன்'' கேள்வி கேட்டவர்கள் பதில் பேசாமல் டீ குடித்துவிட்டு எப்போதும் போல பரிதாபப் பார்வையோடு நிறுத்திக் கொள்வார்கள். யோசித்துக் கொண்டே கடையை நெருங்கினான்.

இவனைக் கண்டதும் கடைக்காரர், ''வாங்க சார், வாங்க, வாங்க..'' என்றார். பக்கத்தில் திரும்பி கிளாஸ் கழுவிக்

படிப்பகம்

www.padippakam.com



கொண்டிருந்த இன்னொரு பலிகடாவைப் பார்த்து ''டேய், அய்யாவுக்கு சேரை எடுத்துப் போடு, பேனை புள்ளா சுத்தி விடு, இன்னா வேணும்னு கேட்டு, கேக்கறது எல்லாம் சப்ளை பண்ணு, அப்படியே கை கால புடிச்சி விடு, இன்னா சொல்றது புரியுதா'' நக்கலாகச் சொல்லிக் கொண்டே பட்டறையை விட்டுக் கீழிறங்கி மணியிடம் வந்தவன் அவன் கையில் இருந்த பக்கெட்டைப் பிடுங்கி கீழே வைத்தான். அடுத்து மேலே செருகியிருக்கும் கோலைத்தான் எடுப்பான் என்று எதிர்பார்த்து அடி வாங்க மனதையும், உடலையும் ஒருசேரத் தயார் செய்ய முனைந்தான் மணி...

பக்கெட்டை வாங்கி வைத்த கடைக்காரன், சொற்ப வினாடிகளில் வலது கையை ஓங்கி முழுவீச்சில் மணியின் கன்னத்தில் அறைந்தான்.

தேனீர் கோப்பையைப் பிடித்து பிடித்து அதிகபட்ச சூட்டைத் தாங்கி காய்த்துப் போன கையால் அறைந்தால் என்ன நிகழுமோ அது நிகழ்ந்தது. அந்த எதிர்பாராத அடியை எதிர்நோக்க முடியாமல் சுருண்டு விழுந்தான். விழுந்த வேகத்தில் தரையில் தலை மோதியது. வலி அவனை அலற வைத்தது.

''அம்மா... அம்மா, அய்யோ அடிக்காதீங்கண்ணே'' கதறினான். இரண்டு கைகளையும் சேர்த்துக் கும்பிட்டுக் கொண்டே பரிதாபமாகக் கதறினான். கதறலையும் பொருட்படுத்தாது, விழுந்தவனை நெருங்கி, வயிற்றில் எட்டி உதைத்தான். இரு கைகளாலும் வயிற்றைப் பிடித்துக் கொண்டான்..

''அய்யோ, அம்மா வலி தாங்க முடியலேயே அம்மா, அய்யோ.. அய்யோ'' கதறினான். அவனது கதறல், கடையை ஒட்டி இருந்த கடைக்காரரின் வீட்டின் உள்ளே சமையல் செய்து கொண்டிருந்த அவன் மனைவிக்குக் கேட்டதும், மணிதான் கணவனிடம் அடிபடுகிறான் என்பதை நொடியில் உணர்ந்து வெளியே வந்தவள்,

''வேணாய்யா, விட்டிருய்யா, பாவம்! தாய் தகப்பன் இல்லாத பையன். அந்தப் பாவம் முழுக்க நம்ப மக்களை வந்து சேரும் வாணாய்யா''

மன்றாடினாள். கெஞ்சினாள். அவன் பின்னால் நகர்ந்து கேட்கவே கூசக்கூடிய வார்த்தைகளால் மணியைத் திட்டித் தீர்த்தான்.

அவள் சடக்கென்று பின்னால் திரும்பி கீழே விழுந்து கதறிக் கொண்டிருந்த மணியைத் தூக்கினாள். அவன் பின்னந்தலையில் இருந்து லேசாக இரத்தம் கசிந்தது. பதறிப் போனாள். கணவனிடம் திரும்பி...

''ஏய்யா இப்பிடியா ரத்தம் வர்ற மாதிரி அடிக்கிறது. யார் வீட்டுப் புள்ளையா இருந்தா இன்னா, வேலை ஒழுங்கா செய்யலன்னா அவங்க ஆயா வாரப்படி வாங்க வரும்ல, அதுகிட்ட சொல்லி அத்தோட இவன அனுப்பிச்சிரு. அத உட்டுட்டு இப்படியெல்லாம் ஏய்யா போட்டு அடிக்கிற''

லேசான கோபம் கலந்து ஆதங்கத்துடன் கேட்டாள், உண்மையான கோபம் கலந்து கேட்டால் மணியின் நிலைதான் தனக்கும் என்பதையும் உணர்ந்திருந்தாள்.

''ஏய், ஒன்ன எவன்டி இங்க கூப்ட்டான். ஊட்ல வேலையைப் பாரு போய், அத உட்டுட்டு வண்ட்டா அநாதைகளுக்கு சப்போர்ட் பண்றதுக்கு''

''கொஞ்சமாவது மனசாட்சியோட பேசறீயா, அம்மா அப்பா இல்லாதயா இவன் பொறந்தான். அநாதைன்ற! நீ அடிச்ச அடியில ஒண்ணுக் கெடக்க ஒண்ணு ஆயிடுச்சின்னு வையி, ஒன்ன போலீசு புடிச்சிட்டுப் போயிட்டான்னா, ரெண்டு புள்ளைகள வச்சிக்கிட்டு நடுத்

www.padippakam.com

தெருவில நிக்கப் போறவ நான்தானே, அப்ப இன்னா ஒன் அண்ணந்தம்பியா வந்து நிக்கப் போறான்.''

அதற்குள் டீக்கடைச் சண்டைக்கேயுரிய கூட்டம் கூடிவிட்டது, கணவன் மனைவிக்குள் சண்டை மூளாதவாறு பக்கத்துக் கடைக்காரர் இறங்கி வந்து சமாதானம் சொன்னார். ''ஏம்மா இந்தப் பையனுக்காக ரெண்டு பேரும் சண்டை போட்டுக்கறீங்க. சரி சரி ரத்தம் வருதுன்னியே, இட்டுனுபோய் கரித்துணியை எரிச்சி, மண்ணெண்ணையில் போட்டு, அடிபட்டடத்துல பத்துப் போட்டு உக்காரவை. ரெண்டு நாள்ல சரியாபூடும். போ.. போ...''

மணியைத் தூக்கி அவளுடன் அனுப்பிவிட்டு அவன் தன் கடைக்குத்தாவினான். டீக்கடைக்காரன் திட்டிக் கொண்டே இன்னும் நாலு உதை உதைக்க முடியவில்லையே என்ற ஆதங்கத்துடன் டீ போட ஆரம்பித்தான்.

உள்ளே அழைத்துச் சென்று டீக்கடைக்காரன் மனைவி பத்துப் போட்டாள். மணியிடம் அனுதாபம் காட்டிப் பேசினாள்.

''ஏண்டா அந்தாளுதான் முரடன் தெரியுதுல்ல, எதுக்காக பராக்குலாம் பார்க்க... எப்பப் பார்த்தாலும் உன்னோட பெரிய ரோதனையா போய்டுச்சு. நீயும் திருந்த மாட்டே, அந்தாளும் திருந்த மாட்டான். இடையில நான்தான் மாட்டிக்கறன்..''

''சரி, கொஞ்சநேரம் உட்கார்ந்துகிட்டு இரு. உங்க ஆயாவுக்கு ஆள் அனுப்புறேன். அடுப்பில போட்டது போட்டபடி கிடக்கு, புள்ளங்க ஸ்கூலுவிட்டு வந்துரும், நிறைய வேலை இருக்கு...''

சொல்லிவிட்டு வெளியே வந்து பக்கத்து வீட்டுப் பையனைக் கூப்பிட்டு அதே தெருவின் கோடியில் தின்பண்டம் விற்கும் மணியின் பாட்டியை அழைத்து வரச் சொல்லிவிட்டு திரும்பினாள்.

தலையில் பெரிய பாரம் இருப்பது போன்ற வலியை மணி உணர்ந்தான். 'சுருக் சுருக்' கென்று குத்தியது, வயிற்றிலும் வலி அதிகமாக இருந்தது. பொங்கி வந்த கண்ணீரை அழுக்குச் சட்டையில் குனிந்து துடைத்தான். ஆயா எப்போ வரும்? இப்பவாச்சும் நிரந்தரமா கூட்டுக்னு போவுமா இல்ல மறுபடியும் கடைக்காரனிடம் சமாதானம் செய்து ''இனிமே எம்பேரன் இதுமாறி பண்ணமாட்டான், அடுத்தது இதுமாறி பண்ணான்னா நானே அவன் தொடையிலையும், கையிலையும் சூடு போடறேன்னுட்டு'' வாரக்காசை வாங்கிகிட்டு இவன் கிட்டே ''இங்கபாரு ஒழுங்கா இரு! பெரியவங்க சொல்றதைக் கேட்டுக்கிட்டு பணிவா நடந்துக்கோன்''

**''அம்மா... அம்மா, அய்யோ அடிக்காதீங்கண்ணே'' கதறினான். இரண்டு கைகளையும் சேர்த்துக் கும்பிட்டுக் கொண்டே பரிதாபமாகக் கதறினான். கதறலையும் பொருட்படுத்தாது, விழுந்தவனை நெருங்கி, வயிற்றில் எட்டி உதைத்தான்.**

னுட்டு போயிருமா?

இல்ல இல்ல! தலையில அடிபட்டிருக்கு. கடக்காரன்கிட்ட சண்டை போட்டு தன்னை அழைச்சிட்டுப் போயிடும். ஆனா.. அங்க போயி தின்பண்டம் விக்க வைக்குமா, இல்ல பக்கத்து தெருவில சூ போட்டுப்போற பள்ளிக்கூடத்துல சேர்க்குமா...

என்னென்னவோ தோன்றியது மணிக்கு.

மணி கடையில் பாட்டியால் வாரத்திற்கு விடப்பட்டவன். இரண்டு வருடம் அவனால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. அவ்வளவு அடி, உதை! பாட்டியின் துண்டு விழும் பட்ஜெட்டைச் சரிக்கட்ட ஐந்தாம் வகுப்பு விடுமுறையில் சகலபாடிகளுடன் விளையாடித்திரிந்த மழலை மணி வாரம் 25 ரூபாய்க்கு கிட்டத்தட்ட விற்கப்பட்டான். பள்ளி திறந்ததும் பாட்டி வந்து அழைத்துப் போவாள் என்ற மணியின் மழலைக் கனவு அடியோடு நொறுங்கியது. அவளின் இயலாமை மணியை நம்பி இன்னும் இருக்கிறது என்பது அவனுக்குத் தெரியாது.

நினைக்க நினைக்க மணிக்கு வெறுப்பாய் வந்தது. டீக்கடைக்காரன் அவன் பிள்ளைகளை அடித்து இதுவரை பார்த்ததில்லை. அவன் மனைவியிடம் சொல்லும் போது மணி கேட்டிருக்கிறான். ''நான் டீக்கடையில வேலைக்குச் சேரும் போது ஆறுவயசு, நான் வாங்கின அடியும் உதையும் இன்னைக்கும் என் மனசுல, உடம்புல ரணமா இருக்கு. அந்த நெலம எம் புள்ளைகளுக்கு வரக்கூடாது. அதனால அவங்க மேல நானும் கை வைக்க மாட்டேன், நீயும் வைக்காதே!''

''அப்போ என்னையும், கூட வேலை செய்யற கந்தனையும் அடிக்கலாமா?'' யாரிடம் சொல்லிக் கேட்பது?

பக்கத்துக் கடைக்காரன் பத்து போடச் சொன்னவிதம் அவனுக்கு வலியை அதிகரிக்கச் செய்தது. மணியின் வயதே அடங்கிய கடைக்காரனின் மகள் ஒருநாள் ஓடி வரும் போது தடுமாறிக் கீழே விழுந்து தலையில் லேசான சிராய்ப்பு ஏற்பட கடையைப் பூட்டிவிட்டு ஆட்டோவில் தூக்கிப் போட்டுக் கொண்டு ஓடினான்.

''தையலே தேவையில்லை என்று மருத்துவர் சொல்லியும் கேளாமல் போடச் சொல்லி வற்புறுத்தினேன்'' என்று அவன் டீக்கடைக்காரனிடம் விளக்கமாய்ச் சொன்னானே! உண்மையில் தையல் போட வேண்டிய தனக்கு பத்துப் போடச் சொன்னானே, ஏன்? யார் மீது கோபப்படுவது எனத் தெரியாமல் அழுகை தெறித்தது. வாய்விட்டு அழ முடியாமல் (அழுதால் சத்தம் கேட்டு கடைக்காரன் அடிப்பான்) சட்டையில் துடைத்துக் கொண்டான்.

''வந்து, பள்ளிக்கூடத்தை மேற்பார்வை பாரு..'' என்று சொன்னாரே சின்னத்தம்பி அண்ணன். தினமும் காலையில் டீக்கடைக்கு வரும்பொழுது அவன் வயதையொத்த அவரது பேரனை அழைத்து வருவாரே! அங்கு வரும் அவர்களது நண்பர்களிடம் தன் பேரன் கான்வென்டில் அப்படிப் படிக்கிறான், இப்படிப் படிக்கிறான், ஆஹா ஓஹோ! வென்று புகழ்வாரே! ஏன் அவரால் என்னையோ கிளாஸ் கழுவும் கந்தனையோ பரிவாப் பார்க்க முடியல?

நேரம் போகப் போக வேதனை அவனை மேலும் வலிமையுள்ளவனாக மாற்றியது. இந்தப் பாட்டி மட்டும் பெரிசா என்ன செஞ்சிடப் போவுது. அதுவே வயசானது. ஆயா வந்தவுடனே பதறும், பக்கத்துக் கடைக்காரன் போல் ஆட்டோவில் அழைத்துச் சென்று தையல் போடச் சொல்லுமா? அப்படிச் சொல்றதுக்கு அதுகிட்ட ஏது பணம்? இன்னைக்கோ வெள்ளி, இன்னும் ரெண்டு நா கழிச்சு டீக்கடைக்காரனிடம் வந்து 25 ரூவா வாங்கிப் போவா, அது அதோட வெத்தலைப் பாக்குக்கே சரியா இருக்கும்.

அனைத்தையும் யோசித்து மணிக்கு ஏதோ புரிந்தது போல் தோன்ற எழுந்தான். நடந்து வெளியில் வந்தான்.. நடக்கும் போதே வயிற்றிலும், தலையிலும் ஒரு சேர வலித்தது. வலியை நெஞ்சில் இறுக்கிக் கொண்டு டீக்கடை வாசலில் வந்து நின்று பரிதாபமாய் டீக்கடைக்காரனைப் பார்த்தான். கடைக்காரன் டீ போட்டுக் கொண்டே இவனைப் பார்த்த பார்வையில் முன்பிருந்த கோபம் இல்லை.

மணி சொன்னான், ''இனிமே அது மாறி பராக்கு பாக்காம ஒழுங்கா குப்பையைக் கொட்டிட்டு வரேண்ணே.'' ●


படிப்பகம்

www.padippakam.com

# அந்த நெருப்பின் அவலம் உங்கள் நெஞ்சத்தைப் பற்றவில்லையா?

வீட்டில் புரையேறும்போதும்
யாரோ நினைப்பதாய்
உறவு பாராட்டும் உள்ளங்களே
வெளியே சிலர் போராடும்போது
நீங்கள் உறவாக நினைத்ததுண்டா?

தனது நெல்லுக்கும் கரும்புக்கும்
நியாய விலை கேட்கிறான் விவசாயி
அவனது தற்கொலைக்கான மருந்தையும்
அந்நியக் கம்பெனிகளிடம்
வாங்கச் சொல்லி
வர்த்தகச் சட்டம் போடுகிறது அரசு.

கடனும், வட்டியுமே
கண்ணிமைகள் ஆனதனால்
தூக்கம் தொலைந்து



கண்ணின் நிறம்மாறிக்
கருஞ்சிவப்பு ஆனாலும்
அந்தக் கண்களின் ஈரத்தையும்
கரும்பின் கால்களுக்குத் தந்து நிதம்
பச்சையம் மாறாமல் பார்த்துக்
கொள்வான்
கரும்பு விவசாயி.

சமைந்து விட்டதற்கான சமிக்ஞையை
தோகைத் தாவணி அசைவிற்காட்டும்
கருப்பங்கொல்லை.

கட்டிக் கொள்ள
கவர்மெண்டும் தயாரில்லை
கட்டுப்படியான விலைக்குத்
தரகர்களும் வருவதில்லை.

கணுக் கணுவாய்
காயும் இளமை கண்டு சகிக்காமல்
கோதிவிட்ட தன் கைகளாலேயே
கொள்ளி வைக்கிறான் விவசாயி
அந்த நெருப்பின் அவலம்
உங்கள்
நெஞ்சத்தைப் பற்றவில்லையா?

பூ வாளி தூக்கிக் கோவிலுக்குப்
போகையிலும்
''நீ வாயும் வயிறுமா இருக்குறவ,
இங்ககொடு''
எனத் தான் வாங்கும் உள்ளங்களே,

அதோ... தார்வாளியோடு
நடுரோட்டில் ஒருத்தி
அவளது கர்ப்பவெப்பத்தின்
காங்கல் தாங்காமல்
கருங்கல் ஜல்லியும் இடிந்து நொறுங்கும்
நீங்கள்?

எத்தனைச் சாலைகள் போட்டாலும்
ஊர்போய்ச் சேருவதில்லை
ஒப்பந்தத் தொழிலாளர்களின் வாழ்க்கை.
கால் இடித்தாலும்
''கட்டைல போவ!
ரோடு போட்டுவச்சானுவ''
என்று பொதுவாக திட்டும் உங்களுக்கு

''சாலைப் பணியாளர்களை நிரந்தரமாக்கு
தனியாராக்காதே'' என்று
கொதிக்கும் தாரிலிருந்து
ஒலிக்கும் அவர்களது குரல்
உறவில்லையா?

ஐஸ் வச்ச மீனு நல்லாயிருக்காது
அப்படியே வேணுமென்று
ஆசைப்படுவோரே.
உப்புக்காற்றை உள்ளே வாங்கி
வெறும் பீடி நெருப்பில் இரவைத் தீய்த்து
ஆழ்கடலெங்கும் அலசினாலும்,
அந்நியக்கப்பல் மேய்ந்துவிடுவதால்
வலைக்குள் வறுமையே அகப்படும்
நித்தம்

ஐசில் வைத்துப் பாதுகாக்க
அவர்களுக்கு வசதியில்லை
அதோ அப்படியே கிடக்கிறது
மீனவன் பிணம்
ருசித்துத் தின்ற சொந்தங்களே
என்ன? இதையும்
ரசித்துப் பார்க்க இயலுமா?

மயிலுக்குப் போர்வை கொடுத்தான்
பேகன் என்பதை
மனப்பாடப் பகுதியில் வைத்து
மரியாதை செய்யும் சுற்றத்தீரே!
இந்த மாகாணத்துக்கே போர்வை தந்த
ஈரோடு, பவானி நெசவாளர்கள்
இப்போது அரசின்
இறக்குமதிக் கொள்கைக்கெதிராய்
வீதியிலே!

என்ன மயிருக்குடா போராட்டம் என
மிரட்டும் தடைச் சட்டங்கள்.

உயிரிழை உருகும்
அந்த நெசவாளர்களுக்கும்
உங்கள் மானத்திற்கும்
உறவில்லையா, சொல்லுங்கள்?

மின்சாரக் கட்டுமானப் பணியின் போது
காக்கை குருவிகள் போல
கம்பிகளில் அடிபட்டுச் செத்துப்போன
தொழிலாளர்களின் சாவை விடக்
கொடூரமானது
அதை
அந்நியன் ஆக்கிரமிக்கும்போது
அசையாமல்
பார்த்துக் கொண்டிருப்பவர்களின்
வாழ்வு.



உங்கள் இருப்புப் பாதையின்
தாதுப் பொருள்
அதற்காக இறந்த தொழிலாளர்களின்
தண்டுவடம் என்றால் தப்பில்லை.

தேசத்தின் மிகப்பெரிய துயரம்
ஒருவேளைச் சோறில்லை என்பதல்ல
இந்தத் தேசம் நமதல்ல என்பதுதான்.

யார் தடுத்தாலும்
யார் தடை செய்தாலும் அதோ அவர்கள்
தொழிலாளர்கள், விவசாயிகள்,
மாணவர்கள்
வீதிக்கு வருகிறார்கள்.
ஓரமாய் ஒதுங்கி
வேடிக்கை பார்க்கும் விசித்திரங்களே
உங்களுக்கு வேறு வேலை இருக்கிறதா
போங்கள்
வீட்டு வாசலில் உங்களுக்கான
அடிமை வரி காத்திருக்கிறது
''அய்யோ எங்களுக்குமா?'' என்று
அலறும்போது
நீங்களும் தடை செய்யப்படுவீர்கள்!

● துரை. சண்மு


படிப்பகம்

www.padippakam.com

''என்னங்க கண்டுக்காம போறீங்க?''

தெருவில் நடந்துபோய்க் கொண்டிருந்த எனக்கு, கூப்பிட்டவரை உடனே அடையாளம் கண்டுபிடிக்க முடியவில்லை. பெட்டிக் கடைக்கு முன்னே பழம் சாப்பிட்டுக் கொண்டிருந்த அந்த அய்யப்ப பக்தரை நெருக்கமாக உற்றுப் பார்த்த போதுதான் சட்டெனப் புலப்பட்டது. அட, நம்ம ஏரியா டெலிபோன் லைன்மேன் முருகேசன்!

''மலைக்குப் போறேன் சார்! அதான் செருப்புகூடப் போடாம காவி வேட்டில இருக்குறேன்'' மெல்ல மாலை முரசு விளம்பரம் பக்கம் கவனத்தைத் திருப்பியவர் ''பாத்தீங்களா சார் அடுத்து ரேசன் அரிசிய ஏத்தப்போறான். நாளுக்கு நாள் வெலையெ ஏத்தறானே ஒழிய எது கொறையுது? இருமுடி சாமானே வெல ஏறிப் போச்சு சார்!''

''எவ்வளவு ஏறினாலும் இருமுடியத் தூக்கிக்கிட்டு நீங்களாவது மலை ஏறப் போறீங்க; அடுத்து பால், மண்ணெண்ணெய், பருப்பு, ஆசுபத்திரி, பஸ்ஸுன்னு வாஜ்பாயும் ஜெயலலிதாவும் கட்டுற இருமுடியப் பாத்தா ஜனங்க நின்ன எடத்துலேயே சமாதிதான். உங்கள மாதிரி அரசு வேலையிலேயும் ஆளக்கொறச்சி வெளியத் தள்ளப் போறான்.''

''மத்த டிபார்ட்மெண்ட்ல நடக்கும் சார், டெலிபோன்ல அவ்வளவு சீக்கிரம் முடியாது, நாங்க சென்ட்ரலு''.

''சென்ட்ரலாவது, ஸ்டேட்டாவது! உலக வங்கி உத்தரவு, அவன் சொல்றதை கேக்கலேன்னா கடனே கெடையாதுன்னுட்டான். லஞ்சம், ஊழல்னு ஜனங்களுக்கு உங்கமேல உள்ள வெறுப்பை வச்சே தனியாராக்குறத நியாயப்படுத்துறான் பாருங்க.''

நான் சீரியசாக பேசிக்கொண்டே போக ''அப்புறம் என்ன சார், தீபாவளியெல்லாம் போச்சா?'' என்று பேச்சின் திசையை மாற்றினார் லைன்மேன். திரும்பவும் என்னைத் தொடரவிடாமல் ''செலவு ரொம்ப ஜாஸ்தி ஆவுது சார். இந்த வருஷம் மலைக்கு வேற போறேனா? என்ன பண்ணப் போறேன்னே தெரியல ஹி... ஹி...''

பேசிக்கொண்டே அசைந்தவர் என்பக்கம் ஒருவர் மேல் இடித்துவிட ''சாமி சரணம்'' சொல்லி புன்னகைத்துக் கொண்டார்.

''தீபாவளிக்குத்தான் சாமிய கும்பிடறதில்ல அப்புறம் ஏன் இப்ப மலைக்கு வேற மாலைபோட்டு செலவை இழுத்து வுட்டுக்கிறீங்க.'' நான் சொன்னதுதான் தாமதம் தெய்வகுத்தம் நடந்தது மாதிரி பதறிப்போனார். ''சாமி சரணம், நாலு வருசமா போறேன் சார்! இது அஞ்சாவது வருசம். செலவு ஒருபக்கம் ஆனாலும் இந்த நாப்பது நாள் சுத்தபத்தமா வெரதம் இருக்குறதால உடம்பும் நல்லா இருக்கு, மனசும் ஒழுக்கமா இருக்கு சார்!

''பாருங்க இந்த மாலை போட்டது லேர்ந்து தண்ணி, சிகரெட்... ஊஹும்... ஒண்ணு கெடையாது, சாமி சரணம். ஒரு நாளைக்கு எத்தன சிகரெட் குடிப்பேன், இப்ப மூச்!''

''சிலபேர் சிகரெட், பீடி குடிக்கலாம் தப்பு இல்லேம்பாங்க! நம்பகிட்ட அந்த வேலயே கெடையாது. இருந்தா ஒழுங்கா சுத்தபத்தமா வெரதம் இருக்கணும். இல்லேன்னா மாலையே போடக்கூடாது! என்ன சொல்றீங்க.''

இலட்சியப் பிரகடனம் போல சத்தமாகப் பேசினார்.

''எல்லாத்தையும் விட்டவரைக்கும் சந்தோசந்தான், அப்ப செலவும் கொறஞ்சிடுச்சின்னு சொல்லுங்க.''

நான் சொல்லி முடித்ததுதான் தாமதம் ஏதோ அவர் எதிர்பார்ப்பைக் காலால் மிதித்துவிட்டது போலப் பதறிப்போனவர் ''அட நீங்க வேற சார். செலவு முன்னவிட அதிகங்குறேன். தெனம் ரெண்டு பழம் வச்சிக் கும்புடுறேன், பகல்படிக்கு கல்கண்டு. மத்த சாமியப் பாக்க, வர போக்குவரத்து. நான் படையல்வேற போடணும்'' ரொம்பவும் உணரும்படி விவரித்தார்.

வேலைக்கு நேரம் ஆக ''அப்புறம் வரட்டுங்களா?'' என்று நான் விடை பெற்றுக் கொள்ள எத்தனிக்க, சட்டென வழிமறிப்பது போல நெருங்கி வந்தவர் ''என்ன சார் அதுக்குத்தான் போறப்பவே கண்டுக்கலையான்னு கூப்புட்டேன். தீபாவளியும் போயிடுச்சி. தானா தருவீங்கன்னு பாத்தேன். தீபாவளிக்காசு தரவே இல்லியே சார். மறந்துட்டீங்களா? ஹி... ஹி... ஹி....''

''என்னங்க இப்பதான் சுத்தபத்தமா வெரதம் இருக்குறேன், பீடி, சிகரெட் கூட தொடுறதில்லேன்னு சொன்னீங்க. லஞ்சம் மட்டும் வாங்கலாமா? அது குத்தம் ஆகாதா?''

நான் கேட்டதுதான் தாமதம். பொட்டில் அடித்தது மாதிரி ஒருகணம் முழித்தவர் கடகடவென வேகமாகச் சிரித்துக் கொண்டே, ''அதுக்கும் இருக்கும் என்ன சார்! நீங்க பெரிய ஆளு சார். பயங்கரமா மடக்குறீங்க, பாத்து குடுங்க சார்.''

அய்யப்பனுக்கே புலிப்பாலா என்பது போல எகத்தாளமான வெடிச்சிரிப்புச் சிரித்தார்.

கொஞ்சமும் கூச்சநாச்சமின்றி அவர் முகம் முழுக்க ஒருவித வெற்றிப் பேரொளி ஜொலிக்க, பார்த்த என் கண்களைக் கூசச் செய்தது.

இதுதான் மகரஜோதியோ!

● சுடர்விழி

# ம க ர ஜோ தி

●○●

**''என்னங்க இப்பதான் சுத்தபத்தமா வெரதம் இருக்குறேன், பீடி, சிகரெட் கூட தொடுறதில்லேன்னு சொன்னீங்க. லஞ்சம் மட்டும் வாங்கலாமா? அது குத்தம் ஆகாதா?''**

www.padippakam.com



ம.க.இ.க.-வின்

# தமிழ் மக்கள் இசைவிழா

— ஒன்பதாம் ஆண்டு —

பிப்ரவரி-9, 2002 - சனிக்கிழமை
தஞ்சை - திருவள்ளுவர் திடல்

## கருத்தரங்கம்

○ **இந்துஸ்தானி இசை தனிமரபு இசையா?**

ஐரோப்பியச் செவ்வியல் இசையைப் போல இந்துஸ்தானிஇசைக்குத் தனித்தவொரு இசை மரபு இல்லை. தமிழிசை மரபில் தோன்றி, பின்னர் பாரசீக, எகிப்திய இசைகளையும் உள்வாங்கி உருப்பெற்றதே இந்துஸ்தானி இசை என்பதை வரலாற்று ரீதியாகவும் இசை விளக்கங்களுடனும் நிறுவும் உரை.

**திரு. நா. மம்மது,** மற்றும்
**திரு. ராஜா என்கிற ஷாகுல் ஹமீது,**
மதுரை.

○ **தொலைக்காட்சியும் தமிழர் பண்பாடும்**

நாட்டுப்புறக் கலைகளில் ஆளும் வர்க்கம் கருத்தியல் ரீதியாக ஊடுருவியதைப் போன்றே, வலிமைமிக்க காட்சி ஊடகமான தொலைக்காட்சியின் மூலம் தமிழ் மக்களின் பண்பாட்டின் மீது நடத்தப்படும் தாக்குதல் குறித்த ஆய்வுரை.

**பேரா. ஷாஜகான் கனி,**
தலைவர், தமிழ்த்துறை,
யாதவா கல்லூரி, மதுரை.

○ **நாட்டுப்புற இசை - செவ்வியலிசை இயக்கவியல் உறவு.**

நாட்டுப்புற இசையிலிருந்து தோன்றியதே செவ்வியலிசை என்பதுடன், தேக்கத்திற்கும் பின்னடைவுக்கும் உள்ளாகும் போதெல்லாம் செவ்வியலிசையானது நாட்டுப்புற இசையிலிருந்துதான் தன்னை உயிர்ப்பித்துக் கொள்கிறது என்பதை இசை விளக்கங்களுடன் நிறுவும் உரை.

**பேரா. செ.அ. வீரபாண்டியன்**
மாநிலக் கல்லூரி, சென்னை.

○ **நாட்டுப்புறக் கலைகள் மற்றும் கலைஞர்களின் அவலநிலை**

நாட்டுப்புறக் கலைஞர்களின் ஏழ்மை நிலை, நாட்டுப்புறக் கலைஞர்களையும் கலையையும் இழிவுபடுத்தும் அரசு நிறுவனங்கள், அக்கலைஞர்கள் மீது அரசும், சமூகமும் செலுத்தும் சாதிய, வர்க்க ஒடுக்குமுறைகள்.

**முனைவர். மு. இராமசாமி,**
தலைவர், நாடகத்துறை,
தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சை.

## கலை நிகழ்ச்சிகள்

✱ **பெரியாரின் சமூகத் தொண்டு வில்லிசை**

நெல்லை. **அதியமான்**
திரவியத்தம்மாள் குழுவினர்.

✱ **''திருப்பிக் கொடு!'' பிரெக்டின் நாடகத்தைத் தழுவிய சிறுநாடகம்**

**கிருஷ்ணா,** கம்பம்.

✱ **நாட்டுப்புறச் சொலவடைகள்**

**ராசம்மா, சிவனம்மா குழு**
அருப்புக் கோட்டை.

✱ **நல்ல தங்காள் கதை**

நாத்தனார் கொடுமையால் தற்கொலை செய்து கொண்ட நல்லதங்காள், வறுமைக் கொடுமையை எதிர்த்த போருக்கு அறைகூவினால்...

**திரு. ராஜா** என்கிற
**ஷாகுல் ஹமீது குழுவினர்,** மதுரை.

✱ **எமன் தர்பார்**

இன்றைய ஊழல் அதிகாரிகள், அரசியல்வாதிகள், பண முதலைகள் ஆகியோருக்குப் 'பாவக் கணக்கு' பார்த்தால்...

**வி.எம். முருகப்பா குழுவினர்,**
திண்டுக்கல்.

✱ **களத்துப் பாடல்கள்**

நெல்லை, அருப்புக்கோட்டை, அலங்காநல்லூர் கலைஞர்கள்.

✱ **தப்பாட்டம்**

**வீரசோழ தப்பாட்டக் குழு**
ரெட்டிப் பாளையம்

✱ **இருளர் ஆட்டம்**

**நீலகிரி மலையின மக்கள்**

✱ **ஒயிலாட்டம்**

✱ **சிறுவர்களின் கரகாட்டம், ஒயில் கும்மி**

✱ **பாரதிதாசன் பாடல்கள்**

**மதுரை ராஜா குழுவினர்**

✱ **களியல் ஆட்டம்**

**பெருமாள் குழு,** தூத்துக்கு

✱ **பஞ்சப் பாட்டு**

இல்லாதவனின் புலம்பலை ஏனம் செய்யும் சொல் இது. சோறு போட வக்கற்ற சமூக அமைப்புக்கு எதிராக தமிழ்க் கவிஞர்கள் வரலாறு முழுவது தமது கோபத்தைப் பலவிதமாகப் பதி செய்துள்ளனர். எனினும் பட்டினியு தொடர்கிறது. போராட்டமும் தொட கிறது. பாட்டும் தொடர்கிறது.

**மையக் கலைக்குழு**
மக்கள் கலை இலக்கியக் கழக

✱ **புரட்சிகரக் கலைநிகழ்ச்சி**

**ம.க.இ.க. கலைக்கு**

மேலும் பல நிகழ்ச்சிகள் உறுதி செ யப்பட்டவுடன் முறையான நிகழ்ச் நிரல் பிரசுரம் விரைவில் வெளிவரும்

**அனைவரும் வருக!**


தொடர்புக்கு:
**காளியப்பன், 1, அண்ணாநகர், சிவாஜி நகர் (வழி), தஞ்சை.**
**தொலைபேசி: 04362/32922**

அன்பார்ந்த வாசகர்களே,

தமிழ் மக்கள் இசைவிழா, தன் பெயருக் ஏற்ப மக்களின் நிதி உதவியைக் கொண்டே நடத்தப்படுகிறது. இதற்குப் புரவலர்க யாரும் இல்லை. ஆண்டுதோறும் விழாவி செல்வாக்கு அதிகரிப்பதைப் போலவே செலவும் அதிகரிக்கிறது. எனவே வாசகர்க தங்களால் இயன்ற அளவு நன்கொடையை திரட்டித்தரக் கோருகிறோம். தொகையை புதிய கலாச்சாரம் அலுவலக முகவரிக்கே அனுப்பலாம்.

நன்றி.


படிப்பகம்



என்னிடம்
சிறிய
நீலவானமொன்று இருந்தது.
ஆக்கிரமிப்பாளர்கள்
அதை என்மீது விழுத்தினர்.

சிறிய
இருண்டநிறக் குருதியாறு ஒன்றும்
தேன்கனவுப் பொதியொன்றும்
என்னிடமிருந்தன.
அவர்கள்
அதையெல்லாம்
கொள்ளையடித்தனர்.

ஆயினும்
அவர்கள் என் தோலை மாற்றி
என் முகத்தைச்
சிதைக்க வந்தபோது
நான்
வெண்பனியும்
இடியொலியும் பூண்டு
என் தாயகத்தைத்
தோளிற் சுமந்து...

துப்பாக்கியின் தெருவில்
இறங்கினேன்.

- றபீக் ஸபி

துருக்கிய குர்திஸ்தான் கவிஞர்

# துப்பாக்கியின் தெரு

ஈழத்து எழுத்தாளர் சி.சிவசேகரம் ஆங்கில வழி தமிழில் மொழிபெயர்த்திருக்கும் இக்கவிதை அவரது *'போரின் முகங்கள்'* கவிதைத் தொகுப்பில் இடம்பெற்றிருக்கிறது.

கீழைக்காற்றின் புதிய வெளியீடு:

**ஆணாதிக்கமும் பெண்ணியமும்**

— பி. இராயகரன்

ஆணாதிக்கத்துக்கு எதிராக மார்க்சியம் போராடவில்லை அல்லது கவனமெடுக்கவில்லை என்று கூறும் மார்க்சியமல்லாத பெண்ணியவாதிகளின் பெண்ணியத்தையும், அதன் பின்னணியில் அரங்கேறும் ஆணாதிக்கச் சலுகைகளையும் இந்நூல் ஆய்வு செய்கின்றது.

பக்கம்: 272 விலை ரூ. 90.00

நூலின் விலையுடன் ரூ. 16 சேர்த்து பணவிடை (M.O.) அனுப்பினால் புத்தகம் அனுப்பி வைக்கப்படும்.




வெளிவந்து விட்டது...

**சமர்**

அரசியல் தத்துவார்த்தப் புரட்சிகர
ஏடு. விலை ரூ. 20

*இந்த இதழில்*

* *தூசு மண்டலமாகும் ஆப்கான், மக்களின் இரத்தத்தால் தணிகிறது*
* *ஏகாதிபத்தியக் கிறித்தவப் புனிதக் கூட்டில் வெரித்தாஸ் வானொலி.*
* *ஈழம்: முசுலீம் மக்கள் மீதான வன்முறையும் அதற்கு எதிரான போராட்டமும்.*

- முற்போக்கு நூல்களுக்கு ஒரு முகவரி -

கீழைக்காற்று வெளியீட்டகம்,
10, அவுலியா சாகிபு தெரு,
எல்லீசு சாலை,
சென்னை - 600 002.
தொ.பேசி: 044-8412367

ஆசிரியரும் வெளியிடுபவரும்: வி.வல்லபேசன், 3, செகந்நாதபுரம் நான்காவது தெரு, சேத்துப்பட்டு, சென்னை - 600 031.
அச்சிடுபவர்: எழில் பிரிண்ட்ஸ், 110, இரண்டாவது மாடி, 63, ஆற்காடு சாலை, சென்னை - 600 024.

PUTHIYA KALACHARAM
(TAMIL MONTHLY)

REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPERS
FOR INDIA UNDER No: 42647/87

Regd. No: TN/Chief PMG - 303/2001

www.padippakam.com


# அர்ஜென்டினா உணவுக் கலகம் :

# அமெரிக்க ஆதிக்கத்திற்கெதிராக ஆர்த்தெழுகிறது ஓர் அடிமை நாடு!













படிப்பகம்